கல்கி



KALKI

17.11.1968

40 காசு

தாயிடமிருந்து மகளுக்கு வரும்
உட்வர்ட்ஸ் அறிவுரை

உங்கள் குழந்தையை ஆரோக்கியமுடன் குதூகலமாக வைத்திருக்க உறுதுணை

உட்வர்ட்ஸ்

கிரைப் வாட்டர்

தலைமுறை தலைமுறையாக புத்திசாலித் தாய்மார்கள் தங்கள் குழந்தைகளுக்குக் கொடுத்து வருவது உட்வர்ட்ஸ் கிரைப் வாட்டர். குடல் வலி, புளிப்பு, உப்புசம், பல்முளைப்புக் கோளாறுகள் ஆகியவற்றுக்கு உடனடி நிவாரணம் தருவது உட்வர்ட்ஸ்.



காத்துக் கொள்வீர்
ண்டிப்புடனே.
எப்போதும் ஒரு புட்டி
உங்கள் கைவசமிருக்கட்டும்




உட்வர்ஸ் கிரைப் வாட்டர்
நூறு ஆண்டுகளுக்கு மேலாக
புத்திசாலித் தாய்மார்களால்
உபயோகிக்கப் பட்டு வருகிறது.

AT. 30 TM



ரசித்துச் சாப்பிடுங்கள்
5 star
காட்பரிஸ் 5 ஸ்டார்
இது இன்சுவை கொண்டது மட்டுமல்ல
போஷாக்குச் சத்தும் நிரம்பியது!
காட்பரீஸின் புத்தம் புதிய புதுமையான சாக்கலேட்
5 ஸ்டார், மூன்று சிறந்த பொருள்கள் சேர்த்துத்
தயாரிக்கப்பட்டிருக்கிறது. காரமல்,
பாலேடு மிகுந்த நூகா, மற்றும் பாலின்
சிறந்த குணங்கள் நிறைந்த மில்க்
சாக்கலேட்தான் அவை. சுவைத்துப்
பார்த்தாலே தெரியுமே. இந்த
சாக்கலேட்டின் அலாதி ருசி;
அற்புத இனிமை!
வாழ்க்கையை இனிமையாக்குவது காட்பரிஸ்!



இது போன்ற அழகான பன்னிரண்டு படங்களை எடுங்கள்
Agfa
க்ளிக்ா
...வாங்கிய நாளன்றே
AGIL
ஆக்பா-கேவார்ட் இந்தியா லிமிடெட்
பம்பாய் - புது டில்லி - கல்கத்தா - சென்னை.



இதோ உங்கள்
வனப்புக்குப் புதிய பூவிதழ்-மென்மை
தருவது புதிய
ஹிமாலயா
புக்கே ஸ்நோ
HIMALAYA
BOUQUET
SNOW
ரோஜா மணமுடனும்
வருகிறது இன்று
லின்டாஸ்-HBS.39-77 TM

கல்கி பொருளடக்கம்

கீலக, கார்த்திகை 2 :: :: நவம்பர் 17

''கல்கி''யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.


மதுவிலக்கு பற்றிக் காங்கிரஸ்
மகாநாட்டில் கடும் விவாதம்
நடைபெற்றது
-செய்தி


முள் கிரீடம்
நிக்ஸன்



தமிழ்த்திருநாடு தன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார்

மலர் 28 □ இதழ் 16

தி. மு. க.வும் காங்கிரஸும்

'சென்னை நகரசபைத் தேர்தல் முடிவு திராவிட முன்னேற்றக் கழகத்துக்குச் சரிவு அல்ல. ஆனால் அது தனது வேலைகளைச் சரி செய்துகொள்ள உதவியாக அமைந்திருக்கிறது' என்று திரு மு. கருணாநிதி அவர்கள் கூறியதாகப் பத்திரிகை அறிக்கைகள் கூறுகின்றன.

கட்சி வேலைகளைச் சரி செய்யவேண்டும் என்னும்போது, அவர் தி. மு. க. வினர் கட்டுப்பாட்டுடன் நடந்துகொள்வதற்குக் கண்டிப்பான முறையில் வகை செய்ய வேண்டும் என்ற பொருளிலேயே கூறி யிருப்பதாகத் தோன்றுகிறது. ஆனால் தி. மு. க. வின் பணியைச் சரி செய்வது இத்துடன் நின்றுவிடாது. கட்சியில் கட்டுப்பாடின்மை ஏற்பட்டால் அதைச் சீர் செய்ய வேண்டியது நல்லது; அது அவசியமே. ஆனால் இது வேண்டாத ஓர் அம்சத்தை விலக்குகிற காரியமே. வேண்டிய ஓர் அம்சத்தைச் செய்து, ஆக்க ரீதியில் சரி செய்ய வேண்டியது இதைவிட அவசியம். தமிழகத்தில் முன்பு இழந்த இடத்தை இப்போது காங்கிரஸ் மீண்டும் பெற முடியாமல் தடுக்க வேண்டுமானால், தி. மு. க வின் கட்டுப்பாடு மட்டும் போதாது. ஆக்க ரீதியில் தி. மு. க. வைச் சரி செய்ய வேண்டிய தேவையும் உள்ளது என்று அதன் தலைவர்கள் உணர வேண்டும்.

ஜனநாயக வெற்றிகள் கழைக் கூத்தாட்டத்தில் ஒரு வகையாகும். இவ்வித வெற்றியால் எல்லாம் சாதகமாகி விட்டதாக நினைத்து, புகழ் மாலைகளின் மீது நிம்மதியாகச் சாய்ந்திருக்கக் கூடாது. பொது மக்களின் உணர்ச்சி எப்படி உள்ளது என்பதில் அனவரதமும் உன்னிப்பாகக் கண் வைத்திருக்க வேண்டும்.

தி. மு. க. முக்கியமாகச் செய்ய வேண்டியது ஒன்றுண்டு. அது தமிழ் நாட்டின் பிரச்னைகளில் ஈடுபடுவதுடன் திருப்தி அடைந்து விடலாகாது. அகில இந்தியப் பிரச்னைகளிலும் அக்கறை கொள்ள வேண்டும். காங்கிரஸ் அகில இந்திய ரீதியில் பல அபாயகரமான தவறுகளைச் செய்து வருகிறது. நாடெங்கிலும் அக் கட்சி அந்தஸ்தை இழந்து வருவதற்கு இதுவே காரணம்.

காங்கிரஸின் கொள்கைகளையும், கம்யூனிஸ்ட்களின் கொள்கைகளையும் பின்பற்றுவதன் மூலம் தானும் அதிக வாக்குப் பெறலாம் என்று தி. மு. க நம்புவதாகத் தோன்றுகிறது. இக் கொள்கைகளை அமல் செய்ததால் தான் காங்கிரஸ் அகில இந்தியாவிலும் ஆதரவை இழக்க நேரிட்டிருக்கிறது என்பதைத் தி. மு. க கவனிக்க வேண்டும். பொது மக்கள் தி. மு. கவிடம் வைத்துள்ள மதிப்பை அக்கட்சி நீடித்துக் காத்துக் கொள்ள விரும்புமேயாகில், பொருளாதாரத் துறையிலும் உற்பத்தி சம்பந்தப்பட்ட விவகாரங்களிலும் காங்கிரஸின் தவறான கொள்கைகளை வன்மையாக எதிர்க்க வேண்டும். இவ்விஷயங்களில் காங்கிரஸின் போக்கையே தி. மு. க. வும் கடைப்பிடித்தால் 'பெரிய பிரச்னைகளில் காங்கிரஸுடன் மாறுபடாததும், ஒரு குறிப்பிட்ட பிரதேசத்தில் மட்டும் அக்கறை உள்ளதுமான தி. மு. க.வை ஆதரித்துக் காங்கிரஸை ஏன் நாம் விட வேண்டும்?' என்றே பொதுமக்களின் கருத்தை உருவாக்கும் அறிவுள்ள தலைவர்கள் எண்ணுவார்கள். கௌரவப் பண்பைக் காட்டுவதில் திரு அண்ணாதுரை பாராட்டுக்குரியவராக விளங்குவதால், அவரது கட்சியும் கண்ணியமான நடத்தைக்கு ஓர் உதாரணமாக விளங்க இயலும். இப்படி நல்ல பேர் எடுப்பதோடு, முக்கியமான அகில இந்தியக் கொள்கைகளில் தி. மு. க. கவனம் கொள்ள வேண்டியது அவசியம். காங்கிரஸ், கம்யூனிஸ்ட் இவர்கள் போகிற வழியிலேயே தாங்களும் கப்பலைச் செலுத்துவது, தமிழகத்தில் காங்கிரஸைப் பதவியிலிருந்து அகற்றுவதற்கு உரிய வழியாகாது.

காங்கிரஸின் ஆளுகையிலுள்ள மத்திய சர்க்காரின் பெர்மிட் - லைசென்ஸ் ஆட்சியின் காரணமாக, மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த பலரும் அவர்களது



மகாத்மாவின் மணிமொழி

முன்காலங்களில் என்னைக் கொல்வதற்கு முயற்சிகள் நடந்திருக்கின்றன. ஆனால் இன்றுவரை ஆண்டவன் நான் இருக்குமாறு செய்துள்ளான். என்னைக் கொல்ல முயன்றவர்கள் தங்கள் காரியத்துக்காகப் பச்சாத்தாபப்பட்டிருக்கிறார்கள். ஆனால், இனியும் எவனோ, என்னை ஓர் அயோக்கியனாகக் கருதி, 'இந்த அயோக்கியனை அகற்ற வேண்டும்' என்ற எண்ணத்தில் என்னைத் துப்பாக்கியால் சுடுவானாகில், அவன் உண்மையான காந்தியைக் கொன்றவனாக மாட்டான்; அவனுக்கு அயோக்கியனாகத் தெரிந்த ஒருவனையே கொன்றவனாவான்.

ஆண்டவன் ஒருவனே என்னைக் காப்பவன். பலவீனமான ஒரு மனிதன் — நாளைக்குத் தன் நிலை என்ன என்றே அறியாத ஒரு மனிதன் — பிறரைக் காப்பதாக நினைப்பது எப்படிப் பொருந்தும்? ஆண்டவனின் பாதுகாப்பில் இருப்பதிலேயே நான் திருப்தி கொள்கிறேன். அவன் காக்கலாம், அல்லது கொல்லலாம். சில சமயங்களில் அவன் கொல்வதும் கூடக் காப்பாற்றுவதற்குத்தான் என்று அறிவேன்.

அபிமானிகளும் இந்திய அரசாங்கத்தின் 'சிறைக் கைதி'களாகி இருப்பதை மறப்பதற்கில்லை. இந்தப் பிரிவினர், மத்திய சர்க்காரில் இன்றளவும் ஆதிக்கம் செலுத்தும் காங்கிரஸுக்கு எதிராகத் தாங்கள் தி. மு. க.வை ஆதரித்தால் என்ன விளைவு ஏற்படக்கூடும் என்பதை எடைபோட்டுப் பார்க்கிறார்கள். இச்சமயத்தில், திரு காமராஜரை நாகர்கோவில் இடைத் தேர்தலில் நிறுத்தி வைத்து, தமிழக வாக்காளர்கள் ராஜ்ய மந்திரி சபையைப் புறக்கணிக்கும் வகையில் அதற்குப் போட்டியான ஒரு தலைமையைத் தில்லியில் ஏற்படுத்த முயலுவதைக் கருத்தில் கொள்ள வேண்டும்.

இந்தியாவிலிருந்து தனித் தமிழகம் பிரிய வேண்டும் என்ற கொள்கையின் மீதே தி. மு. க. பிறந்தது. அதன் பிறகு நீண்ட காலத்துக்குத் தி. மு. க. இலட்சியங்களில் இதுவே முக்கியமான அம்சமாயிருந்தது. ஆனால் பிற்பாடு, திரு அண்ணாதுரை, தமது சொந்தச் சார்பிலும், தம்முடைய கட்சியின் சார்பிலும் தேசப் பிரிவினைக் கருத்தைக் கைவிட்டார். இது சரியான காரியம். இன்று அவர் இந்திய யூனியனுடன் தமிழகம் ஐக்கியப்பட்டே இருக்க வேண்டும் என்ற கருத்தில் எந்தக் காங்கிரஸ்காரருக்கும் பிற்பட்டவர் அல்ல. எனவே இன்று பொருளாதார, நிதி விஷயங்களில் காங்கிரஸ் கருத்தையே தி. மு. க.வும் பின்பற்றினால், தி. மு. க. ஏன் காங்கிரஸுடன் இணைந்து ஐக்கியமாகிவிடக் கூடாது என்ற கேள்வி எழுவது இயற்கையே. மொழிப் பிரச்னையில் மாறுபட்டிருப்பது மட்டும் இதற்குப் போதிய சமாதானமாகாது. மொழி பிரச்னை தீர ஒன்றுக்கு மேற்பட்ட பரிகாரங்கள் இருக்கக் கூடும். எனவே அதில் அபிப்பிராய பேதம் இருப்பதாலேயே, காங்கிரஸுக்கு மாறாக ஒரு கட்சி இயங்க வேண்டியதில்லை. மத்திய — மாநில அரசாங்கங்களுக்கிடையே அதிகாரப் பங்கீடு செய்கையில் ராஜ்ய சர்க்கார்களுக்குக் கூடுதலாக அதிகாரங்கள் வேண்டும் என்று கோருவதும், தனியான கட்சியாயிருப்பதற்குப் போதிய காரணமாகாது. நமக்குப் பிடித்தாலும் பிடிக்காவிட்டாலும் ஒருண்மையைச் சொல்ல வேண்டும்: வள வசதிகளோடு பிரிக்க முடியாமல் இணைந்ததே அதிகார சக்தி. ஆனால் இன்றோ, ராஜ்யங்கள் உயிர் வாழ்வதற்கே தில்லியை எதிர் பார்க்க வேண்டியுள்ளது. போதிய வள வசதிகள் இன்றியே அதிகச் சுயாட்சிப் பொறுப்பு பெறுவதும், இந்த ஆட்சிப் பொறுப்பால் மக்கள் வாழ்வில் பெரிய முன்னேற்றம் காண ஆசைப்படுவதும் நடைமுறைக்கு உதவாது. இவ்விஷயமாக அரசியல் சாஸனம் கூறுவது யாதாயினும், பிரத்தியட்ச நிலையில் தமிழகம் பெறக் கூடிய அதிகாரப் பொறுப்புக்குத் தமிழ் நாட்டின் வள வசதிகளும், தமிழ் மக்களின் வரி கொடுக்கும் சக்தியும் வரம்பு கட்டியுள்ளன.

மேற்சொன்ன என் சிந்தனைகள் காட்டும் தவிர்க்க முடியாத முடிவு இதுவே : தி. மு. க.வைச் சரி செய்வதென்பது, அதன் கட்சிக்காரர்களின் கட்டுப்பாட்டை வளர்ப்பதும், சுயநலத்துக்காகக் கட்சிக்குள்ளே பிளவு உண்டாக்குபவர்களைத் தடுப்பதும் மட்டுமல்ல. தி. மு. க. தலைமையின் உயர்கட்டத்திலும் சரி, அதன் அடிப்படை ஊழியர் மட்டத்திலும் சரி, கொள்கைகளை ஆராய்ந்து புது வடிவம் தருவதே அக்கட்சியைச் சரி செய்வதாகும். இல்லாவிடில், தில்லி சர்க்காரின் பலவித அதிகாரங்களின் துணை கொண்டு தமிழகத்தில் காங்கிரஸ் கட்சி தி. மு. க.வுக்கு எதிராகத் தேர்தல்களில் மேலும் மேலும் முன்னேறக் கூடும்.

சென்னை நகர சபைத் தேர்தலில் தொகுதி ரீதியில் சராசரியாக காங்கிரஸைவிட தி.மு.க. ஐந்நூறு வாக்குகள் அதிகம் பெற்றிருப்பதற்கு மிகுந்த முக்கியத்துவம் தரலாகாது. காங்கிரஸ் கட்சி சராசரியில் (வென்ற இடம் மட்டும் இன்றித் தோற்ற இடங்களிலுமாகக் கணக்குச் செய்து கிடைத்த சராசரியில்) தொகுதிக்கு மூவாயிரம் வாக்குகள்

பெற்றிருப்பதே முக்கியம். காங்கிரஸ் பெற்றுள்ள பொதுஜன ஆதரவு குறித்துத் தீர்க்கமாகச் சிந்தனை செய்து அவசியமான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

சோஷலிஸத்தைத் தம் கொள்கைகளில் சேர்த்துக் கொண்டாலன்றி மக்களிடம் ஆதரவு பெற முடியாது என்று அரசியல்வாதிகள் நினைத்தால், அவர்கள் சோஷலிஸத்தை முக்கியமாகக் கொண்ட காங்கிரஸைச் சட்ட ரீதியில் அகற்றுகிற நம்பிக்கையை விட்டேவிட வேண்டியதுதான். சோஷலிஸத்தைப் பிரகடனம் செய்யும் காங்கிரஸ் இன்று மத்திய ஆட்சியில் அதிகாரம் பெற்றிருப்பதால், மற்ற இடங்களிலும் காங்கிரஸுக்குச் சக்தி தருகிறது. இக்கட்சியை இதே சோஷலிஸத்தைக் கொண்டு மற்றக் கட்சிகள் எப்படி அகற்ற முடியும்? இப்போது பேசப்படும் சோஷலிஸம் வாக்குகளைப் பிடிப்பதற்காகத் தூண்டில் போடப்படும் ஒரு போலியே என்று மக்களை நம்பச் செய்யும் ஆற்றல் அரசியல்வாதிகளுக்கு இருந்தால்தான் நாட்டின் எதிர்கால நலத்தைக் குறித்து நம்பிக்கை கொள்ளலாம்.

(ராஜாஜி 'ஸ்வராஜ்யா'வில் எழுதியது.)

முரார்ஜி வைத்யா

பம்பாய் சுதந்திரக் கட்சித் தலைவரும், தொழில் துறையில் முக்கியஸ்தரும் பொருளாதாரப் பிரமுகருமான திரு முரார்ஜி ஜாதவ்ஜி வைத்யா பொதுக் கூட்டத்தில் பேசி முடித்து உட்கார்ந்ததும் தமது இருக்கையிலேயே மாரடைப்பினால் உயிர் நீத்தார் என்ற அதிர்ச்சி தரும் செய்தியைப் படித்த பலர் கண் கலங்கித் துயரத்தில் ஆழ்ந்தனர். பல தொழிலகங்களை நிறுவி அவற்றைப் பேணி, திறமையுடன் நிர்வகித்துப் புகழ் பெற்றவர் திரு முரார்ஜி வைத்யா. தொழிலதிபர்களின் முக்கியத்துவத்தையும் அவர்களின் சமூகப் பணியையும் பொதுமக்களுக்கும் அரசாங்கத்தினருக்கும் எப்படி அவர் அயராது உணர்த்தி வந்தாரோ, அதே பாங்குடன் தொழிலதிபர்களுக்கும் அவர்களது கடமைகளைப் பற்றி அறிவுரைகள் வழங்கி, அவர்கள் நேர்மை வழியில் செல்லப் பாடுபட்டார். பம்பாயின் பிரதான வர்த்தக சங்கமான இந்திய வர்த்தக சங்கத்தின் காரியதரிசியாக பணியாற்றியவர். அகில இந்திய உற்பத்தியாளர் ஸ்தாபனத்தினை நிறுவியவர். ஆஸ்திரிய நாட்டில் இந்திய கௌரவ ஸ்தானிகராகவும் திரு முரார்ஜி வைத்யா சிறப்புப் பணியாற்றிப் புகழடைந்தவர். காலஞ்சென்ற ஏ. டி. ஷெராப் அவர்களுக்குப் பக்கபலமாக நின்று அவர் நிறுவிய ''சுதந்திரத் தொழில் வளர்ச்சி'' (Forum of Free Enterprise) ஸ்தாபனத்தின் தலைவராகப் போற்றத் தக்க பணி புரிந்துள்ளார் திரு முரார்ஜி வைத்யா. கல்கி, ஸ்வராஜ்யா பத்திரிகைகளின்பால் மிகுந்த அபிமானம் கொண்டிருந்தவர். அவரது திடீர் மரணம் ஏராளமான அவரது நண்பர்களுக்கும், சுதந்திர அபிமானிகளுக்கும், தனியார் தொழில் துறைக்கும் மகத்தான நஷ்டம். அவருடைய குடும்பத்தினருக்கு அநுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.



அட்டைப்பட விளக்கம்

காதல் இன்பம் எது?

காதல் என்பது இன்று நேற்று ஏற்பட்டதல்ல. ஆணும் பெண்ணும் தோன்றிய நாளிலிருந்தே இருந்து வருவதுதான்.

ஆனால் காதல் தோன்றுமிடங்கள், சந்தர்ப்ப சூழ்நிலைகள் இவைதான் மக்களுக்கு என்றும் சுவையூட்டி வந்திருக்கின்றன. அந்தச் சுவையினின்று பெரும் காவியங்கள், நாடகங்கள் ஆகிய இலக்கியங்கள் தோன்றியிருக்கின்றன.

துஷ்யந்த மகாராஜா, கண்வர் ஆசிரமத்தில் எளிய தோற்றத்திலிருந்த சகுந்தலையைக் கண்டு மையல் கொண்டார்.

ஆனால் இன்றைய சமுதாயத்தில் காதல் பிறக்க முன்காலத்திலிருந்ததைவிட எவ்வளவோ சந்தர்ப்ப சூழ்நிலைகள். பஸ் ஸ்டாண்டில், மின்சார வண்டியில், வேலை செய்யும் காரியாலயங்களில், சினிமாத் தியேட்டர்களில், கடற்கரையில் எங்கும் ஆணும் பெண்ணும் சரிநிகர் சமானமாகப் பேசிப் பழக வாய்ப்புக்கள். அப்போதெல்லாம் ஏற்படும் சஞ்சலங்கள் எல்லாம் காதலாகிவிடுமா என்று தீவிரமாக யோசிக்க வேண்டிய நிலை இன்றுள்ள இளம் சமுதாயத்தினருக்கு எழுந்துள்ளது!

அவர்களுக்கு அவ்வைப் பாட்டி கூறிய மொழிகளை நினைவுபடுத்துகிறோம்.

காதலிருவர் கருத்தொருமித்து-ஆதரவு பட்டதே இன்பம்!

அத்தகைய இன்பத்தை இவ்விதம் அட்டையில் கடற் கரை மணலில், படகின் நிழலில் அமர்ந்து உல்லாசமாகக் காதல் பேச்சுக்களில் மூழ்கித் திளைக்கும் காதலர்கள் பெற்றுப் பெருவாழ்வு வாழ்வார்களாக!

ராஜாஜியின் கருத்துக்கள்

ஸ்ரீ நிக்ஸனின் வெற்றி நான் எதிர்பார்த்ததையே உறுதிப்படுத்தி விட்டது. மிகச் சிறிய அளவில் அதிக வாக்குப் பெற்று வெற்றியைச் சாதித்திருக்கிறார். எனினும் ஜனாதிபதி ஜான்ஸன் வியட்நாமில் குண்டு வீச்சை நிறுத்தி வைத்து ஜனநாயகக் கட்சிக்குச் சாதகமான சூழ்நிலை உண்டாக்கியிருந்த சமயத்தில், குடியரசுக் கட்சியினரான ஸ்ரீ நிக்ஸன் வெற்றி பெற்றது பாராட்டுக்குரியது. நிக்ஸன் கிரீடத்தைப் பெற்றிருக்கிறார். ஆனால் இது முட்களாலான கிரீடம். அவரது பளுவான பணியில் வெற்றி காண வாழ்த்துகிறேன்.

ஆசியாவைப் பொறுத்த மட்டில், அமெரிக்கா இக்கண்டத்தின் விவகாரங்களில் ஈடுபடாமல் பின்வாங்கும் போக்கு நிக்ஸன் வென்றதால் மாறிவிடவில்லை. ஆசியா பெரும் குழப்ப நிலையில் உள்ளது. இருளில் ஆழ்ந்துள்ளது. இருள் இருப்பினும் இனி நட்சத்திரங்களைப் பார்ப்போம் என நம்புவோமாக.

* * *

ஜனநாயகக் கட்சியின் சில முக்கியமான தலைவர்களைத் தமது மந்திரி சபையில் சேர்த்துக் கொள்வது பற்றி ஸ்ரீ நிக்ஸன் யோசித்து வருகிறார் என்று செய்திகள் கூறுகின்றன. சட்டசபைப்படி நடக்கும் ஜனநாயகத்தின் அடிப்படைக் கொள்கைகளைச் சீர்திருத்த வேண்டும் என்ற கோணத்தில் பார்க்கும் போது இது மிக முக்கியமான விஷயம். இவ்வாறு செய்யச் செருக்கை வெகுவாக விட்டுவிட வேண்டும். எனவே, மேற்சொன்ன யோசனை காரிய உருவில் வராமலும் போகலாம். ஆயினும் இக்கருத்து சர்வதேசப் பத்திரிகை உலகில் புகுந்திருப்பதே அரசாட்சிக் கலையில் முன்னேற்றத்துக்கு அறிகுறியாகும்.

* * *

சம்பிரதாயமாக வந்த பழக்கவழக்கங்கள் எவ்வளவு சரியானவை என்று நவீனகாலத்து விஞ்ஞான பரிசோதனைகள் உறுதிப்படுத்துவதைக் காண்கையில் விந்தையாக உள்ளது. சென்னை நகரசபை சுகாதார அதிகாரியாகிய டாக்டர் ஏ. ராமசந்திர ராவ் அவர்கள் வேப்பிலைக் கொழுந்து பெரியம்மைக் கிருமிகளை வெகு சக்தியுடன் நாசம் செய்கிறது என்று கண்டு பிடித்திருக்கிறார். 2.5 சதம் வேப்பங் கொழுந்துச் சாறு கலந்த திரவம் ஐந்து நிமிஷத்தில் பெரியம்மை விஷக் கிருமியைக் கொல்கிறது என்று ஆராய்ச்சி சாலைச் சோதனைகளிலிருந்து தெரியவருகிறது. மேலும் பரிசோதனை நடந்து வருகிறது.

* * *

திரு ஸி. என். அண்ணாதுரை நல்லாரோக்கியத்துடன் சென்னைக்குத் திரும்பியிருக்கிறார். அவரை வரவேற்க மிகுந்த மகிழ்ச்சியாக உள்ளது.

அவர் வைத்தியர்கள் கூறியுள்ளபடி சாப்பாட்டுப் பழக்கங்களைப் பின்பற்றி, மருத்துவ ஆலோசனைப்படி ஓய்வு கொள்வார் என நம்புகிறேன். அவரைத் தலைவராகக் கொண்ட உற்சாகிகள் அவர் இவ்வாறு செய்ய உதவுவர் எனவும் நம்புகிறேன். தங்களது அன்புத் தலைவர் தேக சுகம் பெறுவதைச் சுலபமாக்க வேண்டிய பெரிய கடமை அவரது சகாக்களைச் சார்ந்துள்ளது.

* * *


மொழிப் பிரச்னை குறித்து ஆசாரிய துளஸி அவர்கள் நவம்பர் 5ந் தேதி நிருபர் கூட்டத்தில் கூறியது கவனத்துக்குரியது. இவ்விஷயத்தை அரசியல் பிரச்னையாக்கக் கூடாது; அறிஞர்களும், கல்வித் துறையினரும், நிபுணருமே முடிவு செய்ய வேண்டும் என்று சொல்லியுள்ளார்.

இந்தியாவுக்கு ஒரு மக்கள் மொழி தேவை என்று வலியுறுத்திய ஆசாரிய துளஸி அவர்கள், ஹிந்தி அத்தகைய மக்கள் மொழியாயிருக்கலாம் என்ற தம் கருத்தை வெளியிட்டுள்ளார். மக்கள் மொழி என்பது தேசிய வாழ்வு, வர்த்தகம் இவற்றின் மாறுபடுகிற சூழ்நிலையைப் பொறுத்தே பரிணாமம் பெற வேண்டும் என்றும், அதைப் பலாத்காரமாக உண்டாக்க முடியாது என்றும் ஹிந்தி மொழியரான ஆசாரியருக்கு மிகுந்த மரியாதையுடன் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஹிந்தியில் அக்கறை கொண்டவர்கள் போரில் வெற்றி பெற்றவர்கள் போல் நடந்து கொள்ளாமல் பொறுமையோடு இருந்திருப்பின், மக்கள் மொழி இயற்கையாக, உரசலில்லாமல் பரிணமிப்பது சுலபமாயிருந்திருக்கும். இப்போதேனும் ஆங்கிலத்தை அகற்றி ஹிந்தியைப் பலாத்காரமாக அகில இந்திய ஆட்சி மொழியாக்கும் யத்தனத்தை விட்டால்கூட, அடுத்த சில ஆண்டுகளுக்குப் பின் ராஜ்யங்களிடையே வர்த்தகம், கல்வித்துறை, பொதுப் பணி முதலியவற்றில் பரஸ்பரத் தொடர்பு வளர்ந்து, ஆசாரிய துளஸி நினைப்பது போன்ற மக்கள் மொழி ஏற்பட வாய்ப்பு உண்டாகும். மிகவும் நியாயமாக, விவேகமாக ஆசாரிய துளஸி கூறினார்: "எந்த மொழியிடமும் மக்கள் விசேஷப் பற்று வைக்காவிடில் மொழிப் பிரச்னை என்கிற ஒன்று இராது. மொழி என்பது பிறருடன் தொடர்பு கொள்ள ஒரு கருவிதான்."

ஆசாரிய துளசி தமது அணுவிரத இயக்கத்தின் இலட்சியங்களை விளக்கியிருக்கிறார். தனிமனிதர்களின் நடத்தையில் தூய்மை வேண்டும், நெறியில் நேர்மை வேண்டும், வாய்மை வேண்டும் என்கிறார். இது ஜைன மதத்துடன் மட்டும் சம்பந்தப்பட்ட இயக்கமல்ல. எல்லா மதஸ்தர்களும் இதில் சேர அழைக்கப்படுகின்றனர். வாஸ்தவத்தில் பழைய, புதிய மதங்கள் யாவுமே தூய்மை, நேர்மை, வாய்மை இவற்றைப் போதிக்கத்தான் செய்கின்றன. எல்லா மதத்தைச் சேர்ந்தவர்களிடையேயும் இந்தப் பண்புகளைக் கொண்ட உதாரண புருஷர்கள் நமக்குத் தேவை. அணுவளவே உள்ள குறிப்பிட்ட நெறியைப் பின்பற்றுவதாக விரதம் எடுத்துக்கொள்வதைவிட — அல்லது பெரிய அளவில் விரதம் எடுத்துக் கொள்வதைவிட — ஏற்கெனவே உள்ள மதங்களில் உதாரண புருஷர்கள் தோன்றுவதே அவசியமாகும். சிறிய, பெரிய விரதங்கள் எடுத்துக் கொண்டால் அவையே ஒரு புதிய மதமாகிவிடக்கூடும்!



இறைவன் அருளாலும், பெரியோரின் நல்லாசியாலும், மக்களின் அன்பு பலத்தாலும், மருத்துவ நிபுணர்களின் திறனாலும் தமிழக முதன்மந்திரி திரு அண்ணாதுரை அவர்கள் அமெரிக்காவில் புற்றுநோய்க்காக நல்ல முறையில் ரணசிகிச்சை பெற்று, சென்ற ஆறாம் தேதி சென்னை திரும்பியபோது சொல்லொணாப்பெருவகையுடன் அவரைத் தமிழகம் வரவேற்றது. திரு அண்ணாதுரை அவர்கள் தேவையான அளவு ஓய்வுகொண்டு, பூரண உடல் நலம் பெற்றுத் தாய்த்திருநாட்டுக்குச் சீரிய தொண்டு புரிய ஆண்டவனை வேண்டுகிறோம்.



தவத்திரு ரங்கநாதானந்த ஸ்வாமிகள் வேதாந்த தூதுவராக அமெரிக்க ஐக்கிய நாடுகளில் சொற்பொழிவுகள் ஆற்றி வருவது அனைவரும் அறிந்த விஷயம். அவரது விஜயம் குறித்த செயிண்ட் லூயிஸிலிருந்தும், நியூ யார்க்கிலிருந்தும் இரண்டு நேயர்கள் எழுதுகிறார்கள்.

அமெரிக்காவில் ஆன்மிக தூதர்

அக்டோபர் 3ந் தேதி ஸ்வாமி ரங்கநாதானந்தர் செயிண்ட் லூயிஸ் நகருக்கு வருகை புரிந்து அங்கு உள்ள வேதாந்த சங்கத்தின் பிரார்த்தனைக் கூடப் புதிய பகுதியைத் திறந்து வைத்தார்கள். ஸ்வாமி ஸத்பிரகாசாநந்தர் அவர்கள், அரும்பாடு பட்டு முப்பத்தைந்து ஆண்டுகளாக இந்த வேதாந்த சங்கத்தை வளர்த்தது மட்டுமின்றி மற்றும் பல நகரங்களில் வேதாந்த சங்கங்கள் தோன்ற அடிகோலியிருக்கிறார். 4ந் தேதி யன்று ஸ்வாமி ரங்கநாதானந்தர் அவர்களின் மேற்பார்வையில் ஸான்பிரான்ஸிஸ்கோ வேதாந்த சங்கத்தைச் சார்ந்த ஸ்வாமி சிரத்தாநந்தர் அவர்கள் வேதம் ஓத, சிகாகோ வேதாந்த சங்கத் தலைவரான ஸ்வாமி பாஷ்யாநந்தர் அவர்கள் ஹோமம் செய்தார்கள். நூற்றுக்கும் மேற்பட்ட அமெரிக்கர்களும், இந்தியர்களும் வந்திருந்தனர். வந்த அனைவருக்கும் இந்திய உணவு அ க்கப்பட்டது.

அன்று இரவு எட்டு மணிக்கு ஸ்வாமி ரங்கநாதானந்தர் அவர்களுக்கு ஒரு வரவேற்பு அளிக்கப்பட்டது. அப்போது ஸ்வாமிஜி ஆற்றிய உரை உள்ளத்தை நெகிழ வைத்தது. கேட்டவர் மனத்திலே, வேதாந்தத்தின் கருப் பொருளை வேரூன்ற வைத்தது.

அக்டோபர் 6ந் தேதி ஞாயிறு காலை நடந்த பொதுக் கூட்டத்தில் எல்லா ஸ்வாமிகளும் சொற்பொழிவாற்றினார்கள். ஸ்வாமி ரங்கநாதானந்தர் அவர்கள் ''மதமும் விஞ்ஞானமும்'' என்பது பற்றிப் பேசுகையில், இரண்டுக்கும் உள்ள இணைப்பினை நன்கு எடுத்துக் காட்டினார்கள். அவருடைய சொல்லாற்றலும், கருத்துச் செறிவும், கேட்பவர் உள்ளங்களைப் பரவசமாக்கின.

மேற் சொன்ன நிகழ்ச்சிகளில் ஸ்வாமி பாஷ்யாநந்தர், ஸ்வாமி சிரத்தாநந்தர், ஸ்ரீமதி வத்ஸலா ரங்கராஜன், திரு ரவீந்திர நாத் பட்டாசார்யா இவர்களோடு ஓர் அமெரிக்கப் பெண்மணியும் பக்திப் பாடல்களைப் பாடினார்.

கடந்த இரண்டு மாதங்களில் ஸ்வாமி களால், சுமார் அறுபத்தைந்து சொற்பொழிவுகள் இந்த நாட்டிலும், மற்றும் அருகில் உள்ள நாடுகளிலும் நிகழ்த்தப் பட்டுள்ளன.


செயின்ட் லூயிஸ்
14–10–1968 **ஏ. வி. ரங்கராஜன்**


சமீபத்தில் ஸ்வாமி ரங்கநாதாநந்தருக்கு இங்குள்ள பாரதி சங்கத்தினர் இந்திய தூதராலயத்தில் வரவேற்பு அளித்தனர். தூதராலயத்தைச் சேர்ந்த ஸ்ரீ டி. ஹெஜ்மாடி தலைமை வகித்தார். கூட்டத்துக்கு வந்திருந்த அனைவரும் சங்கம் நடத்திய நிகழ்ச்சிகளில் இதுவே தலைசிறந்தது என்றனர். முதலில் பத்து மொழிகளில் ஸ்ரீமதி ஸரோஜா பக்திப் பாடல்கள் பாடினார். நான் அதற்கு மிருதங்கம் வாசித்தேன். ''ஆன்மிக வாழ்வும் இயந்திரத் தொழில் சகாப்தமும்'' என்பது பற்றி ஸ்வாமிஜி சுமார் ஒன்றரை மணி நேரம் சொற்பெருக்காற்றி, வந்திருந்தோர் அனைவரின் இதயங்களையும் கொள்ளை கொண்டார். அதன் பிறகு சுமார் ஒரு மணி நேரம் கேள்விகளுக்குப் பதிலளித்தார். இது உயிர்த் துடிப்புடன் விறுவிறுப்பாக விளங்கியது.

நியூயார்க்கிலுள்ள வேதாந்த சங்கம் தான் அமெரிக்காவிலேயே மிகப் பழையது. இதிலும் ஸ்வாமிஜி அரிய உரை நிகழ்த்தினார்.


நியூயார்க் **வி. கே. விசுவநாதன்**
15–10–68 (பாரதி சங்கத் தலைவர்)

நியூயார்க் பாரதி சங்கம் சுவாமிஜிக்கு அளித்த வரவேற்பின்போது.






திருமுறை கண்டவன்



திருவிழா கொண்டனன்

சென்ற அக்டோபர் முப்பத்தோராம் தேதி அதிகாலையிலிருந்தே, தஞ்சைப் பெரிய கோவிலுக்குள் ஆண்களும் பெண்களும் சிறுவர்களும் சிறுமியர்களுமாய்ச் சென்று கொண்டிருந்தார்கள். காலை ஒன்பது மணிக்குத் தொடங்கிய மகாபிஷேகம், மூன்று நான்கு சிவாசாரியர்கள் கை சளைக்காது, தொடர்ந்து இடைவிடாது பெருமுழுக்கு ஆட்டியும் பிற்பகல் இரண்டு மணிக்குத்தான் நிறைவேறியது. அன்று பெருவுடையான் உடல் குளிர்ந்திருக்கும்! பூக்குன்றில் மறைந்திருந்த அவனை, நெற்றி முப்பட்டையாலும், திருக்கண்களாலும் மட்டுமே இனம் கண்டு கொண்ட பக்தர்கள் மனமும் குளிர்ந்திருக்கும். கம்பன் புகழ் பாடிய வாயால், தென்னாடுடைய சிவனைப் போற்றியும் ராஜராஜன் திருவடிகளை வாழ்த்தியும் மகிழ்ந்த திரு சா. கணேசன், சுமார் லட்சம் பேர் அன்று ஆண்டவனைத் தரிசித்ததாகக் கணக்குக் கூறினார். இருக்கும்.















பொன்னியின் செல்வனான முதலாம் ராஜராஜன், கி. பி. 985 முதல் கி. பி. 1014 வரை தஞ்சையில் செங்கோல் ஓச்சியவன். அவனுக்கு முப்பத்தைந்து பெயர்கள் உண்டு. எம்பெருமான் திருவடிகளைச் சிரத்தில் தாங்குபவன் என்று பொருள்படும் 'சிவபாதசேகரன்' என்னும் பெயரினையும், 'திருமுறை கண்ட சோழன்' என்னும் பெயரினையுமே அவன் சிறப்பாகக் கருதினான். தான் பிறந்த ஐப்பசி சதயத் திருநாளில், அரண்மனையில் அவன் விழாக் கொண்டாடினானோ இல்லையோ அன்றைய தினம் பெருவுடையானுக்குப் பெருமுழுக்காட்டி மகிழ்ந்தான்.

சமயப் பணியாலும் கலைப் பணியாலும் வீரச் செயல்களாலும் சிறந்து விளங்கிய, திருமுறை கண்ட சோழனின் ஐப்பசி சதய நாள், ஆண்டுதோறும் யாரும் அறியாவண்ணம் பெரிய கோவிலில் நடைபெற்று வருகிறது! 'பெரிய கோவில், பெரிய நந்தி, பெரிய இலிங்கம் — இவற்றைச் சமைத்தவனுக்குப் பெரிய விழாவன்றோ கொண்டாட வேண்டும்!' என்று எண்ணினார் சித்தத்தைச் சிவன்பால் வைத்த சிங்காரவேல் — அறநிலையத் துணை ஆணையர். தம்பிக்கு உதவாத அண்ணன் இருப்பாரா? எனவே சிங்காரவேலர் கேட்டுக் கொண்டதும், முழு ஒத்துழைப்பையும் நல்கினார், திரு சா. கணேசன்.

அக்டோபர் முப்பதாம் தேதி யன்று 'திருமுறை விழா'. பெரிய கோவிலின் மிகப் பரந்த திருச்சுற்றில் மாபெரும் 'அருள் மொழி அரங்க'க் கொட்டகை அமைக்கப்பட்டிருந்தது. ராஜராஜனின் இயற்பெயர் அருள்மொழி. அவன் காலத்தைப் போலவே, தமிழ் நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் வந்திருந்த ஓதுவா மூர்த்திகள் நாற்பத்தெண்மர் திருமுறை பாராயணம் செய்ய, திருமுறைச் சுவடிகள் வீதிவலமாக அரங்கத்துக்குக் கொண்டு வரப்பட்டன. திருப்பனந்தாள் காசிவாசி ஸ்ரீலஸ்ரீ அருள்நந்தித் தம்பிரான் அவர்கள் திருவைந்தெழுத்தின் பெருமைகளைச் சுருங்கக் கூறி விளங்க வைத்தார். மகா சன்னிதானத்தின் விருப்பப்படி குழுமியிருந்தோர் எழுப்பிய 'ஓம் நமசிவாய' ஒலி, நிச்சயம் கைலாயத்தை எட்டியிருக்கும். அவர்கள் தொடங்கி வைத்தது திருமுறைப் பாராயண நிகழ்ச்சியை.

அன்று மாலை விழா ஆரம்பத்திலேயே களைகட்டிவிட்டது. கடலனைய கூட்டம்.

திருவாவடுதுறை மகா சன்னிதானம் அவர்கள் மேடையில் அமர்ந்திருந்தார்கள். அவர்கள் சார்பில் ஆதீனத்தைச் சேர்ந்த வித்துவான் அருளுரையைப் படித்து வழங்கினார். 'திருவையாற்று உற்சவம் போல எல்லா ஓதுவார்களும் கடமையாக எண்ணி, கைம்மாறு கருதாமல் ஆண்டுதோறும் ஐப்பசி சதயத்தைக் கொண்டாட வேண்டும்' என்று கேட்டுக் கொண்டார் திரு சிங்காரவேலர். 'நால்வர் சொற்



1. ரிஷபவாகனம் வீதிவலம் வந்த பின்பு. 2. பொற்குன்றம் உடைய பெருவுடையான், பூங்குன்றம் உடையாள் ஆன திருக்காட்சி. 3. திருப்பனந்தாள் சுவாமிகள். 4. தருமபுரம் சுவாமிகள். 5. திருவாவடுதுறை சுவாமிகள். 6. டி. எம். நாராயணசுவாமி பிள்ளை. 7. சா. கணேசன். 8. திருமுறை யானைகளின் மீது வீதிவலம் வருதல். 9. பெருவுடையார் சன்னதியில் அறநிலைய அமைச்சருக்குப் பரிவட்ட மரியாதை. ஆணையர், துணை ஆணையரையும் காணலாம்.

கோயில் இல்லாவிடில் இந்தக் கற்கோயில் எங்கே? அருள் மொழி பொருள் இல்லாமலே தழைக்கும். மருள்மொழி எத்தனை சப்பைக் கட்டுக் கட்டினாலும் நில்லாது. மைவைத்த கண்டன் நெறியல்லால், பிற நெறி காணா அரசு சோழ அரசு' என்றார் தருமை ஆதீன சோமசுந்தர தம்பிரான் சுவாமிகள். பேரூர் சாந்தலிங்க மடத்து அடிகள், 'தாஜ்மகல் போன்ற ஒரு கட்டடத்தை எழுப்பாமல், பெருங் கோயில் எடுப்பித்ததற்கு அடிப்படை ராஜராஜனின் ஆழ்ந்த சமயப் பற்றே' என்று உரைத்தார். கௌமார மடம் சுவாமிகள் 'இதுவரை ராஜராஜனுக்கு விழா எடுக்காதது, நம் குறையே' என்று பேசினார்.

'நடையை மெய்யென்று நாத்திகம் பேசாதீர்; படைகள் போல் வரும் பஞ்ச மா பூதங்கள்! திருமுறை கேட்கக் கேட்க, மன மலம் அகலும்; அகன்றதும், இறைவன் அங்கே வந்து எழுந்தருளுவான். வாழ்க அந்தணர் எனத் தொடங்கும் பாடலைத் தவிர வேறு நாட்டுப் பாடல் எதற்கு?' எனக் கூறினார் திரு டி. எம். நாராயணசாமி பிள்ளை. 'இது சைவத் திருவிழா, தமிழ்த் திருவிழா, இந்தியத் திருவிழா என்று நீங்கள் கூறினால், இது உலகத் திருவிழா என்று நான் கூறுவேன்' என்றியம்பினார் திரு தெ. பொ. மீ.

திருமுறைச் சொற்பொழிவுகளுக்காக வந்த நால்வரில் முதல் மூவரும் பெரும்பாலும் ராஜராஜனின் சரித்திரப் பின்னணியையே பேசினார்கள். கடைசியாக வந்த திரு கே.எம். பாலசுப்ரமணியம், 'நால்வருக்குப் பின் ராஜ ராஜன்தான் மிகச் சிறந்த சைவர்; மற்றவரெல்லாம் சைபர்' என்றார்!

மறுநாள் ஐப்பசி சதய விழா. காலையில் ராஜராஜனே வியந்து போற்றும் வண்ணம் மகா அபிஷேகம் என்று பொருத்தமான பெயருடைய அபிஷேகம் கோவிலிலுள்ள எல்லா மூர்த்தங்களுக்கும் நடைபெற்றது. பெருவுடையான் அன்று பூவுடையான் ஆனான்.

மாலையில் நடந்த சதயவிழாப் பேரவையின் தொடக்கவுரை திரு சா. கணேசன் அவர்களுடையது. 'சிறியன சிந்தியாத ராஜராஜன் ஆயிரம் ஆண்டுகளுக்குப் பின்னால் தனக்கு விழா எடுப்பார்களா என்பதைப் பற்றி எண்ணியிருப்பானோ, மாட்டானோ? ஆனால் நெடுஞ்செழியன் தலைமையில் நடைபெறும் என்று நிச்சயம் எண்ணியிருக்க மாட்டான்' என்று அவர் இரு பொருள்படக் கூறியதும் தலைமைதாங்கிய அமைச்சர் மாண்புமிகு இரா. நெடுஞ்செழியனே கைதட்டினார்.

மாவட்டத் தலைமை அதிகாரிகள், சிறந்த தமிழ் அறிஞர்கள், தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் ஆகியோரது உரைகளுக்குப் பின் தமிழக அறநிலையப் பாதுகாப்பு அமைச்சர் பேச எழுந்தார். மேடை எதிரே வெள்ளம் போல் இருபதாயிரம் மக்கள். எல்லாச் செவிகளும் நிமிர்ந்தன. கூட்டத்தில் தம்பிகள் இருந்தனர். சைவத் தவநெறிச் சீலர்களும் இருந்தனர். அமைச்சர் என்ன பேசுவாரோ?

ஏறத்தாழ ஒரு மணி நேரம் பேசினார், அமைச்சர். ஆனால் கூட்டத்தில் எந்தச் சிறு உள்ளமேனும் புண்பட்டிருக்க வேண்டுமே? இல்லை! அதுதான் நாவலரின் சிறப்பு! உடம்பு முழுவதும் விளக்கெண்ணெய் தேய்த்துக் கொண்டவன் பிடிக்கு அகப்படுவதேபோல் தோன்றி, தப்பிச் சென்றுவிடுவதைப் போல, எந்தக் கொள்கையாளர் பிடியிலும் அகப்படாமல் தப்பித்துக் கொண்டு போனார், அமைச்சர். 'நான் முன்பே கூறியிருக்கிறேன்: நெடுஞ்செழியன் வேறு, அறநிலைய அமைச்சர் வேறு. சம்பிரதாயப்படி, மரபுப்படி ஆன்றோர், சான்றோர் கூற்றுப்படி கோவில் காரியங்கள் நடைபெற வேண்டும் என்பதே என் விருப்பம். அதில் நான் தலையிட மாட்டேன். ....ராஜ ராஜன் விழாவை ஆண்டுதோறும் நடத்துவதோடு, அவனுக்கு ஏற்ற மைந்தனாக விளங்கிய ராஜேந்திரன் விழாவையும் கங்கை கொண்ட சோழபுரத்தில் கொண்டாடும் சாத்தியக்கூறுகளை ஆராயும்படி ஆணையரிடம் கூறி யிருக்கிறேன்' என்று அமைச்சர் கூறியதும், 'இவரன்றோ உண்மைச் சமய நெறியாளர்' என்று நல்லோர் உள்ளங்கள் வாழ்த்தின.


மறுநாள், 'இராஜராஜனின் விஞ்சிய புகழுக்குக் காரணம், சமயப் பணியா, கலைப் பணியா?' என்ற பட்டி மண்டபத்தை புலவர் திரு முருகையன் எம். எல். ஏ. தொடங்கி வைத்தார். நடுநிலைமை தவறாத நடுவர் திரு கி. வா. ஜகந்நாதன், 'கலைப் பணியே' என்று தீர்ப்பு வழங்கி, எல்லார் உள்ளங்களையும் எதிரொலித்தார்.

ஈடும் எடுப்புமற்ற முறையில் விழாவை அமைத்த குழுவினரை எவ்வளவு பாராட்டினாலும் தகும். மாவட்ட ஆட்சித் தலைவர் திரு வி. ஜி. ரங்கபாஷ்யம், அறநிலைய ஆணையர் திரு ஏ. ராதாகிருஷ்ணன் ஆகியோர் பெருந்தொண்டாற்றி யிருக்கிறார்கள்.

உரைகள் நிகழ்ந்தபோது, 'திருவம்பலவன் கோயிலில், மூவர் இலச்சினையுடன் பூட்டிய அறையில் இருந்த திருமுறைகளை ராஜ ராஜன் தந்திரம் செய்து வெளிக் கொணர்ந்தான். அறையிலே சிலர் சூழ்ச்சி செய்து அடைத்து வைத்திருந்தனர். அந்த கைய சூழ்ச்சிகள் பல இன்றும் நடைபெறுகின்றன. இனி, நாம் பொறுக்கமாட்டோம். வீறுகொண்டு எழுவோம்; ஏன், தேவைப்பட்டால் போராட்டமே நிகழ்த்துவோம்' என்று பேசிய பேச்சு, கைதட்டலை அப்போது வாங்கித் தந்திருக்கலாம்.

வரலாற்றை யாரும் மறைக்க முடியாது. ஆனால், வரலாற்றின் ஒரு குறிப்பிட்ட பகுதியைப் பலவந்தமாகப் பெயர்த்து மக்கள் மன உணர்ச்சியைத் தூண்டுவது நீண்டகால நோக்கில் நற்பயனை விளைவிக்காது. திருமுறை விழாவின் நோக்கம் சைவர்களை நெறிப்படுத்துவது; உணர்ச்சியைத் தூண்டி, பகைமையை வித்திடுவது அன்று. அன்பே சிவம்; வன்மம் அன்று.

திருவாவடுதுறை ஆதீனகர்த்தர், விழாக் குழுவினர் சிலருக்கு விலைமிக்க பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார்கள். ஆனால், பொதுமக்களோ விலை மதிக்க முடியாத நற்சொல்லாடைகளை மானசிகமாகப் போர்த்தி மகிழ்ந்தார்கள். —டி. எஸ். கே.



16



தவளை இளவரசி


ஓர் ஊரில் ஒரு ராஜகுமாரன் இருந்தான். அவனுக்கு அப்பா அம்மா கிடையாது. மாமாதான் அவனுக்காக அரசாங்கப் பொறுப்புக்களை ஏற்று நடத்தி வந்தார். ஆரம்பத்தில் அவர் நல்லவராகத்தான் இருந்தார். ஆனால் நாளாக ஆக அரச போகமும் ஆனந்த வாழ்வும் அவரைக் கெட்டவராக்கி விட்டன. இளவரசனை சிங்காதனம் ஏறுவதற்கு ஏற்றவனாக அவர் வளர்க்கவில்லை. அவனுக்கு உரிய கலைகளைக் கற்பிக்கவில்லை. ஆகவே இளவரசன் சுந்தரகுமாரன் பட்டம் சூட்டிக் கொள்ளத் தக்க வயது வந்தும் அவன் அரசாட்சியை ஏற்கத் தகுதி பெறவில்லை என்று தானே ஆட்சி செலுத்தி வரலானார். இளவரசன் சுந்தரன் ரொம்ப நல்லவன். மாமா சூழ்ச்சி செய்கிறார் என்று நினைக்கவில்லை. ஆனால் மற்றவர்களும் அப்படி இருப்பார்களா ? இளவரசனுக்குப் பட்டம் கட்ட வேண்டும் என்று வற்புறுத்தினார்கள்.

மாமா அரசாங்க அதிகாரிகளைப் பகைத்துக் கொள்ள விரும்பவில்லை. ஆனால் சுந்தரனுக்குப் பட்டம் கட்டவும் மனமில்லை. சூழ்ச்சி செய்யத் திட்டமிட்டார். ''சுந்தரா! சிங்காதனத்தில் உட்கார நீ சகல கலைகளும் கற்றவனாக இருக்க வேண்டும். ஆகவே, இதோ, இந்தப் பஞ்சப் பொதி இருக்கிறது பார். இதிலிருந்து நூல் நூற்று அற்புதமான ஆடை நெய்து கொண்டு வந்து எனக்குக் காட்டு. உடனே உனக்குப் பட்டம் கட்டி விடுகிறேன்'' என்றார். சுந்தரன் பஞ்சு மூட்டையுடன் ராஜ்யத்தை விட்டு வெளிக் கிளம்பினான். அவனுக்கு நூல் நூற்கவே தெரியாது. தான் எதையுமே கற்கவில்லையே என்று வேதனையோடு கானகத்தின் நடுவிலிருந்த ஒரு மடுக் கரையில் உட்கார்ந்திருந்தான். அப்போது அந்த மடுவிலிருந்து 'சளக்' என்று ஒரு பெரிய தவளை வெளிவந்தது. ராஜகுமாரனின் துக்கத்தைக் கேட்டறிந்ததும் 'கவலைப்படாதே' என்று கூறி அவனிடமிருந்த பஞ்சு மூட்டையை வாங்கிக் கொண்டு நீரில் மூழ்கி மறைந்தது. இளவரசன் அன்று இரவை அந்த மடுக்கரையிலேயே கழித்தான். மறு நாள் காலை தவளை அற்புதமான வேலைப்பாடமைந்த ஒரு சால்வையைக் கொண்டு வந்து அவன் முன் வைத்தது. இளவரசனும் சந்தோஷத்துடன் அதை எடுத்துக் கொண்டு அரண்மனைக்குத் திரும்பினான். மாமாவுக்கு அதைக் கண்டதும் வியப்புத் தாங்கவில்லை. அத்தனை அழகிய வேலைப்பாடமைந்த துணியை அவர் கண்டதே இல்லை. ஆனால் அவனுக்குப் பட்டங்கட்ட அவருக்கு விருப்பமில்லை. ஆகவே, 'சுந்தரா! பட்டங் கட்டிக் கொள்ள நீ மிருகங்களை யெல்லாம் பழக்கும் கலையைக் கற்றவனாக இருக்க வேணும். இதோ இந்த நாய்க் குட்டியை ஆச்சரியமான வேலைகளையெல்லாம் செய்யும் படி பழக்கிக் கொண்டு வா'' என்று கூறி அனுப்பினார். பாவம், சுந்தரன், மறுபடியும் அந்த மடுவை நோக்கிப் போவதைத் தவிர அவனுக்கு வேறு ஏதும் தெரியவில்லை. தவளையும் நாய்க் குட்டியைக் கொண்டு போய் இரண்டு நாளில் திருப்பிக் கொண்டு வந்தது. இளவரசன் அதைத் தன் மாமாவின் முன்னால் கொண்டு விட்டதும் சபையோரெல்லாம் வியப்பும் திகைப்பும் அடையும் படி அந்தக் குட்டி நாய் பலவித வித்தைகளைச் செய்தது. மாமாவுக்குத் தர்மசங்கடமாகி விட்டது. மூன்றாவது முறையாகச் சூழ்ச்சி செய்தார், ''சுந்தரா! பட்டமகிஷி இல்லாமல் சிங்காதனமேறுவது முறையல்ல. ஒப்பற்றதோர் அழகியை உன் மனைவியாக்கிக் கொண்டு வா, போ!'' என்று அனுப்பினார்.

சுந்தரகுமாரன் வேறு எங்கு போவான் ? தவளை அவன் கண்ணீரைத் துடைத்துக் காரணத்தைக் கேட்ட போது, ''எனக்கு ஓர் அழகிய மனைவி வேண்டும். என்னை மணக்க எந்த அரச குமாரி வருவாள் ?'' என்றான் இளவரசன்.

''என்னை ஏற்றுக் கொள்ளுகிறாயா, உன் மனைவியாக ? நான் தவளை உலகத்து இளவரசிதான்!'' என்று கேட்டது தவளை.

''உன்னையா ? ஒரு தவளையை மணந்து கொண்டு நான் என்ன செய்ய ?'' என்றான் இளவரசன்.



"என்னை மணக்கச் சம்மதமா, இல்லையா ?" என்று கேட்டது தவளை.

"எனக்கு நீ எத்தனையோ உதவி செய்திருக்கிறாய். உன்னை நிராகரிக்க எனக்கு விருப்பமில்லை" என்றான் இளவரசன். தவளை இளவரசி தண்ணீருக்குள் மூழ்கிச் சற்றைக்கெல்லாம் அலங்காரம் செய்து கொண்டு ஒரு சின்னஞ் சிறிய கோச்சு வண்டியிலே நீரிலிருந்து வெளிப்பட்டது. அந்த வண்டியை இத்தனூண்டு குதிரைகள் இரண்டு இழுத்துக் கொண்டு ஓடத் தயாராக இருந்தன. "ம், வண்டியில் ஏறி என் அருகில் வந்து உட்கார்ந்து கொள்" என்றது தவளை.

இளவரசன் வண்டியில் ஏறி அதனருகில் அமர்ந்து கொண்டான். தவளை சவுக்கைச் சொடுக்கியதும் அந்த விநோத வண்டி நகரத்தை நோக்கிக் கிளம்பியது. வழியில் மூன்று விகார உருவமுள்ள கிழவிகள் வசித்து வந்தார்கள். ஒருத்தி பிறவிக் குருடு. மற்றொருத்திக்குக் கூன் முதுகு. மூன்றுமவளுக்குத் தொண்டையில் எப்போதோ சிக்கிக் கொண்ட ஓர் எலும்பு வெளி வராமல் அவஸ்தைப் பட்டுக் கொண்டிருந்தாள். இவர்கள் மூவரும் உண்மையில் மூன்று வன தேவதைகள். இவர்களை இந்த நிலைக்கு ஆக்கியிருந்தாள் ஒரு மந்திரக்காரி.

தவளை வண்டியோட்டி வர ஓர் இளவரசன் அதில் சவாரி செய்து வரும் அதிசயத்தைக் கண்ட மூன்று கிழவிகளாலும் சிரிப்பை அடக்க முடியவில்லை. உடல் குலுங்கச் சிரித்தார்கள். அந்தச் சிரிப்பு குருட்டுக் கிழவியின் விழிகளுக்கு ஒளியைக் கொடுத்தது. கூன் மறைந்தது இன்னொரு கிழவிக்கு. தொண்டையில் சிக்கி இருந்த எலும்பு தெறித்து விழுந்தது மூன்றுமவளுக்கு. அதே சமயம் மூவர் மீதிருந்த மந்திர சக்தி பயனறுப் போக மூன்று அழகிய வன தேவதைகளாக மாறினார்கள் கிழவிகள். தங்களுக்குச் சாப விமோசனமளித்த தவளைக்குத் தாங்கள் ஏதாவது செய்ய நினைத்தார்கள் தேவதைகள். ஒரு தேவதை தன் மந்திரக்கோலை ஆட்டினாள். தவளை இளவரசி அதிஅற்புத அழகு வாய்ந்த மனிதப் பெண்ணானாள். இரண்டாவது தேவதையின் மந்திரக்கோல் சின்னக் கோச் வண்டியை ரத்தினங்கள் வைத்து இழைத்த தங்கத் தேராக்கியது. குட்டிக் குதிரைகள் அழகிய அரபுக் குதிரைகளாகிக் கம்பீரமாகக் கனைத்தபடி நின்றன. மூன்றாவது தேவதை தவளை இளவரசிக்கு ஒரு பேழையைக் கொடுத்தாள். "எதை நினைத்துக் கொண்டு அதற்குள் கையிட்டாலும் அதை அது கொடுக்கும்" என்று கூறி மூன்று தேவதைகளும் மறைந்தார்கள்.

இளவரசன் சுந்தரகுமாரனுக்கு உரிமையான பட்டத்தை அளிக்க அவன் மாமா இன்னுமமா யோசிப்பார் ? அப்படி அவர் ஏதாவது சூழ்ச்சி செய்தால் தவளை இளவரசி மந்திரப் பேழையிலுள்ள தன் கையை விட மாட்டாளா ?



குள்ளவாத்து!


குவ்வா குவ்வா வாத்து!
குள்ள நடை வாத்து!
தவ்வத் தவ்வ மிதக்குமாம்,
தண்ணீரிலே வாத்து!
வாத் வாத் வாத்து!
வாழ்த்துப் பாடும் வாத்து!
பார்த்துப் பார்த்துத் தரையெல்லாம்
பதுங்கிப் போகும் வாத்து!

- தமிழழகன்



டடடா.,.

டடடா... !



உங்கள் கையின் இரு ஆள் காட்டி விரல்களையும் முகத்துக்கு நேரே கண்களுக்கு முன்னால் அரை அங்குல தூரத்தில் ஒன்று சேர்த்துப் பிடித்துக் கொள்ளுங்கள். (படம் 1). உங்கள் பார்வையை விரல்களில் படிக்காமல் எதிரிலுள்ள சுவரில் குறியைப் பதித்துப் பாருங்கள். அதே சமயம் சேர்த்துள்ள விரல்களை அரை அங்குலம் விலக்குங்கள். அப்போது நடப்பது என்ன ? இரண்டு விரல்களுக்குமிடையே ஓர் அங்குலத்துக்கு ஒரு துண்டு விரல் அந்தரத்தில் நிற்கும். (படம் 2). நிஜமாகத்தான். 'உன் கண் உன்னை ஏமாற்றினால்.... டட்டா... டட்டா..., டட்டா..., டட்டா...!' என்று பாடத் தோன்றுகிறதல்லவா?



அரவிந்த்



அரவிந்த் என்றால் தரமான துணிகள்

பாப்லின்கள்
ஷர்ட்டிங்குகள்: ஸ்ட்ரைப், டாபி, செக், பைஜாமா.
வேஷ்டிகள்: ப்ளாடினம், ராஜா ஸ்பெஷல்
மெர்ஸிரைஸ்ட் லான்: 5531
சூட்டிங்குகள்: காபர்டீன்
ப்ரிண்டுகள்: ப்ரிண்டெட் லான்கள், வாயில்கள்,
பாப்லின்கள்.

நெசவு செய்த கலர் புட்டாக்கள், லெனோ
மற்றும் புட்டாக்களில் 2x2 ஃபேன்ஸி ஃபுல் வாயில்கள்.

SANFORIZED

TEBILIZED* AND
TEBILIZED DOUBLE TESTED
*REGISTERED USERS

அரவிந்த்
மில்ஸ் லிமிடெட் அகமதாபாத்

LALBHAI GROUP

ஏகபோக விற்பனை ஏஜெண்டுகள்: திரு. அஜித்பாய் ஜெயந்திலால் சோமாபாய் பட்டேல் & கோ, 5, கிடங்குத் தெரு, சென்னை. ஏகபோக ஏற்றுமதி ஏஜெண்டுகள்: திரு. லால்பாய் எக்ஸ்போர்ட்ஸ் லிமிடெட், கண்ட்ராக்டர் பில்டிங், நிக்கோல் ரோடு, பல்லார்ட் எஸ்டேட், பம்பாய்—1.



பொன்னியின் செல்வன்

அமரர் கல்கி

முப்பத்தி நான்காம் அத்தியாயம்

லதா மண்டபம்

அடர்ந்த மாந்தோப்புக் கிடையே சென்ற ஒற்றையடிப் பாதையின் வழியாக அம்மங்கை விடு விடுவென்று நடந்து செல்ல வந்தியத் தேவனும் விரைவாகத் தொடர்ந்து சென்றான். மரஞ் செடிகளின் மீது மோதிக் கொள்ளாமல் அந்த இருளில் நடந்து செல்வது கஷ்டமாகத்தான் இருந்தது. ஒருசமயம் இவன் மரத்தில் மோதிக் கொள்ளப் பார்த்துத் தயங்கி நின்றபோது அந்த மங்கை திரும்பிப் பார்த்து, ''ஏன் நிற்கிறாய்? வழி மறந்து விட்டதா? நீதான் இருட்டில் கண் தெரிகிற மனிதன் ஆயிற்றே!'' என்றாள். அதற்குப் பதிலாக வந்தியத் தேவன் உதட்டில் விரலை வைத்து முன்னால் அவள் சொன்னதைப் போல், ''உஷ்!'' என்றான். அதே நேரத்தில் மதில் சுவருக்கு வெளியே ஏதோ சப்தம் கேட்டது. மனித நடமாட்டம் போலத் தொனித்தது. பிறகு இருவரும் மறுபடியும் நடந்தார்கள். கொஞ்ச தூரம் போனதும் வல்லவரையன் இலேசாகச் சிரித்தான். அந்த மங்கை திரும்பிப் பார்த்து ''என்னத்தைக் கண்டு சிரிக்கிறாய்?'' என்றாள்.

''கண்டு சிரிக்கவில்லை; கேட்டுச் சிரிக்கிறேன்!''

''அப்படியென்றால்?...''

''என்னைத் தேடி வந்தவர்களின் காலடிச் சத்தத்தைச் சற்று முன் நீ கேட்கவில்லையா? அவர்கள் ஏமாந்து போனதை எண்ணிச் சிரிக்கிறேன்!''

அவள் சிறிது பயத்துடன் ''உன்னை யாராவது தேடி வருகிறார்களா என்ன? எதற்காக?'' என்றாள்.

''இல்லாவிட்டால் எதற்காக இந்தக் குருட்டு இருட்டில் மதின் சுவரில் வந்து மோதிக் கொண்டு உட்கார்ந்திருக்க வேண்டும்?''

அச்சமயம் காற்றின் அசைவில் மரக் கிளைகள் விலகி நிலாக் கதிர் ஒன்று வந்தியத் தேவனுடைய முகத்தின்மீது விழுந்தது.

அந்தப் பெண் சற்று வியப்புடனும் திகைப்புடனும் அவனைப் பார்த்தாள்.

''என்ன பார்க்கிறாய்?'' என்று கேட்டான்.

''நீ, நீதானா என்று பார்த்தேன்!''

''நான் நான் இல்லாவிட்டால் வேறு யாராயிருப்பேன்?''

''போனதடவை நீ வந்திருந்தபோது பெரிய மீசை வைத்திருந்தாயே!''

''நல்ல கேள்வி கேட்கிறாய்! என்னைப்போல் சுவர் ஏறிக் குதித்து வருகிறவன் அடிக்கடி வேஷத்தை மாற்றிக் கொள்ளாவிட்டால் எப்படி?''



''முன்னைக்கு இப்போது இளமையாகத் தோன்றுகிறாயே?''

''உற்சாகம்இருக்கும்போது இளமை தானே வருகிறது!''

''அப்படி உனக்கு என்ன உற்சாகம் வந்தது?''

''உங்கள் மகாராணி தயவு இருக்கும் போது உற்சாகத்துக்கு என்ன குறைவு?''

''பரிகாசம் செய்யவேண்டாம். இன்றைக்கு எங்கள் எஜமானி இளைய ராணி தான். ஒரு நாள் நிச்சயமாக மகா ராணி ஆவார்கள்!''

''அதைத்தான் நானும் சொல்லுகிறேன்.''

''இதுதானா சொல்லுவாய்? உன்னுடைய மந்திர சக்தியினால்தான் மகா ராணி ஆனார்கள் என்று கூடச் சொல்லுவாய்! பாதி ராஜ்யத்தைக் கொடு என்று கேட்டாலும் கேட்பாய்!''



வந்தியத்தேவன் அறிய விரும்பியதை ஒருவாறு அறிந்து கொண்டான். பிறகு அவன் ஒன்றும் பேசவில்லை. தீவிரமாக யோசித்தபடியே நடந்தான்.

தான் சந்திக்கப் போவது யாரை? பழுவூர் இளையராணியாக இருக்கலாம். அல்லது மதுராந்தகத் தேவரை மணந்து கொண்ட சின்னப் பழுவேட்டரையரின் மகளாயிருக்கலாம். தன்னை மந்திரவாதி என்று எண்ணி அந்தப் பெண் அழைத்துக் கொண்டு போகிறாள். போய், அந்த 'இளையராணி' யாராக இருந்தாலும் அவளைச் சந்திக்கும்போது எப்படி நடந்து கொள்வது? — நெஞ்சே தைரியத்தைக் கைவிடாதே! தைரியம் உள்ளவரையில் ஜயமும் உண்டு. சமயத்தில் ஏதேனும் யுக்தி தோன்றாமல் போகாது! இதுவரையில் எந்த நெருக்கடியிலும் நாம் தோல்வியுற்று வந்ததில்லை. அதிலும் பெண் பிள்ளை ஒருத்தியிடமா தோல்வியடையப் போகிறோம்?

ஒரு பெரிய மாளிகையை அவர்கள் நெருங்கிச் சென்றார்கள். ஆனால் மாளிகையின் முன் வாசலை நோக்கிச் செல்லவில்லை. பின்புற வாசலையும் நெருங்கவில்லை. மாளிகையின் ஒரு பக்கத்தில் தோட்டத்துக்குள் நீட்டி விட்டிருந்த சிருங்கார லதா மண்டபத்தை நெருங்கினார்கள். இன்னும் அருகில் நெருங்கியபோது அந்த லதா மண்டபம் இரண்டுபெரிய பிரம்மாண்டமான மாளிகையை ஒன்று சேர்க்கும் பாதையைப் போல் அமைந்திருப்பது தெரிந்தது. அப்படிச் சேர்க்கப்பட்ட இரு கட்டிடங்களும் ஒருவிதத்தில் மாறுபட்டிருந்தன. வலதுபுறத்து மாளிகை அதன் உள்ளே சுடர் விட்டு எரிந்த பல தீபங்களினால் ஜொலித்துக் கொண்டிருந்தது. உள்ளிருந்து பலவித கல கலப்பான தொனிகள் வந்து கொண்டிருந்தன. இடதுபுறத்துக் கட்டிடத்திலோ ஒரு சின்னஞ் சிறு தீபம் கூட எரியவில்லை. நிலா வெளிச்சத்தில் அதன் வெளிச் சுவர்கள் நெடிதுயர்ந்து தெரிந்தன. ஆனால் அந்த மாளிகையின் உள்ளே நிசப்தமும் இருளும் குடிகொண்டிருந்தன.

வந்தியத்தேவனை அழைத்துக் கொண்டு வந்த பெண், லதா மண்டபத்தை அணுகியதும் அவனைப் பார்த்து சமிக்ஞையினால் அங்கேயே நிற்கும்படி சொன்னாள். அவனும் அப்படியே நின்றான். அவ்விதம் நின்றபோதுதான் அந்த இடத்தில் நிறைந்திருந்த மலர்களின் நறுமணத்தை அவன் உணர்ந்தான். அப்பப்பா! என்ன வாசம்! என்ன வாசம்! மூக்கில் நெடி போல ஏறித் தலையைக் கிறுகிறுக்க அடிக்கிறதே!

அந்தப் பெண் லதா மண்டபத்துக்குள் நுழைந்ததும், அவளுடைய குரலும் இன்னொரு இனிய பெண் குரலும் கேட்டன. ''வரச்சொல் உடனே! கேட்பானேன்? நான்தான் இத்தனை நேரமாய்க் காத்திருக்கிறேன் என்று தெரியுமே?'' என்ற சொற்கள் அவனுக்கு மயக்கத்தை உண்டாக்கின. அந்தக் குரல் பழுவூர் இளைய ராணியின் குரல்தான்! சந்தேகமில்லை. அடுத்த கணம் அவள் முன்னால் போய் நிற்கப் போகிறோம். அந்த நிலைமையை எவ்விதம் சமாளிக்கப் போகிறோம்? எதிர் பார்த்த மந்திரவாதிக்குப் பதிலாகப் பல்லக்கில் வந்து மோதிய மனிதன் வந்து நிற்பதைக் கண்டு அவள் என்ன நினைப்பாள்? ஆச்சரியப் படுவாளா? கோபம் கொள்வாளா? ஒருவேளை மகிழ்ச்சி அடைவாளா?... அல்லது எந்தவித உணர்ச்சியையும் வெளியில் காட்டாமல் நடந்து கொள்வாளா?

அவனை அழைத்து வந்த மங்கை லதா மண்டபத்து வாசலில் நின்றபடி சமிக்ஞையால் அழைத்தாள்.

வந்தியத்தேவன் அவள் நின்ற இடத்தை அடைந்து மண்டபத்தின் உட்புறம் நோக்கினான். ஒரு நொடிப் பொழுதில் அங்கே தோன்றிய காட்சி அவன் கண் வழியாக மனத்தில் பதிந்தது. தங்க விளக்கு ஸ்தம்பத்தில் ஒளிர்ந்த தீபச் சுடர் பொன் ஒளியைப் பரப்பியது. ஏதோ ஓர் அபூர்வமான வாசனைத் தைலத்தை அந்த விளக்கில் விட்டிருக்க வேண்டும். ஆதலின் தீபச் சுடரின் புகை கமகமவென்று மணம் வீசிற்று. பல வர்ண நறுமண மலர்களைப் பரப்பிய சப்ரகூட மஞ்சத்தில் ஒரு பெண் ஒய்யாரமாகச் சாய்ந்து கொண்டு வீற்றிருந்தாள். அவள் பழுவூர் இளைய ராணிதான். பகலில் பல்லக்கில் பார்த்த போது அவள் அழகியாகத் தோன்றினாள். இரவில் தங்கக் குத்துவிளக்கின் வெளிச்சத்தில் அழகென்னும் தெய்வமே உருவெடுத்தது போலக் காணப்பட்டாள். மலரின் மணமும் விளக்கின் புகை மணமும் பழுவூர் இளைய ராணியின் மோகன உருவமும் சேர்ந்து வந்தியத்தேவனைப் போதை கொள்ளச் செய்தன.

வந்தியத்தேவா! ஜாக்கிரதை! ஒரே ஒரு தடவை நீ மதுபானம் செய்தாய்! உன் அறிவு கலங்குவதை அறிந்தாய்! பிறகு மதுவைத் தொடுவதில்லை என்று சபதம் செய்தாய். இப்போது அதை ஞாபகப்படுத்திக் கொள்! மதுவின்

போதையைக் காட்டிலும் சக்திவாய்ந்த இந்த மயக்கத்தில் உன் அறிவைப் பறி கொடுத்து விடாதே!

வந்தியத்தேவனைப் பார்த்த பழுவூர் இளையராணி நந்தினி அவளுடைய பவழ இதழ்கள் சிறிது விரிந்து முத்துப் பற்களை வெளிக்காட்டும்படி வியப்புடன் நோக்கிக்கொண்டிருந்தாள். பேச முடியாத நிலையை அவள் அச்சமயம் அடைந்திருந்தது வந்தியத்தேவனுக்கு அனுகூலமாகப் போயிற்று.

இலேசாக அவன் ஒரு சிரிப்புச் சிரித்துவிட்டு, ''அம்மணி! தங்கள் தாதிப் பெண்ணுக்குத் திடீரென்று சந்தேகம் வந்துவிட்டது: — நான் மந்திரவாதியா இல்லையா என்று! அதை எப்படிக் கேட்டாள் என்று நினைக்கிறீர்கள்? 'நீ நீதானா?' என்று கேட்டாள்!'' என்று சொல்லி மறுபடியும் சிரித்தான்.



நந்தினி புன்னகை புரிந்தாள். வந்தியத்தேவனுடைய கண் முன்னால் ஒரு மின்னல் மின்னியது. அது தேனைச் சொரிந்தது.

''இவளுக்கு அப்படித்தான் ஏதாவது சந்தேகம் திடீர் திடீரென்று வந்துவிடும்! வாஸுகி! ஏன் இங்கேயே மரம் போல் நிற்கிறாய்! உன் இடத்துக்குப் போ! யாராவது வரும் காலடிச் சத்தம் கேட்டால் கதவைப் படீரென்று சாத்து!'' என்றாள் நந்தினி.

''இதோ, அம்மா!'' என்று சொல்லிவிட்டு, வாசுகி லதா மண்டபத்தின் உள் வழியாகப் பிரகாச மாளிகைக்குச் சென்ற நடை பாதையில் நடந்து போய் சற்றுத் தூரத்தில் மங்கலாகத் தெரிந்த வாசற் படியண்டை உட்கார்ந்து கொண்டாள்.

நந்தினி சிறிது குரலைத் தாழ்த்திக் கொண்டு, ''உன்னை மந்திரவாதியில்லையென்று இவள் சந்தேகித்தாள்? அசட்டுப் பெண்! 'மந்திரவாதிகள்' என்று சொல்லிக் கொள்கிறவர்களில் முக்கால்வாசிப் பேர் வெறும் பொய்யர்கள். நீதான் உண்மை மந்திரவாதி! என்ன மாய மந்திரம் செய்து இந்தச் சமயத்தில் இங்கே வந்தாய்?'' என்று கேட்டாள்.

''அம்மணி! மாய மந்திரம் செய்து நான் இங்கே வரவில்லை. சுவர்மீது சாத்தியிருந்த ஏணிமேல் ஏறித்தான் வந்தேன்!'' என்றான் வந்தியத்தேவன்.

''அதுதான் தெரிகிறதே! இந்தப் பெண்ணை என்ன மாய மந்திரம் செய்து ஏமாற்றினாய் என்று கேட்டேன்.''

''நிலா வெளிச்சத்தில் ஒரு புன்னகை புரிந்தேன். அவ்வளவுதான்! அதற்குச் சரிப்பட்டு வராவிட்டால் தாங்கள் கொடுத்த மந்திர மோதிரத்தைக் காட்ட எண்ணியிருந்தேன்.''

''அதைப் பத்திரமாக வைத்திருக்கிறாய் அல்லவா? அந்த மோதிரம் இருக்கும்போது பட்டப் பகலில் பகிரங்கமாக இங்கே வந்திருக்கலாமே? எதற்காக இந்தக் குருட்டு வழியில் திருட்டுத்தனமாக வந்தாய்?''

''அம்மணி! தங்கள் மைத்துனர் இருக்கிறாரே, சின்னப்பழுவேட்டரையர், அவருடைய ஆட்கள் சுத்தத் திருடர்கள். முதலில் என்னுடைய உடைகளையும் உடைமைகளையும் திருடப் பார்த்தார்கள். பிறகு என்னைப் பின்தொடர்ந்து ஒரு கணம்கூடப் பிரியாமல் வந்து கொண்டிருந்தார்கள். அவர்களிடமிருந்து பிரியப் பட்டபாடு பெரும்பாடாகப் போயிற்று. பிரிந்த பிறகு சந்து பொந்துகளில் புகுந்து தங்களுடைய மாளிகை மதில் சுவரைச் சுற்றிச் சுற்றி வந்து கொண்டிருந்தேன். அந்தச் சமயத்தில் சுவர் மேல் வைத்த ஏணியைப் பார்த்ததும் தாங்கள்தான் இந்த ஏழையை நினைவுகூர்ந்து இந்த ஏற்பாடு செய்திருக்கிறீர்கள் என்று எண்ணி விட்டேன். அது தவறு என்று தெரிந்து கொண்டேன். மன்னிக்க வேண்டும்.''

''மன்னிப்பதற்கு அவசியம் ஒன்றும் ஏற்படவில்லையே!''

''அது எப்படி அம்மணி?''

''நீ நினைத்தது அவ்வளவாகத் தவறும் இல்லை. மந்திரவாதியை எதற்காக நான் தருவிக்க நினைத்தேன் தெரியுமா?''

''தெரியவில்லை அம்மணி! எனக்கு மந்திரமும் தெரியாது; ஜோசியமும் தெரியாது!''

''உன்னை நேற்றுக் காலையில் பார்த்தது முதல் உன்னுடைய ஞாபகமாகவே இருந்தது. நீ ஏன் இன்னும் என்னைப் பார்க்க வரவில்லையென்று தெரிந்து கொள்ள விரும்பினேன். அதற்காகவே தான் நான் மந்திரவாதியைக் கூப்பிட்டனுப்பினேன்.''

''மிக்க ஆச்சரியமாக இருக்கிறது.''

''எது?''

''இப்போது நீங்கள் சொன்னதுதான். நேற்று உங்களைப் பார்த்தது முதல் எனக்கும் உங்கள் ஞாபகமாகவே இருந்தது!''

''பூர்வ ஜன்ம வாசனையில் உனக்கு நம்பிக்கை உண்டா?''

''அப்படியென்றால்?''

''பூர்வஜன்மத்தில் இரண்டு பேருக்கு நட்போ, உறவோ இருந்தால், இந்த ஜன்மத்திலும் அத்தகைய தொந்தம் ஏற்படும் என்கிறார்களே, அதைத்தான் சொல்லுகிறேன்.''

''நேற்றுவரையில் எனக்கு அந்த நம்பிக்கை இல்லை. நேற்றுத்தான் அதில் நம்பிக்கை பிறந்தது.''

இவ்விதம் வந்தியத்தேவன் கூறியபோது வெளிப்படையாகப் பொய் சொன்னான் என்றாலும், மனத்திற்குள் குடந்தை ஜோதிடர் வீட்டில் பார்த்த பெண்ணை நினைத்துக் கொண்டுதான் சொன்னான். ஆனால் நந்தினிக்கு அதைப் பற்றிய விவரமே தெரிய இடமில்லை யல்லவா? தன்னைப் பற்றிச் சொல்வதாகவே நினைத்துக் கொண்டாள்.

''ஆனால் அதற்காக நீ என்னைப் பார்க்க வரவில்லையே? ஏதோ ஆழ்வார்க்கடியார் நம்பி என்பவர் செய்திசொல்லி அனுப்பியதாக..''

''ஆம், அம்மணி! அவர் சொல்லி அனுப்பிய செய்தியைத் தங்களிடம் சொல்வதற்காகவே முதலில் தங்களைப் பார்க்க விரும்பினேன். தங்களை ஒரு முறை பார்த்த பிறகு, பழைய காரணமெல்லாம் மறந்து போய்விட்டது.''

''ஆழ்வார்க்கடியாரை நீ எங்கே பார்த்தாய்? என்ன செய்தி சொல்லியனுப்பினார்?''

''வீரநாராயணபுரத்துக்கு அருகில் ஆழ்வார்க்கடியார் நம்பியைச் சந்தித்தேன். அவர் தன் கைத்தடியின் சக்தியைக்கொண்டு விஷ்ணுதான் பெரிய தெய்வம் என்று மெய்ப்பிக்க முயன்றார். அச்சமயத்தில் பெரிய பழுவேட்டரையரின் பரிவாரங்கள் வந்தன. அவரைத் தொடர்ந்து தங்கள் பல்லக்கும் வந்தது. அங்கே என்ன ரகளை என்று பார்ப்பதற்காகவோ என்னவோ, தங்களுடைய ஒரு பொற்கரம் பல்லக்கின் திரையை விலக்கிற்று. அப்போதுதான்





தாங்கள் என்று தெரிந்து கொண்டு ஆழ்வார்க்கடியார் தங்களுக்கு ஒரு செய்தி அனுப்ப விரும்பினார். நானும் அன்றிரவு கடம்பூர் சம்புவரையர் மாளிகையில் தங்கியபடியால் என்னிடம் செய்தி சொல்லி அனுப்பினார். ஆனால் கடம்பூரில் தங்களை நான் பார்க்க முடியவில்லை. தஞ்சாவூர்க் கோட்டைக் கருகில் சாலையில்தான் சந்திக்க முடிந்தது. அதுவும் தங்கள் பல்லக்கு என் குதிரைமேல் மோதியதனால்தான்!''

இவ்விதம் வந்தியத்தேவன் சொல்லி வந்தபோது நந்தினி மேலே அண்ணாந்து பார்த்துக் கொண்டிருந்தாள். ஆகையால் அவளுடைய முசபாவத்திலிருந்து ஒன்றும் கண்டு பிடிக்க முடியவில்லை. கடைசியில் வந்தியத்தேவன் சொன்னதைக் கேட்டதும் அவனைத் திரும்பிப் பார்த்து ஒரு மோகனப் புன்னகை புரிந்தாள். ''ஆமாம்; நான் ஏறும் பல்லக்கு வெகு பொல்லாத பல்லக்குத்தான்!'' என்றாள்.

முப்பத்தைந்தாம் அத்தியாயம்

மந்திரவாதி

தூரத்தில் பேரிகைகளின் பெருமுழக்கம் கேட்டது. எக்காளங்கள் சப்தித்தன. மனிதர்களின் குரல்கள் ஜய கோஷம் செய்தன. கோட்டைக் கதவுகள் திறந்து மூடிக் கொள்ளும் சப்தமும், யானைகள் குதிரைகளின் காலடிச் சத்தமும் எழுந்தன.

நந்தினியின் கவனத்தை அந்தச் சத்தங்கள் கவர்ந்தன என்பதை வந்தியத்தேவன் அறிந்து கொண்டான். காவல் புரிந்த தாதிப்பெண் திடுக்கிட்டு எழுந்து சற்று அருகில் வந்து, ''அம்மா! எஜமான் வந்துவிட்டார் போலிருக்கிறது!'' என்றாள்.

நந்தினி, ''எனக்குத் தெரியும்; நீ உன் இடத்துக்குப் போ!'' என்றாள்.

பிறகு வந்தியத்தேவனைப் பார்த்து, ''தனாதிகாரி கோட்டையில் பிரவேசிக்கிறார்'



சக்கரவர்த்தியின் க்ஷேமத்தை விசாரித்துவிட்டு, கோட்டைத் தளபதியைப் பார்த்துப் பேசிவிட்டு, இங்கே வருவார். வருவதற்குள் நீ போய்விட வேண்டும். ஆழ்வார்க்கடியார் கூறிய செய்தி என்ன?'' என்று வினவினாள்.

''அம்மணி! அந்த வீர வைஷ்ணவ சிகாமணி தங்களை அவருடைய சகோதரி என்று சொல்லிக் கொண்டார். அது உண்மைதானா?'' என்று வல்லவரையன் கேட்டான்.

''அதைப் பற்றி நீ ஏன் சந்தேகப்படுகிறாய்?''

''பச்சைக் கிளியும் கடுவன் குரங்கும் ஒரு தாயின் குழந்தைகள் என்றால் எளிதில் நம்ப முடியுமா?''

நந்தினி சிரித்துவிட்டு, ''ஒரு விதத்தில் அவர் சொன்னது உண்மைதான். நாங்கள் ஒரே வீட்டில் ஒரே குடும்பத்தில் வளர்ந்தோம். உடன் பிறந்த தங்கையைப் போலவே என்னிடம் பிரியம் வைத்திருந்தார். பாவம்! அவருக்குப் பெரும் ஏமாற்றம் அளித்து விட்டேன்!''

''அப்படியானால் சரி! ஆழ்வார்க்கடியார் தங்களுக்குச் சொல்லி அனுப்பிய செய்தி கிருஷ்ண பகவான் தங்களுக்காகக் காத்துக் கொண்டிருக்கிறார் என்பதுதான். தாங்கள் கண்ணனை மணந்து கொள்ளும் கலியாணக் காட்சியைப் பார்க்க வீர வைஷ்ணவ பக்த கோடிகளும் காத்துக் கொண்டிருக்கிறார்களாம்!''

நந்தினி ஒரு பெருமூச்சு விட்டாள். ''ஆகா! இன்னும் அவருக்கு அந்தச் சபலம் நீங்கவில்லை போலிருக்கிறது. நீ அவரைப் பார்த்தால் எனக்காக இதைச் சொல்லிவிடு. என்னை அடியோடு மறந்துவிடச் சொல்லு! ஆண்டாளைப் போல் பரம பக்தையாகக் கொஞ்சமும் தகுதியற்றவள் நான் என்று சொல்லு!''

''நான் அதை ஒப்புக்கொள்ளவில்லை அம்மா!''

''எதை ஒப்புக்கொள்ளவில்லை?''

''தாங்கள் ஆண்டாள் ஆக முடியாது என்பதைத்தான் ஒப்புக்கொள்ளவில்லை. ஆண்டாள் பக்தி செய்து, கண்ணீர் விட்டு, பூமாலை தொடுத்துச் சூட்டி — இப்படியெல்லாம் செய்து கண்ணனை மணந்து கொள்ள வேண்டியிருந்தது. ஆனால் தங்களுக்கு அந்தக் கஷ்டமே தேவையில்லை. தங்களைக் கிருஷ்ண பகவான் பார்த்துவிட வேண்டியதுதான். ருக்மணி, சத்தியபாமாவையும், ராதையையும், கோபிகா ஸ்திரீகளையும் உடனே கைவிட்டு அவர்கள் வீற்றிருந்த சிம்மாசனத்தில் தங்களை ஏற்றி உட்கார வைத்து விடுவார்!''

''ஐயா! நீர் முகஸ்துதி செய்வதில் சமர்த்தராயிருக்கிறீர். அது எனக்குப் பிடிப்பதேயில்லை.''

''அம்மணி முகஸ்துதி என்றால் என்னவோ?''

''முகத்துக்கு நேரே ஒருவரைப் புகழ்வதுதான்.''

''அப்படியானால் சற்றே நீங்கள் திரும்பி முதுகைக் காட்டிக் கொண்டு உட்காருங்கள்.''

''எதற்காக?''

''முகத்தைப் பார்க்காமல் முதுகைப் பார்த்துக் கொண்டு புகழ்ச்சி கூறுவதற்காகத்தான். அதில் ஒன்றும் தவறு இல்லையல்லவா?''

''நீர் பேச்சில் மிகக் கெட்டிக்காரராயிருக்கிறீர்.''

''இப்போது தாங்கள் அல்லவா முகஸ்துதி செய்கிறீர்கள்?''

''நீரும் முகத்தைத் திருப்பிக்கொண்டு முதுகைக் காட்டுவதுதானே?''

''மகாராணி! போர்க்களத்திலாகட்டும், பெண்மணிகளிடமாகட்டும், நான் முதுகு காட்டுவது எப்போதும் கிடையாது. தாங்கள் தாராளமாய் என்னை முகஸ்துதி செய்யலாம்.''

இதைக் கேட்டுவிட்டு நந்தினி 'கலீர்' என்று சிரித்தாள்.

''நீர் மந்திரவாதிதான்; சந்தேகமில்லை. நான் இம்மாதிரி வாய்விட்டு சிரித்து வெகு காலமாயிற்று!'' என்று சொன்னாள்.

''ஆனால், அம்மணி! தங்களைச் சிரிக்கப்பண்ணுவது வெகு அபாயம்! தடாகத்தில் தாமரை சிரித்து மகிழ்ந்தது; தேன் வண்டு மயங்கி விழுந்தது!'' என்றான் வந்தியத்தேவன்.

''நீர் மந்திரவாதி மட்டுமலல; கவியும் போலிருக்கிறதே!''

''நான் முகஸ்துதிக்கும் அஞ்ச மாட்டேன்; வசவுக்கும் கலங்கமாட்டேன்.''

''உம்மை யார் வைதது?''

''சற்று முன் என்னைக் 'கவி' என்றீர்களே!''

''அப்படியென்றால்?''

''நான் சிறுவனாக இருந்தபோது என்னைச் சிலர் 'குரங்கு மூஞ்சி!' என்று சொல்வதுண்டு. வெகு நாளைக்குப் பிறகு இன்றைக்குத்தான் தங்களுடைய பவளச் செவ்வாயினால் அதைக் கேட்டேன்.''

''உம்மையா 'குரங்கு மூஞ்சி' என்றார்கள்? யார் அப்படிப்பட்ட புத்திசாலிகள்?''

''அவர்களில் யாரும் இப்போது உயிரோடில்லை.''

''உம்மை நான் அவ்விதம் சொல்லவில்லை. கவி பாடக்கூடியவர் போலிருக்கிறதே என்று சொன்னேன்.''

''கொஞ்சம் கவியும் பாடுவேன். ஆனால் பகைவர்களுக்கு முன்தான் பாடுவேன். வில்லம்பினால் சாகாதவர்கள் சொல்லம்பினால் சாகட்டும் என்று!''

''ஐயா, கவிராஜ வீர சிங்கமே! உம்முடைய பெயர் என்னவென்று இன்னமும் சொல்லவில்லையே?''

''என் சொந்தப் பெயர் வந்தியத்தேவன்; பட்டப் பெயர் வல்லவரையன்.''

''அரச குலத்தினரா?''

''பழைய புகழ் பெற்ற வாணாதிராஜர் குலத்தில் வந்தவன்.''

''இப்போது உங்கள் ராஜ்யம்?...''

''மேலே ஆகாசம்; கீழே பூமி; இப்போது நான் சகல பூமண்டலத்துக்கும் ஏக சக்ராதிபதி!''

நந்தினி சிறிது நேரம் வல்லவரையனை ஏறத் தாழப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

''அப்படி ஒன்றும் நடக்காத காரியம் இல்லை. உம்முடைய பூர்விக ராஜ்யத்தை நீர் திரும்பவும் பெறலாம்.''

''அது எப்படி சாத்தியம்? புலியின் வயிற்றுக்குள்ளே போனது திரும்பவும் வருமா? சோழ சாம்ராஜ்யத்தில் சேர்ந்த அரசு திரும்பக் கிடைக்குமா?''

''கிடைக்கும்படி செய்ய என்னால் முடியும்.''

''அம்மணி! வேண்டாம்! இராஜ்யம் ஆளும் ஆசை எனக்கு எப்போதும் கிடையாது. கொஞ்சம் இருந்ததும் இன்றைக்குச் சுந்தர சோழச் சக்கரவர்த்தியைப் பார்த்த பிறகு அடியோடு போய்விட்டது. இம்மாதிரி பிறர் கையை எதிர்பார்த்துச் சக்கரவர்த்தியாயிருப்பதைக் காட்டிலும் மறு நாள் உணவு எங்கே கிடைக்கும் என்று தெரியாத சுதந்திர மனிதனாக இருப்பதே மேல்.''

''என்னுடைய கருத்தும் அதுதான்!'' என்றாள் நந்தினி. பிறகு ஏதோ மறந்து போன விஷயத்தை ஞாபகப்படுத்திக் கொண்டவள்போல், ''சின்னப் பழுவேட்டரையரின் ஆட்கள் உம்மை எதற்காகத் தேடுகிறார்கள்?'' என்று கேட்டாள்.

''தங்களுடைய தாதிப் பெண்ணைப் போல் அவர்களுக்கும் என்பேரில் சந்தேகம் உண்டாகி விட்டது.''

''என்ன சந்தேகம்?''

''பனை இலச்சினை உள்ள முத்திரை மோதிரம் என்னிடம் எப்படி வந்தது என்று.''

நந்தினியின் முகத்தில் பயத்தின் சிறிய சாயல் தென்பட்டது.

''மோதிரம் எங்கே?'' என்று திடுக்கிட்ட குரலில் கேட்டாள்.

''இதோ இருக்கிறது அம்மணி! இலையில் அதைப் போக்கடித்து விடுவேனா?'' என்று கூறிக் கொண்டே மோதிரத்தை எடுத்துக் காட்டினான்.

''இது உம்மிடம் இருப்பது அவருக்கு எப்படித் தெரிந்தது?'' என்று நந்தினி கேட்டாள்.

''சுந்தர சோழச் சக்கரவர்த்தியைப் பார்க்க வேண்டும் என்ற ஆசை என் மனத்தில் நெடுநாளாக இருந்தது. அதற்காக இந்த முத்திரை மோதிரத்தை உபயோகப்படுத்திக் கொண்டேன். பார்த்து முடிந்த பிறகு இந்த மோதிரம் என்னிடம் எப்படி



வந்தது என்று கோட்டைத் தளபதி கேட்டார்....''

''நீர் என்ன சொன்னீர் ?'' என்று நந்தினி வினவிய குரலில் திகில் தொனித்தது.

''தங்கள் பெயரைச் சொல்லவில்லை அம்மணி! பெரிய பழுவேட்டரையர் கொடுத்தார் என்று சொன்னேன். கடம்பூர் மாளிகையில் கொடுத்தார் என்றும் சொன்னேன்...''

நந்தினி பெருமூச்சு விட்டாள். அவள் முகத்திலும் குரலிலும் இருந்த திகில் நீங்கியது.

''நீர் சொன்னதை அவர் நம்பினாரா?'' என்று கேட்டாள்.

''முழுதும் நம்பியதாகத் தெரியவில்லை. அதனால்தானே என்னைப் பின் தொடரும்படி ஆட்களை விட்டிருக்க வேண்டும்? தமையனார் திரும்பி வந்ததும் என்னை அவர் முன்னிலையில் நிறுத்தி

உண்மையை அறிய எண்ணி யிருக்கலாம்!'' என்ருன் வந்தியத்தேவன்.

நந்தினி புன்னகை புரிந்து, ''பெரிய பழுவேட்டரையரிடம் நீர் பயப்பட வேண்டாம். அவர் உம்மைக் கடித்துத் தின்றுவிடாமல் நான் பார்த்துக்கொள்கிறேன்'' என்ருள்.

''அம்மணி தஞதிகாரியின்பேரில் தங்களுடைய செல்வாக்கு எவ்வளவு என்பது உலகம் அறிந்த செய்தி. ஆனால் எனக்கு வெளியில் அவசர காரியம் இருக்கிறது. ஆகையினுல்தான் தப்பிச் செல்லத் தங்கள் உதவியைக் கோருகிறேன்.''

''அப்படி என்ன அவசர வேலை இருக்கிறது?''

''எத்தனையோ இருக்கிறது. உதாரணமாக ஆழ்வார்க்கடியாரைப் பார்த்துத் தங்கள் மறுமொழியைச் சொல்ல வேண்டும். அவருக்கு என்ன சொல்லட்டும்?''

''அவருக்கு 'நந்தினி' என்று ஒரு சகோதரி இருந்தாள் என்பதை மறந்துவிடும்படி சொல்லும்!''

''சொல்லிவிடலாம்; ஆனுல் நடக்கிற காரியம் இல்லை.''

''எது?''

''தங்களை மறப்பதுதான். இரண்டு தடவை தற்செயலாகப் பார்த்த என்னுலேயே தங்களை மறக்க முடியாது போயிருக்கிறதே! வாழ்நாளெல்லாம் தங்களோடு இருந்தவரால் எப்படி மறக்க முடியும்?''

நந்தினியின் முகத்தில் வெற்றிப் பெருமிதத்தின் சாயல் பரிணமித்தது. அவளுடைய வேல் விழிகள் வந்தியத்தேவனுடைய நெஞ்சை ஊடுருவின போல் நோக்கின.

''சக்கரவர்த்தியைப் பார்ப்பதற்கு நீர் ஏன் அவ்வளவு ஆர்வம் கொண்டிருந்தீர்?'' என்று கேட்டாள்.

''உலகப் பிரசித்தி பெற்ற அந்தச் சுந்தர புருஷரைப் பார்க்க நான் விரும்பியதில் வியப்பு என்ன? உலகத்தில் வீர மன்னர்கள் தங்கள் வீரமும் பௌருஷமும் பெருக வேண்டும் என்றும், இராஜ்யமும் கீர்த்தியும் விஸ்தரிக்க வேண்டும் என்றும் விரும்புவார்கள். அவ்விதமே பிரஜைகளைப் பிரார்த்தனை செய்யும்படியும் சொல்வார்கள். ஆனுல் நம்முடைய சக்கரவர்த்தியைப் பற்றி புத்த பிக்ஷுகளின் மடங்களில் என்ன பிரார்த்தனை செய்கிருர்கள்?

'. . . . . சுந்தரச்
சோழர் வண்மையும் வனப்பும்
திண்மையும் உலகில் சிறந்து வாழ்கெனவே'

என்று பிரார்த்தனை செலுத்துகிருர்கள். இத்தகைய கலியுக மன்மதனைப் பார்க்க வேண்டும் என்று எனக்கு வெகு நாளாக ஆசையா யிருந்தது.''

''ஆமாம், சக்கரவர்த்திக்குத் தம்முடைய அழகைப் பற்றி ரொம்பப் பெருமைதான். அவருடைய செல்வக் குமாரிக்கு அதைவிட அதிக கர்வம்...''

''குமாரியா? யாரைச் சொல்லுகிறீர்கள்?''

''பழையாறையில் இருக்கிருளே, ஒரு அகம்பாவம் பிடித்த கர்வி, — அந்த இளைய பிராட்டி குந்தவை தேவியைத் தான் சொல்லுகிறேன்.''

வந்தியத்தேவா! நீ அதிர்ஷ்டக்காரன். நீ தேடிக் கொண்டிருந்த உபாயம் இதோ உன் முன்னுல் தானே வந்து நிற்கிறது! அதை நன்கு உபயோகப் படுத்திக் கொள்! — இவ்வாறு வல்லவரையன் தனக்குத் தானே சொல்லிக் கொண்டான்.

இத்தனை நேரமும் ஒய்யாரமாகப் படுக்கையில் சாய்ந்து படுத்திருந்த நந்தினி திடீரென்று எழுந்து நிமிர்ந்து உட்கார்ந்தாள்.

''ஐயா! நான் ஒன்று சொல்கிறேன். அதை ஒப்புக்கொள்வீரா?'' என்று கேட்டாள்.

''சொல்லுங்கள் அம்மணி!''

''நீரும் நானும் ஓர் உடன்படிக்கை செய்து கொள்ளலாம். நீர் எனக்கு உதவி செய்ய வேண்டியது. நான் உமக்கு உதவி செய்ய வேண்டியது. என்ன சொல்கிறீர்!''

''அம்மணி! தாங்கள் சோழ மகா ராஜ்யத்தில் சர்வ சக்தி வாய்ந்த தனதிகாரியின் ராணி. நினைத்ததை நினைத்தபடி சாதிக்கக் கூடிய சக்தி வாய்ந்தவர். நானே ஒருவித செல்வாக்கும் இல்லாதவன். தங்களுக்கு நான் என்ன விதத்தில் உதவி செய்ய முடியும்!'' என்ருன்.

அவன் உள்ளத்திலிருந்து பேசுகிருனு உதட்டி லிருந்து பேசுகிருனு என்று தெரிந்து கொள்ள விரும்பிய நந்தினி தன் கூரிய விழிகளை அவன் மீது செலுத்தினுள்.

வந்தியத்தேவன் அதற்குச் சிறிதும் கலங்காமல் நின்ருன்.

''எனக்கு அந்தரங்கமான பணி ஆள் ஒருவர் தேவையா யிருக்கிறது. இந்த அரண்மனையில் உமக்கு வேலை வாங்கிக் கொடுத்தால், ஒப்புக்கொள்வீரா?'' என்று கேட்டாள்.

''இதே மாதிரி சேவையை இன்னொரு மாதரசிக்குச் செய்வதாக ஏற்கனவே ஒப்புக் கொண்டு விட்டேன். அவள் வேண்டாமென்று நிராகரித்தால் தங்களிடம் வருகிறேன்.''

''அது யார் அவள், என்னோடு போட்டிக்கு வருகிறவள்?''

''சற்று முன் மிகப் பிரியத்தோடு பேசினீர்களே? அந்த இளைய பிராட்டி குந்தவை தேவிதான்!''

''பொய்! பொய்! அப்படி ஒரு நாளும் இருக்க முடியாது. என்னை வேடிக்கை செய்யப் பார்க்கிறீர்...!''

''மகாராணி! இந்த ஓலையை ஏற்கெனவே பலர் திருடிப் பார்த்துவிட்டார்கள். ஆகையால் தாங்களும் இதை பார்ப்பதனால் மோசம் ஒன்றும் வந்துவிடாது!'' என்று சொல்லிக் கொண்டே வந்தியத்தேவன் ஆதித்த கரிகாலர் குந்தவைக்குக் கொடுத்த ஓலையை எடுத்து நீட்டினான்.

நந்தினி ஓலையை விளக்கினடியில் பிடித்துக்கொண்டு படித்தாள். படித்து முடித்தபோது அவளுடைய கண்களிலிருந்து கிளம்பிய மின்னல் ஜ்வாலை நாக சர்ப்பத்தின் வாயிலிருந்து வெளிவந்து மறையும் அதன் பிளவுபட்ட நாவை வந்தியத்தேவனுக்கு நினைவூட்டியது. அவனை அறியாமல் அவன் உடம்பு நடுங்கியது.

நந்தினி கம்பீர பாவத்துடன் வந்தியத்தேவனைப் பார்த்து, ''ஐயா! நீர் இந்தக் கோட்டையிலிருந்து உயிரோடு தப்பிச் செல்ல எண்ணுகிறீர் அல்லவா?'' என்று கேட்டாள்.

''ஆம். அம்மா! அதற்குத்தான் தங்கள் உதவியை நாடி வந்தேன்.''

''ஒரு நிபந்தனையின் பேரில்தான் நீர் தப்பிவிட நான் உதவி செய்யலாகும்.''

''நிபந்தனையைச் சொல்லுங்கள்!''

''இந்த ஓலைக்குக் குந்தவை என்ன மறு ஓலை கொடுக்கிறாளோ, அதை மறுபடியும் என்னிடம் கொண்டுவந்து காட்ட வேண்டும். சம்மதமா?''

''மிக அபாயகரமான நிபந்தனை போடுகிறீர்கள்!''

''அபாயத்துக்கு அஞ்சாதவர் என்று சற்று முன் பெருமை அடித்துக்கொண்டீரே!''

''அபாயத்துக்குத் துணிவது என்றால் அதற்குத் தகுந்த பரிசு கிட்ட வேண்டும் அல்லவா?....''

''பரிசா? பரிசா வேண்டும்? நீர் கனவிலும் அடையக் கருதாத பரிசு உமக்குக் கிடைக்கும். சோழ சாம்ராஜ்யத்தில் இன்று சர்வ சக்தி வாய்ந்தவராய் விளங்கும் பெரிய பழுவேட்டரையர் எந்தப் பரிசுக்காக வருஷக் கணக்காய் தவம் கிடக்கிறாரோ, அத்தகைய பரிசு உமக்குக் கிடைக்கும்!'' என்று கூறி நந்தினி வந்தியத்தேவன் பேரில் மறுபடியும் மோகனாஸ்திரத்தைத் தூவினாள்.

பாவம்! வல்லவரையனுடைய தலை சுழன்றது. நெஞ்சே! தைரியத்தைக் கடைப்பிடி! அறிவை இழந்துவிடாதே! என்று சொல்லிக் கொண்டான்.

அச்சமயம் அவனுக்குத் துணை செய்ய வந்ததைப் போல் அருகிலுள்ள தோட்டத்திலிருந்து ஆந்தையின் கடூரமான குரல் கேட்டது. ஒரு தடவை, இரண்டு தடவை, மூன்று தடவை கேட்டது.

வந்தியத்தேவனுடைய உடம்பு சிலிர்த்தது.

நந்தினி தோட்டத்தில் ஆந்தைக் குரல் வந்த இடத்தை நோக்கி ''நிஜ மந்திரவாதியே வந்து விட்டான்!'' என்றாள்.

பிறகு வந்தியத்தேவனைப் பார்த்து, ''அவன் இனி எனக்குத் தேவையில்லை. ஆனாலும் இரண்டு வார்த்தை அவனிடம் சொல்லி அனுப்புகிறேன். ஒரு வேளை நீர் தப்பிச் செல்வதற்கும் அவன் உபயோகமாக இருக்கலாம். சற்று நேரம் நீர் அதோ அந்தப் பக்கம் போய் இருட்டில் மறைந்து நில்லும்!'' என்று முன்னம் அவனுடைய தாதிப் பெண் போன திசைக்கு நேர் எதிர்த் திசையைக் காட்டினாள். **(தொடரும்)**

யுத்த ரகசியம்



போரிலே ஸர் வின்ஸ்டன் சர்ச்சில் பெரிய விஷயங்களை மட்டும் அல்ல, அற்ப விஷயங்களையும் கூட ஜாக்கிரதையாகக் கவனித்துக் கொள்வார்.

கி. பி. 711ம் ஆண்டில் ஜிப்ரால்டர் துறை முகத்தை மூர் ஜாதியார் பிடித்தபோது வாலில்லாக் குரங்குகளைப் பிரியமாக வளர்த்தார்கள். பின்னால் பிரிட்டிஷார் இந்தத் துறைமுகத்தைக் கைப்பற்றிய பின்பும் ஜிப்ரால்டரில் அந்தக் குரங்குகள் இருந்து வந்தன. அதோடு ஒரு ஜோசியமும் வழங்கத் தொடங்கியது. என்றைய தினம் ஜிப்ரால்டர் குன்றில் வாலில்லாக் குரங்குகள் இல்லாமல் போகின்றனவோ அன்றைய தினம் பிரிட்டிஷாரும் அதைவிட்டு வெளியேறி விடுவார்கள் என்பதுதான் எங்கும் பரவத் தொடங்கிய அந்த ஜோஸியம்.

இரண்டாவது உலக யுத்த காலத்தில் குன்றில் வாலில்லாக் குரங்குகள் பத்துக்கும் குறைந்துவிட்டன. இந்தச் செய்தியைப் பத்திரிகைகளில் வெளியிடக் கூடாதென உத்தரவு பிறந்தது.

தவிர முதல் காரியமாக ஏராளமான வாலில்லாக் குரங்குகளைக் கொண்டு சென்று ரகசியமாகக் குடியேற்ற சர்ச்சில் உத்தரவு பிறப்பித்தார். கப்பலிலும், விமானத்திலும் வந்த எல்லாரும் குரங்குகளைப் பார்க்கும்படி பகிரங்கமாய்த் திரிய விட்டுவிட்டார்.

ஆதாரம்: வேர்ல்டு டைஜஸ்ட்

தகவல்: பாண்டியாக்






□ சென்னையில், பாங்க் ஆப் இந்தியா வின் புதிய கட்டிடத்தை கவர்னர் உஜ்ஜல் சிங் திறந்து வைத்தார்.

□ பிரிட்டானியா பிஸ்கெட் கம்பெனி யாரின் சென்னை தொழிற்கூடத்தை உதவி ஜனாதிபதி வி. வி. கிரி தொடங்கி வைத்தார்.

□ திரு அழ. வள்ளியப்பாவின் ''பாட்டிலே காந்தி கதை'' என்னும் புத்தகத்தை திரு சி. சுப்பிரமணியம் தலைமையில் கல்வி அமைச்சர் திரு இரா. நெடுஞ்செழியன் வெளியிட்டார்.

□ லிப்டன் கம்பெனியார் ''ரிச்ரு'' என்ற புதிய தேயிலை வகையைச் சமீபத்தில் வெளியிட்டனர்.

□ குமாரி மீரா பிந்து நாராயணியின் பரத நாட்டிய அரங்கேற்றம் சமீபத்தில் நடைபெற்றது.

□ தில்லியில் வேதாந்த தேசிகரது 700வது விழாவில் மத்திய ஒலிபரப்பு - தகவல் இலாக்கா மந்திரி ஸ்ரீ கே. கே. ஷா பங்கு பற்றினர்.




மகாபாரதம்

ராஜாஜி

67. மூன்றும் நாள் யுத்தம்



மூன்றாவது நாள் உதயமானதும் பீஷ்மர் தம் சேனையைக் கருட வியூகமாக அமைத்துத் தாமே அதன் முன்னணியில் நின்றார். துரியோதனன் வியூகத்தின் பின் பக்கத்தில் தன் பரிவாரத்துடன் நின்று காத்தான். மிக்க ஜாக்கிரதையாக எல்லா ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருந்தபடியால் வியூகம் அன்று உடையவே உடையாது என்று கௌரவர்கள் நிச்சயமாக இருந்தார்கள்.

பாண்டவர்கள் தம் சேனையை நன்றாகவே அணி வகுத்தார்கள். தனஞ்சயனும் திருஷ்டத்யும்னனும் கௌரவர்களுடைய கருட வியூகத்தை வளைத்துத் தாக்கப் பாண்டவ சேனையை அர்த்த சந்திர வடிவமாக வகுத்தார்கள். பிறையின் வலப்பக் கத்துக் கொம்பில் பீமனும் இடக் கொம்பில் அருச்சுனனுமாகச் சேனையை இரு பக்கத்திலும் காத்து நடத்தினார்கள்.

இவ்வாறு அணிவகுக்கப்பட்ட இரு சேனைகளும் ஒன்றை ஒன்று தாக்கின. எல்லாப் பகுதிப் படைகளும் போரில் கைகலந்து ரத்தம் ஆறாக ஓடிற்று. தேரும் குதிரையும் யானையும் கிளப்பிய புழுதி சூரியனை மறைத்தது. தனஞ்சயன் மிகக் கடுமையாகத் தாக்கினான். ஆயினும் பகைவரின் வியூகத்தை உடைக்க முடியவில்லை.

பிறகு கௌரவர்களும் பாண்டவர்களின் வியூகத்தை உடைக்கப் பார்த்தார்கள். கௌரவர்களின் முழுப் பலமும் அருச்சுனன் மேல் செலுத்தப்பட்டது. பளபளவென்று மின்னும் கூரிய சக்தியாயுதங்களையும், பரிகங்களையும், ஈட்டிகளையும், முத்கரங்களையும் பரசுகளையும் தனஞ்சயனுடைய தேரின் மேல் வீசினார்கள். விட்டிற் பூச்சிக் கூட்டத்தைப் போல் தன் ரதத்தை நோக்கி வரும் அஸ்திரங்களை அருச்சுனன் அற்புத சாமர்த்தியமாகத் தன் ரதத்தைச் சுற்றி அம்புகளை இடைவிடாமல் செலுத்தி அரண் உண்டாக்கிக் கொண்டு தடுத்தான்.

மற்றொரு பெரும் படையோடு வந்த சகுனியைச் சாத்யகியும், அபிமன்யுவும் எதிர்த்தார்கள். சாத்யகியின் தேர் உடைந்து தூள் தூளாகப் போயிற்று. உடனே அபிமன்யுவின் தேரில் ஏறிக் கொண்டு ஒரே ரதத்தில் இருவருமாகச் சகுனியின் சேனையைத் தாக்கி துவம்சம் செய்தார்கள். துரோணரும் பீஷ்மரும் இருவரும் சேர்ந்து தரும புத்திரன் இருந்த படை வகுப்பைத் தாக்கினார்கள். நகுல சகாதேவர்கள் தரும புத்திரனுக்குச் சகாயமாகச் சென்று துரோணருடைய படையை எதிர்த்தார்கள். பீமனும் கடோத்கஜனும் சேர்ந்து துரியோதனனை எதிர்த்



னார்கள். அந்தப் போரில் கடோத்கஜன் தன் பிதாவை மிஞ்சும்படியான பராக்கிரமத்தைக் காட்டினான்.

பீமனுடைய பாணம் துரியோதனனை அடித்ததனால் அவன் மூர்ச்சையடைந்து ரதத்தில் பிரக்ஞை இல்லாமல் சாய்ந்தான். இதைக் கண்டு அவனுடைய சாரதி தேரை வேகமாகப் போர்க்களத்தினின்றும் அப்புறப்படுத்தினான். துரியோதனன் மூர்ச்சையடைந்ததைக் கண்டு சேனை பீதி அடைந்து அணிவகுப்புக் கலைந்து போகுமென்று அவன் இவ்வாறு செய்தான். ஆனால் அதுவே குழப்பத்துக்குக் காரணமாயிற்று. துரியோதனன் யுத்தகளத்தை விட்டுப் போய் விட்டான் என்று கௌரவ சேனை கலக்கமடைந்து இங்குமங்கும் ஒழுங்கின்றி ஓடியதால், அணிவகுப்பு அடியோடு கலைந்துவிட்டது. ஓட்டம் பிடித்த படைகளைப் பீமசேனன் துரத்திச் சென்று பாணங்களால் துன்புறுத்தினான்.

இவ்வாறு கௌரவ சேனையானது சிதறியோடுவதைத் துரோணரும் பீஷ்மரும் மிகவும் கஷ்டப்பட்டுத் தடுத்து நிறுத்தினார்கள். துரியோதனனும் திரும்ப வந்து நாலா பக்கமும் சிதறிக் கிடந்த சேனையை மறுபடி ஒன்றுகூட்டி அணிவகுத்தான். அதன் மேல் அவன் பீஷ்மரிடம் சென்று, ''நீரும் துரோணரும் நின்று தலைமை வகித்த சேனை இவ்வாறு சிதறியடிக்கப்பட்டு ஓடும் போது அந்த அவமானத்தை எவ்வாறு பொறுத்துக் கொண்டு சும்மா நிற்கிறீர்கள்? பாண்டவர்களிடம் உமக்குள்ள அன்பே இதற்குக் காரணம். 'பாண்டவர்களையும் திருஷ்டத்யும்னனையும் சாத்யகியையும் என்னால் எதிர்க்க முடியாது. அவர்கள் எனக்குப் பிரியமானவர்கள்' என்று ஏன் முந்தியே வியக்தமாகச் சொல்லியிருக்கக்கூடாது? இவர்களை எதிர்ப்பது உண்மையில் உங்களுக்குக் கஷ்டமல்ல. நீரும் துரோணரும் என்னைக் கைவிடுவதாக இருந்தால் இப்போதாவது பளிச்சென்றுசொல்லிவிடலாம்'' என்று பிதாமகரைத் தாக்கிப் பேசினான்.

தோல்வியினால் ஏற்பட்ட மனக் கலக்கத்தாலும், தான் செய்த தவறுதல்கள்

பீஷ்மருக்கு வெறுப்பாக இருப்பதை முதலிலிருந்து அறிந்திருந்த படியாலும் துரியோதனன் இவ்வாறு பேசினன்.

மூர்க்கனுடைய பேச்சைக் கேட்டு பீஷ்மர் சிரித்தார். ''அரசனே! உனக்கு நான் சந்தேகமறச் சொன்ன புத்தி மதியை நீ கேட்கவில்லை. பாண்டவர் களை நீ ஜயிக்க முடியாது என்கிற உண்மையை உனக்கு நான் சொல்லி யும் கேளாமல் நீ யுத்தத்தை ஆரம் பித்தாய். அது என் குற்றமல்ல. ஆயி னும் உனக்காக நான் என் கடமையைச் செய்கிறேன். நான் கிழவன். என் சக்தியின் அளவில் நான் செய்யக் கூடியதைச் செய்வேன். என் முழு பலத்தையும் வஞ்சனையின்றி உன் கண் முன்னல் செலுத்துவேன்'' என்று துரி யோதனனுக்குச் சொல்லி விட்டு மறு படியும் போர் தொடங்கினர்.

முற்பகல் நிகழ்ச்சிகளின் பய ஞகப் பாண்டவர்கள் மிகக் களிப் புற்றிருந்தார்கள். ஓடிய சேனையை ஒன்று சேர்த்து மறுபடியும் பீஷ்மர் தாக்குவார் என்று எதிர்பார்க்கவில்லை. துரியோதனன் இடித்துச் சொன்ன வார்த்தைகள் அவருடைய கோபத்தைத் தூண்டவே சுழலும் கொள்ளிக்கட்டை யின் வட்டத்தைப் போல அவருடைய சஞ்சாரம் யுத்த களத்தில் நாலா பக்க மும் பிரகாசித்தது. அதுவரையில் நடை பெருத கொடூரமான யுத்தம் நிகழ்ந் தது. மாயையினல் தம்மைப் பல பீஷ்மர்களாகச் செய்துகொண்டாரோ என்று எல்லோரும் எண்ணும்படியாகப் பீஷ்மர் ரணகளத்தில் எங்கு பார்த்தா லும் காணப்பட்டார். நெருப்பில் பூச் சிகள் வந்து வீழ்வதைப் போல் வீரர்கள் அவரைத் தாக்கி மாண் டார்கள். பாண்டவ சேனை தைரியம் இழந்து சிதறிப் போக ஆரம்பித்தது. வாசுதேவனும் பார்த்தனும் சிகண்டியும் எவ்வளவு முயன்றும் தடுக்க முடிய வில்லை. அப்போது கிருஷ்ணன், ''தனஞ் சயனே! உன்னுடைய சோதனை காலம் வந்துவிட்டது. பீஷ்மர், துரோணர், பந்துமித்திரர்கள் அனைவரையும் கொல் லப் போகிறேன் என்று நீ செய்த பிர திக்ஞையை நிறைவேற்ற வேண்டிய காலம் இப்போது வந்து விட்டது. நம் முடைய சேனை பயத்தினல் நிலை தவறி யிருக்கிறது. இப்போது நீ பீஷ்மரைத் தாக்க வேண்டும்'' என்ருன்.

''ரதத்தைச் செலுத்து'' என்ருன் அருச்சுனன்.

பீஷ்மரை நோக்கி மிக வேகமாகத் தனஞ்சயனுடைய தேர் சென்றது. பிதாமகர் அதைப் பார்த்துச் சரமாரி பொழிந்தார். அருச்சுனன் காண்டீ பத்தை வளைத்து மூன்று பாணங் களைச் செலுத்திப் பீஷ்மருடைய வில்லை ஒடித்தான். உடனே அவர் வேருெரு வில்லை எடுத்தார். அதுவும் முறிந்தது. அருச்சுனனுடைய லாக வத்தைப் பார்த்து ஆசாரியார் மகிழ்ந்து ''வீரனே வா!'' என்று சொல்லி வேருெரு வில்லை எடுத்துப் பிழையா பாணங்களைப் பொழிந்தார். அந்தத் தாக்குதலை அருச்சுனன் தடுத்த முறை யானது கிருஷ்ணனுக்குத் திருப்தி தர வில்லை. பிதாமகருடைய தாக்குதல் பலமாக இருந்தது. அவர் பேரில் இவன் வைத்திருக்கும் கௌரவத்தால் இவனுடைய கைகள் சரியாக வேலை செய்யவில்லை. தங்களுடைய படை பயந்து ஓடிக் கொண்டிருக்கும் இந்தச் சமயத்தில் இவ்வாறு தயங்கினல் காரியம் கெட்டுப் போகும் என்று கிருஷ் ணன் தனக்குள் எண்ணினன். தேரை மிகத் திறமையாக வளைத்து வளைத்து ஓட்டினன். ஆயினும் உடலில் பல இடங்களில் அருச்சுனனும் கிருஷ்ணனும் அம்புகளால் அடிபட்டார்கள். ஜனர்த் தனனுடைய கோபம் பொங்கிற்று.

''இதை இனிப் பொறுக்க முடியாது. பீஷ்மரை நானே கொல்லுவேன்!'' என்று கிருஷ்ணன் குதிரைகளின் கடி வாளத்தை விட்டு விட்டுச் சக்ரா யுதத்தைக் கையில் பிடித்துத் தேரி னின்று கீழே குதித்தான். குதித்துப் பீஷ்மர் இருந்த இடம் நோக்கி மிக வேகமாகச் சென்ருன்.

பீஷ்மரோ இதைக் கண்டு கலக்க மடையவில்லை. சந்தோஷ முகத்தோடு, ''வா! வா! தாமரைக்கண்ணு, மாதவா, லோக நாதா! உன்னை வணங்குகிறேன்; எனக்காகத் தேரிலிருந்து இறங்கினயா? நீயே என் உயிரைக் கொள்வாயாக! மூவுலகத்திலும் எனக்குப் புகழ் அளித்த வனவாய்; உன் கையாலேயே நான் கொல்லப்பட்டால் மீளாப் பதவியை அடைவேன்'' என்று கூறினர்.

காரியம் கெட்டுவிட்டது என்று அருச் சுனன் ரதத்தை விட்டுக் கீழே இறங்கி, அதிவேகமாகச் சென்று கொண்டிருந்த கிருஷ்ணனைத் துரத்திக் கொண்டு ஓடி னன். வெகு சிரமப்பட்டுக் கிருஷ்ணனைப் பிடித்துக் கொண்டான். ''கோபம் வேண்டாம்! திரும்புவாயாக. இந்தக் காரியத்தை நான் செய்கிறேன்'' என்று அருச்சுனன் சொன்ன பின் கிருஷ்ணன் மறுபடியும் தேர் ஏறிக் குதிரைகளை நடத்தலானன்.

அதன் பின் அருச்சுனன் கௌரவப் படையைப் பலமாகத் தாக்கி ஆயிரக்

கணக்கான பேர்களை வதம் செய்தான். அன்று மாலை யுத்தம் முடிந்ததும் கௌரவ சேனை பெரும் தோல்வியுற்றுத் தீவட்டிகளின் வெளிச்சத்தில் பாசறை திரும்பிற்று.

''அருச்சுனன் வெற்றி பெறுவது தகுந்ததே. அவனுடைய சாமர்த்தியத்தை வேறு யார் படைத்திருக்கிறார்கள்?'' என்று ஒருவருக்கொருவர் சொல்லிக் கொண்டு போனார்கள்.

68. நான்காவது நாள்

யுத்த நிகழ்ச்சிகள் தினம் ஒரே மாதிரியாகத்தான் இருக்கும். அடிப்பதும் கொல்லுவதும் தவிர வேறு ஒன்றுமே இல்லை. கதையில் சுவாரஸ்யம் இருக்காது. ஆயினும் பாரதக் கதையில் யுத்தமே பெரும் நிகழ்ச்சி. அதை விட்டு விட்டால் கதாபாத்திரங்களின் உணர்ச்சி வேகங்களை நாம் சரியாக உணர முடியாது.

பொழுது விடிந்தவுடன் பீஷ்மர் கௌரவ சேனையை மறுபடி அணி வகுத்தார். துரோணர், துரியோதனன் முதலியோரால் சூழப்பட்டு நின்ற பிதாமகர் தேவர்களால் சூழப்பட்ட வஜ்ராயுதபாணியான இந்திரனைப் போல் விளங்கினார். அணி வகுக்கப்பட்ட சேனையானது மகா ரதர்களும், யானைகளும், குதிரைகளும் நிறைந்து, மேகமும், மின்னலும், இடி முழக்கமும் நிறைந்த மாரிக் காலத்து ஆகாயம் போல் விளங்கிற்று. பிதாமகர் சேனையை முன் செல்லக் கட்டளையிட்டார். வானரக் கொடி பறந்த தேரின் மேல் நின்ற அருச்சுனன் பிதாமகருடைய காரியங்களைத் தூரத்தினின்று பார்த்தான். அவனும் ஆயத்தமானான். யுத்தம் தொடங்கிற்று.

அசுவத்தாமனும், பூரிசிரவசும், சல்லியனும், சித்ரசேனனும், சலனுடைய மகனும் ஆகிய ஐவரும் அபிமன்யுவைச் சூழ்ந்து கொண்டு தாக்கினார்கள். ஐந்து யானைகளை ஒரு சிங்கம் எதிர்ப்பதுபோல் அவன் இந்த ஐவரையும் எதிர்த்துப் போர் புரிந்தான். பலர் சூழ்ந்து கொண்டு தன் குமாரனைத் தாக்குவதைப் பார்த்த அருச்சுனன் கோபம் கொண்டு சிம்மநாதம் செய்து மகனுக்கு உதவியாக வந்து சேர்ந்தான். அதன்மேல் போரின் வேகம் இன்னும் அதிகரித்தது. திருஷ்டத்யும்னனும் பெரியதொரு படையுடன் வந்து சேர்ந்தான்.

சலனுடைய மகன் கொல்லப்பட்டபடியால் சலனும் சல்லியனும் திருஷ்டத்யும்னனைப் பலமாகத் தாக்கினார்கள். திருஷ்டத்யும்னனுடைய வில்லைச் சல்லியன் ஒரு கூரிய பாணத்தை வீசி அறுத்தான். இதைக் கண்ட அபிமன்யு சல்லியன் மேல் அம்புகளைப் பொழிந்தான். அபிமன்யுவின் கோபத்தைப் பார்த்து சல்லியனுக்கு அபாயம் வந்தது என்று துரியோதனனுடைய தம்பிகளும் வந்து சல்லியனைச் சூழ்ந்து காத்தார்கள். அச்சமயம் பீமசேனனும் வந்து சேர்ந்து விட்டான்.


பீமன் கதாயுதத்தைக் கையில் எடுத்தான். அப்போது தன் தம்பிகளும் நடுங்கியதைக் கண்ட துரியோதனனுக்குக் கோபம் உண்டாயிற்று. பெரியதொரு யானைப் படையை பீமன் மேல் செலுத்தினான். யானைகளைக் கண்டதும் பீமன் ரதத்தினின்று இறங்கிக் கையில் இரும்புக் கதையை எடுத்துக் கொண்டு அந்த மிருகங்களைத் தாக்கினான். அவை வெருண்டு ஒன்றை ஒன்று தாக்கவாரம்பித்தன. பாண்டவ சேனை வீரர்கள் அந்தச் சமயத்தை உபயோகித்து யானைகள் மீது சரங்களைப் பொழிந்து அவற்றை இன்னும் வெறி கொள்ளச் செய்து விட்டார்கள்.

பீமன் யானைக் கூட்டத்தில் பிரவேசித்து அவைகளை வெட்டிக் கொன்றது பூர்வத்தில் இந்திரன் மலைகளைப் பிளந்து வீழ்த்திய காட்சியைக் காட்டிற்று. அம் மிருகங்கள் பெருங்கணக்கில் மாண்டு வீழ்ந்து அந்த யுத்த களத்தில் பர்வதங்கள் போல் கிடந்தன. எஞ்சித் தப்பின யானைகளும் இங்குமங்கும் ஓடிக் கௌரவப் படையையே நாசம் செய்தன. பிறகு துரியோதனனுடைய கட்டளைப்படி எல்லாப் படைகளும் பீமனை எதிர்த்தன. அவனோ அசைவற்று மேருவைப்போல் காட்சி தந்தான்.

அச் சமயம் பாண்டவ சைன்யத்தில் முக்கியமான வீரர்கள் அவனுக்குச் சகாயமாக வந்து சேர்ந்தனர்.

துரியோதனன் எய்த பாணங்கள் பல பீமசேனனுடைய மார்பில் தைத்துத் துன்பப்படுத்தின. பீமசேனன் மறுபடியும் தேரின் மேல் ஏறித் தன் சாரதியான விசோகனைப் பார்த்து ''விசோகனே! இந்த யுத்த களத்தில் இப்போது என் முன்பாக திருதராஷ்டிர புத்திரர்கள் இவ்வளவு பேரும் வந்து நிற்பது எனக்கு மகிழ்ச்சி தருகிறது. என்னுடைய ஆசையான மரத்தில் பழங்கள் தோன்றியவாறு இவர்கள் இன்று என் கையில் சிக்கினார்கள். குதிரைகளைச் சரியாக இழுத்துப்பிடித்து நடத்து. இவர்களை நான் யமாலயம் அனுப்புகிறேன்'' என்றான். **(தொடரும்)**

டாடாவிஷன்



டாடாவின் பெருநோக்கு. தீர்க்க தரிசனமுள்ள கருத்துக்கள் இருந்து என்ன? அவை மக்களிடையே பரவாவிட்டால் என்ன பயன்?—அவை மக்களைத் துருதுரு என்று செயல்படுத்த வேண்டாமா?

ஜாம்ஷெட்பூரில் நல்ல கருத்துக்கள் செயலாகாமல் வீணாவதில்லை. ஏற்ற உதவிகளும் சூழ்நிலையும் அங்கே உள்ளன. இத்தகைய ஒன்றே குடும்ப நலத்திட்டம்.

இந்தத் திட்டம் ஜாம்ஷெட்பூரில் தொடங்கிய மூன்று ஆண்டுகளுக்குள் 'விவாத-வட்டங்களில்' கலந்து கொள்வோர் தொகை பத்து மடங்காக உயர்ந்து விட்டது. விவாதத்தின் விளைவாக எழுந்த தெளிவான உறுதி: 1965-இல் ஜாம்ஷெட்பூரில் பிறப்புவிகிதம் குறையத் தொடங்கி விட்டது.

டாடா எஃகு ஸ்தாபனத்தின் குடும்ப நலத் திட்டத்தினால் ஜாம்ஷெட்பூர் மக்களுக்கு என்ன பயன்?

இரண்டு நவீன நகரத்துக் குடும்பத் திட்ட நிலையங்களும் ஆறு பிரசவ, குழந்தை பராமரிப்பு விடுதிகளும் இனாமாகக் குடும்பக் கட்டுப்பாட்டு சாதனங்களை வழங்குகின்றன, ஆலோசனை கூறுகின்றன.

இரண்டு நகர நிலையங்களிலும் டாடா மெயின் ஆஸ்பத்திரியிலும் 'வாஸெக்டமி' ஆபரேஷன் செய்யப்படுகிறது. அதைச் செய்து கொள்ளும் கம்பெனி ஊழியருக்கு ஆபரேஷன் செலவு இல்லை. அதோடு ரொக்கப் பரிசாக ரூ. 200/- தரப்படுகிறது. போனவருஷம் ஆகஸ்டு டிசம்பர் காலத்தில் 1650 பேர் ஆபரேஷன் செய்து கொண்டதில் வியப்பில்லை. கம்பெனி ஊழியரின் மனைவியர் 'டியூபெக்டமி' ஆபரேஷன் செய்து கொண்டாலோ, 'லூப்' பொருத்திக் கொண்டாலோ ஊக்கப்படுத்தும் வகையில் ரொக்கம் வழங்கப்படுகிறது.

டாடா ஸ்டீல்

TN 4424

எழுத்தில் புதுமை



ஒரு புளிய மரத்தின் கதை

நாலு இடங்களுக்கு ஓடியாடிப் பாடுபடும் மனிதனைக் கதாநாயகனாக வைத்து எழுதப்படும் நாவல்களில் பல சோடை போயிருப்பதை நினைவுபடுத்திக் கொண்டால், அசரமான ஒரு புளிய மரத்தை வைத்துக்கொண்டு சுந்தர ராமசாமி எழுதியுள்ள இந்த நாவலை அந்தப் புதுமை ஒன்றுக்காகவே பாராட்டத் தோன்றும்.

'ஒரு புளிய மரத்தின் கதை' என்ற பெயருக்குப் பொருத்தம் தேடுகிறவர்கள் முதல் இரண்டு அத்தியாயங்களிலும், கடைசி அத்தியாயத்திலும் அதைக் காண்பார்கள். மற்றபடி நாவலில் அடிக்கடி புளிய மரத்தின் பெயர் அடிபடுகிறதே தவிர, அது முழுக்க முழுக்க அந்த மரத்தைச் சுற்றிலுமுள்ள கடைவீதிப் பிரமுகர்களைப் பற்றிய கதையேதான்!

புளிய மரத்தைப்பற்றி நிறையக் கதைகள் சொன்ன தாமோதர ஆசான்தான் நாவலின் பெயரைக் காப்பாற்றித் தருபவர். அதன் பிறகு புளிய மரத்தைத் 'தாச்சி' போல வைத்து அப்போதைக்கப்போது அதைத் தொட்டுக் கொண்டவாறே பல கதைகளைச் சொல்லிப் போகிறார் ஆசிரியர்.

ஆசான் சொன்ன கதைகளில் செல்லத்தாயியின் கதையும், புளிய மரம் வெட்டுப்படுவதிலிருந்து அதை அவர் காப்பாற்றிய கதையும், பூரம் திருநாள் மகாராஜா பவனி வந்தபோது நடைபெற்ற சம்பவங்களின் விளைவாகப் புளிக் குளம் சுத்தமடைந்து சுற்றுப்புறம் இந்திர லோகமாக மாறிய கதையும் சுவாரஸ்யமானவை.

பிறகு நாவலாசிரியர் ஆரங்குமூஞ்சி மரத்தோப்பு எப்படி நவீன பார்க்காக உருவெடுத்தது என்பதை விஸ்தாரமாகச் சொல்லி அந்தப் பூங்கா விநோதங்களையும் வர்ணிக்கிறார். இதற்குப் பிறகு புளிய மரத்திலிருந்த காய்களை ஊர்த் தோட்டிகளும், பள்ளிக்கூடப் பிள்ளைகளும் கல்லாலடித்து உதிர்த்த சம்பவம் நிகழ்கிறது. இதை ஒட்டி, அந்த ஊர்ப் பிரமுகர்களிடையே ஏற்பட்ட வாக்குவாதங்களையும், போட்டி பூசல்களையும், அவற்றின் விளைவாகப் புளியமரம் நஞ்சூட்டப்பட்டுப் பட்டுப்போன சம்பவத்தையும் விவரித்து நாவலை முடிக்கிறார் ஆசிரியர். இந்தப் பிற்பகுதியில்தான் வாசகர்களுக்குச் சில கதாபாத்திரங்களை அறிமுகம் செய்துகொள்ளும் வாய்ப்புக் கிடைக்கிறது. தக்கலை அப்துல் காதர், மகாதானபுரம் கோபால அய்யர், தியாகி தாமு, பத்திரிகாசிரியர் இசக்கி இவர்களுடைய வாழ்வையும் தாழ்வையும் தத்ரூபமாகப் படம் பிடித்துக் காட்டுகிறார் சுந்தர ராமசாமி.

இந்த நாவலின் வெற்றிக்கு, சுந்தர ராமசாமி கையாண்டுள்ள திருநெல்வேலிச் சீமைத் தமிழ் ஒரு முக்கிய காரணம். கதைக் களஞ்சியம், கதைப் பொக்கிஷமான தாமோதர ஆசான் குரலைக் கேட்க வேண்டாமா?

''இந்த மரத்திலே நன்மையும் இருக்கு, தீமையும் இருக்கு. பாம்பும் பாம்பும் புணைஞ்சாப்லே புணைஞ்சுக் கிட்டுக் கெடக்கு ரெண்டும். ஒண்ணிலேருந்து ஒண்ணே எதமாப் பிரிச்சுப் போடணும், அமிசப்பச்சி பாலையும் தண்ணியையும் பிரிக்கிறாப்புலே. ஆரு ஒண்ணு சொல்லுதேன்....''

இனி ஒரு சில பாத்திரங்கள் மூலம் வெளிவரும் அந்தத் தென் பாண்டி நாட்டு மொழி, கும்மாளி போடுவதைக் கேளுங்கள்! தொழிலாளர்களைத் தூண்டிவிட்டால் அவர்கள் எதை எதையோ கேட்கிறார்கள் அல்லவா? அதை ஒருவர் விவரிக்கிறார்:

''பாவம் போல வேலை பாத்துக்கிட்டு இருந்தவனுகளே எந்த நிலையிலே கொண்டாந்துட்டாரு பாருங்க. பஞ்சப்படி இங்கான். அலவன்ஸ் இங்கான். பலசரக்குக் கடை வெச்சுத் தாங்கான். பிரசவ லீவு குடுங்கான். வாரியலுக்குக் குஞ்சலம் கட்டணுமாம். தோட்டிச்சி சொல்லுதா. அப்பம்தான் ஸ்டைலாட்டு இருக்குமாம். சீலையும் சம்பரும் தானா? பாடிக கிடையாதா? நாடா போட்டு பின்னாலே கட்டு தாலே.... யாரு? தோட்டிச்சி கேக்கா இங்கேன்!''



ஜனநாயகத்தை நையாண்டி செய்கிறார் ஒருவர்:

"ஒரு ராஜ்யம்னு சொன்னா ஒருத்தன் சொல்லணும். அடுத்தவன் கேக்கணும். இது பயித்தாரக் கூத்தாட்டால்லா இருக்கு. என் வீட்லே நானும் சொல்வேன், அவளும் சொல்லுவா, புள்ளேகளும் சொல்லும், வண்டிக்காரனும் சொல்வான், சாம்பானும் சொல்வான்னு உண்டும்னா, கேக்குதுக்கு யாரு ?"

சுந்தர ராமசாமிக்கு நகைச்சுவை இயல்பாக வருகிறது.

முனிசிபாலிடி சிப்பந்தி வள்ளிநாயகம் பிள்ளை, வரி கொடுக்காமல் டிமிக்கிக் கொடுப்பவரை அமுக்க நகரத் தந்தைக்கு யோசனையும், அதே மூச்சில் அந்த நபர் தப்புவதற்கு யோசனையை அவருக்கும் சொல்லித் தருவாராம். "முன்னது மாதச் சம்பளத்துக்காகவும், பின்னது மாதாந்திரப் பற்றாக்குறையைத் தீர்ப்பதற்காகவும். இந்த இரண்டு வேலைகளையும் ஒருங்கே கவனித்து வருவதால்தான் அவரும் மனைவி குழந்தைகளும் ஜீவித்து வருகிறார்கள்."

"ஊரில் ஆடு வளர்ப்போர் எல்லோரும் முனிசிபாலிட்டிக்குச் சொந்தமான மரங்களை நம்பித்தான் ஆடு வளர்த்தார்கள். முனிசிபாலிட்டிக்குச் சொந்தமான ஆலங்குழையைப் | போட்டு ஆடுகளைப் பேணி, தாங்கள் பாலைக் கறந்து எடுத்துக் கொள்வதுதான் ஆடு வளர்ப்பதில் அவர்கள் கண்ட கவர்ச்சிகரமான அம்சம்."

"யானைக் குட்டி யானைக் குட்டியாகப் போடப்பட்டுள்ள கல் தொட்டிகளில் பாலைக் கரைத்து நிரப்பியதும் அலை மோதும். மகாவிஷ்ணு பார்த்தால் குடிமாற்றம் செய்து கொண்டு விடுவார் !"

பவுடர் பாலில் தண்ணீர் அதிகம் கலந்து விடுவதைப் பார்த்து, 'ரன்னிங் காமெண்டரி' கொடுக்கும் ஒரு மாணவன் அலறுவதைக் கேளுங்கள்:

"டப்பாவை உடைக்கறுங்க டோய்.... தண்ணியெ ஊத்தறுங்க டோய்.... வேய் கொஞ்சமாட்டு ஊத்தும் வேய்.... என்ன வேய், மடமடானு கொட்டுதிரே...."

இப்படிப் பல கருத்துக்களை நகைச்சுவையோடு புளியம் பழம் சடபடவென்று விழுவது போல ஆங்காங்கே உதிர்த்துக் கொண்டு போகிறார் ஆசிரியர்.

"காதருக்கு யாரையும் கூச்சமின்றி அண்டத் தெரிந்திருந்தது. காரியம் நிறைவேறியபின் அவர்களைப் பரிபூரணமாகவும் மறக்க முடிந்தது அவனால். தர்மம் என்பது இரும்பு உலக்கை என்று எண்ணி, அவன் தன்னை ஏமாற்றிக் கொள்ளவும் இல்லை."

"எதையேனும் ஒன்றை இழந்து தன்னைக் காப்பாற்றிக் கொண்டு விடுவது என்பது எப்போதுமே புத்திசாலித்தனமான காரியம் தானே ?"

"இழப்பதற்குப் பல்லிக்கு வாலும், பெண்ணுக்குக் கற்பும், மனிதனுக்குக் கொள்கையும்...."

சமூகத்தின் நாலு பேர் ஒப்புக் கொள்ளத் தயங்கும் இத்தகைய சில கருத்துக்களையும் சொல்லிப் போகிறார் சுந்தர ராமசாமி.

இந்த நாவலின் பிற்பகுதியில் காதர், கோபாலய்யர், தாமு இவர்களைப் பற்றி ஆசிரியர் தந்திருக்கும் பல தகவல்களை வைத்துக் கொண்டு அவர்களைப் பற்றித் தனித் தனியாக மூன்று நாவல்களை எழுதலாம். அத்தனையையும் இந்த நாவலிலேயே சொல்லித் தீர்த்து விட்டாரே என்றுதான் சொல்லத் தோன்றுகிறது.

புளிய மரத்தின் மீது சினிமா, டிராமா போஸ்டர்களைச் சிலர் ஒட்டிய மாதிரி, சுந்தர ராமசாமி இந்த மரத்தின் மீதும், அதன் கொப்புகள் மீதும் தமக்குப் பிடித்தமான பல கருத்துக்களை ஒட்டித் தொங்கவிட்டிருக்கிறார். இந்த அவசரத்தில் சில சொற்றொடர்கள் கவனக் குறைவாக விழுந்திருப்பதையும் காண்கிறோம். "அஞ்சா நெஞ்சம் படைத்த உள்ளத்தையும்" (பக்கம்: 47), "அரசன் தெய்வ அவதாரமா, அல்லது தெய்வம் அரசனின் அவதாரமா?" (பக்கம் 50), "இரவு போஜனத்தை 'சமத்காரமாக' முடித்துக் கொண்டு" (பக்கம் 54).

கன்யாகுமரி மாவட்டம் நாகர் கோவிலில் 30—5—1931ல் பிறந்த திரு சுந்தர ராமசாமி பல சிறுகதைகளின் ஆசிரியர். 'அக்கரைச் சீமையில்' (1959), 'பிரசாதம்' (1964) இரண்டும் இவருடைய சிறுகதைத் தொகுப்புக்கள். தகழி சிவசங்கரன் பிள்ளையின் மலையாள நாவல்களான 'செம்மீன்', 'தோட்டியின் மகன்' இரண்டையும் மொழிபெயர்த்திருக்கிறார். இவருடைய இந்த 'ஒரு புளிய மரத்தின் கதை' திரு வ. விஜயபாஸ்கரன் நடத்தி வந்த 'சரஸ்வதி' என்னும் இலக்கிய மாதப் பத்திரிகையில் 1959ல் எழுதத் தொடங்கி அதை அப்போது தொடர முடியாமல் போகவே சிறுகச் சிறுக எழுதி 1966ல் புத்தக உருவில் வெளியிட்டார்.

"இலக்கியம் படைக்கும் போது, தமிழன்னைக்கு நவநவமாம் ஆபரணங்களைச் சூட்டுவதாக அல்ல எண்ணம். தன் கழுத்திலேயே மாட்டிக் கொண்டு அழகு பார்க்கும் ஆசைதான் அவனுக்கு" என்கிறார் ஆசிரியர்.

"சின்ன வயதில் அனுபவம் குறைவாக உள்ள காலத்தில் எழுதினதாலேயே நூல் தரம் நிறைந்து இராது என்பது சரியல்ல" என்பது சுந்தர ராமசாமியின் கொள்கை. "வயோதிகத்தில் எழுதப்பட்ட தரமற்ற படைப்புக்களுக்கு நம் மொழியில் மட்டுமல்ல உலக மொழிகளிலும் உதாரணங்கள் சொல்லலாம் " என்கிறார்.

"கலை உலகில் அங்கீகரிக்கப்பட்ட தத்துவங்களுக்குத் தலைகாணி உறை தைப்பவன் கலைஞனே அல்ல" என்பதும் அவர் அபிப்பிராயம்.

" இது என் முதல் நாவல்" என்று இரண்டு மூன்று முறை சொல்லித் தப்பித்துக் கொள்ளப் பார்க்கிறார் ஆசிரியர். அவர் அப்படிப் பயப்படத் தேவையே இல்லை. இதைவிடப் பலர் விரும்பும் நாவலை அவர் பிற்காலத்தில் எழுதக்கூடும். ஆனால் இந்த நாவலிலும் பலர் விரும்பக்கூடிய அம்சங்கள் இருக்கத்தான் செய்கின்றன.

— மகரம்


வெளியிட்டவர்கள்: தமிழ்ப் புத்தகாலயம் சென்னை — 5; விலை: ரூ. 4-50.


007 பாலு
கதை: குமரன்
படம்: விஜயா
5
நிழல் நீண்டிருப்பதைப் பார்த்துச் சந்தேகித்துத் திரும்ப நினைத்தான் முத்து. அதற்கு முன்னால்....
இந்த கராட்டே ஜூடோ யுத்த முறைகளைப் பற்றிப் படித்து வைத்துக் கொண்டதும் நல்லதாயிற்று.
அடுத்த காரியம் என்ன? மூளையே! யோசனை செய்! ஆ! அதுதான் சரி!
முன் அறையிலிருந்த கேடிக் கூட்டம் முத்துவின் அலறலைக் கேட்டுத் திகைப்பிலிருந்து விடுபட்டு வருவதற்குள்....
...பாலு மெயின் ஸ்விட்சை அணைத்து விட இருள் சூழ்ந்தது.
இருளைத் துணை கொண்டு தப்பிய பாலு, மெயின் ரோடுக்கு ஓடி வந்து மக்களில் ஒருவனாகக் கலந்து விட்டான்.
சிறிது நேரத்துக்குப் பிறகு பாலு சந்திராவிடம் நடந்ததையெல்லாம் விவரித்துக் கொண்டிருந்தான்.
பாலு! நிலைமை எல்லை மீறிப் போய் விட்டது. உன் அப்பாவிடம் சொல்லிப் போலீஸில் தகவல் கொடுத்து விடச் சொல்லு. எனக்குப் பயமாயிருக்கிறது.
ஆகட்டும் சந்திரா, நீ கவலைப் படாதே!
இந்தச் சமயம் வீடு திரும்பிக் கொண்டிருந்த சந்திரன் இவர்கள் பேசுவதை உற்றுக் கவனித்தவாறே நடந்தான்.



பாலு, எதற்குச் சிரிக்கிறாய்? எனக்குச் சந்திரன் மாமாவைப் பார்க்கும் போதெல்லாம் திக்திக் கென்று அடித்துக் கொள்கிறது. நீ சிரிக்கிறாயே?
இல்லை, மருந்தை பிக்பாக்கெட் அடித்தது என்னிடம்தான் என்பதும் மெத்துவை விழுத்தியது நான்தான் என்பதும் இவனுக்குத் தெரியுமானால் உன்னுடன் நான் இப்படிப் பேசிக் கொண்டிருப்பதைப் பார்த்துவிட்டு இவன் இவ்வளவு அமைதியாக நடப்பானா?
ஓகே, சந்திரா! நான் வரட்டுமா?
நான் சொன்னது நினைவிருக்கட்டும். போலீஸிடம் போ! அலட்சியமாய் இருக்காதே! ப்ளீஸ்!
சந்திராவின் யோசனையை ஏற்று பாலு எல்லா விவரங்களையும் தன் அப்பாவிடமும், அவர் நண்பர் உயர் போலீஸ் அதிகாரி பார்த்தனிடமும் கூறினான்.
எஸ். பி. ஸார் ஒரு விஷயம் உங்களிடம் தெளிவாக்கணும்
... நம்ப பாலு இருக்கானே, இவனுக்குத் துப்பறியும் நாவல்கள் படிக்கிறதிலே அளாதி மோகம். அதிலும் ஜேம்ஸ்பாண்ட் நாவல் ஒண்ணு கூடப் பாக்கி வைக்க மாட்டான்!
அப்பா! அதற்கும் இதற்கும் ஒரு சம்பந்தமும் இல்லை. பார்த்தன் மாமா! இது ஸீரியஸ் விஷயம்.
ஆகட்டும் பாலு! ரொம்பத் தீவிரமாகவே காரியத்தில் இறங்குகிறேன். நீ என்ன நினைக்கிறாய்?
'வாடியா பாங்க் கொள்ளை' என்ற வார்த்தைகள் என் காதில் தெளிவாக விழுந்தன.
அதனால் வாடியா பாங்கில் கொள்ளை நடக்கப் போகிறது என்கிறாய் அப்படித்தானே? ஆனால்....
தொடரும்...

பூட்டை இயக்க ஒரே இணைப்பு!



நவ-தால் பூட்டும் அதன் சாவியும். ஒவ்வொரு நவ-தால் பூட்டும் தனித் தன்மையுடையது. அதற்கென்றே தனியான லீவர் இணைப்பு, தனியான சாவி. ஒன்றைப் போல் அல்ல மற்றது! இதனால் தான் நவ-தால் முற்றிலும் நம்பத்தக்கது. மறு சாவியி னால் திறக்க முடியாதது, உடைக்க முடியாதது.

உறுதியான அமைப்புள்ள நவ-தால் இரட்டைக் கூடு கொண்டது; வெளிப்புறம் ரிவெட் இல்லாத பித்தளை, உட்புறம் எஃகு. நுட்பவேலைப் பாடுடைய பருமனான பித்தளை லீவர்கள், வலிமை யான அமைப்பு. தவிர, காட்மியம் பூச்சு செய்த அதிக உறுதியான எஃகு தளை (ஷாக்கிள்) அதிக பட்சம் பாதுகாப்பை அளிக்கிறது.

தயாரிப்பவர்கள் கோத்ரெஜ்-70 ஆண்டுகளுக்கும் மேலாக பாதுகாப்பு உப -கரணங்களைத் தயாரிப்பதில் பெயர் பெற்றவர்கள்.

நவ-தால்

3 சைஸ்கள்;
50 mm (6 லீவர்கள்)
67 mm (7 லீவர்கள்)
85 mm (8 லீவர்கள்)

Godrej கோத்ரெஜ் எப்போதும் கேட்டு வாங்குங்கள். நங்கூரம் பிராண்டு

காஞ்சல் கோபுரம்

ஜெகசிற்பியன்



அத்தியாயம் ஐந்து

இலட்சிய வெற்றி

பம்பாயில் மராத்திப் பெண்ணொருத்தியைத் தான் காதலித்ததாகவும், அவனுடைய தந்தை உத்தியோக நிமித்தம் உடனடியாக வெளிநாடு ஒன்றுக்குச் செல்ல வேண்டியிருந்ததால் திடுதிப்பென்று அவளைப் பதிவுத் திருமணம் செய்து கொள்ள நேர்ந்து விட்டதென்றும், அதற்காகத் தன்னை மன்னித்து ஆசீர்வதிக்கும்படியும், இன்னும் ஒரு வாரத்தில் தன் மனைவியுடன் இங்கு பத்து நாள் லீவில் வருவதாகவும் அந்தக் கடிதத்தில் எழுதியிருந்தான் தில்லைநாதன்!

முத்துசிவனுக்கு முதலில் இவ்விஷயம் நெஞ்ச நடுக்கத்தை ஏற்படுத்தி விட்டதென்றாலும், நடந்து போன காரியம் பற்றி இனி வருந்திப் பயனில்லை என்று தன்னை ஒருவாறு சமாளித்துக் கொண்டான். ஏதோ ஒரு தவிர்க்க முடியாத நெருக்கடியினால்தான் தம்பி அவ்வாறு துணிந்து செய்து விட்டிருப்பான் என்று தனக்குத் தானே சமாதானம் சொல்லிக் கொண்ட அவன், இன்னும் கொஞ்சம் முன்னதாகவே தம்பிக்குத் திருமணம் செய்யும் முயற்சியில் முனைந்திருந்தால் இப்படி ஒரு காரியம் நடப்பதைத் தவிர்த்திருக்கலாம் என்று தன்னையே நொந்து கொண்டான்.

இயற்கையிலேயே தில்லைநாதன் அவசர புத்தி படைத்தவன். முன்பின் யோசியாமல் எதையும் துணிந்து செய்துவிடுவான். முன் கோபக்காரன்; முரட்டுப் பேர்வழியும்கூட. ஆனால் கெட்டிக்காரன்; நேர்மையானவன்.

கடிதத்தில் தெரிவித்தபடியே தன் புது மனைவியுடன் அண்ணன் வீட்டுக்கு வந்து சேர்ந்தான் தில்லைநாதன்.

அன்னபூரணியம்மாள்தான் கொஞ்சம் முகச் சுளிப்புக் காட்டினாளே தவிர முத்துசிவன் தனது அதிருப்தியையும் மனச் சஞ்சலத்தையும் உள்ளடக்கிக் கொண்டு அந்தப் புதுத் தம்பதியரை அன்புடன் வரவேற்று தடபுடலாக விருந்துகள் நடத்தித் தம்பியின் கல்யாணத்துக்கென ஒதுக்கி வைத்திருந்த பணத்தை அவன் கையிலேயே ரொக்கமாகக் கொடுத்து, ஊர் போய்ச் சேர்ந்ததும் அவனுக்கு அவசியப்படும் நகைநட்டுகள், துணிமணிகள், குடித்தனம் பண்ணத் தேவையான வீட்டுச் சாமான்கள் ஆகியவற்றை வாங்கிக் கொள்ளுமாறு சொல்லி நல்லபடியாக வண்டியேற்றி அனுப்பி வைத்தான்.

இங்கு வந்து இருந்த சில நாட்களில் தில்லைநாதனின் மனைவி லதா நடந்து கொண்ட பண்பும் சீலமும் வாய்ந்த நடத்தைகள் முத்துசிவனின் மனத்திலிருந்த அதிருப்தியை அறவே அகற்றிவிட்டன. தம்பிக்கு ஏற்ற மனைவிதான் அவள் என்று அமைதியடைந்தான்.

இதெல்லாம் நடந்து முடிந்த மறு வாரத்தில் ஒரு நாள் சுகுணா அவனைச் சந்தித்தாள். முன்னைப் போலவே அது சாதாரண சந்திப்புத்தான். அவனுக்காகத் தான் ஒருத்தி காத்திருப்பதை அவனுக்கு நினைவுறுத்திப் போகவே அவள் அவனைப் பார்த்துச் சென்றாள் என்பதை அவனும் உணராமலில்லை. அவள் இப்போது ஒரு பெண்கள் உயர்நிலைப் பள்ளியில் ஆசிரியையாக வேலை பார்த்து வந்தாள்.

மேலும் மூன்று வருடங்கள் கடந்தன. முத்துசிவன் இப்போது தன் கம்பெனியின் உதவி மானேஜராகப் பதவி உயர்வு பெற்று விட்டான்.

அடுத்து இரண்டாவது தம்பி வலம்புரிக்குத் திருமணம் செய்து வைக்க வேண்டுமென்பதில் அவனுடைய கவனம் திரும்பியது.

வலம்புரி சிறு வயதிலிருந்தே நோஞ்சானாக இருந்தான். அடிக்கடி உடம்புக்கு ஏதாவது வந்து கொண்டேயிருக்கும். இதனால் அவன் ஸ்கூல் ஃபைனலுக்கு மேல் படிப்பைத் தொடரச் சாத்தியப்படாதுபோயிற்று. உள்ளூரிலேயே அச்சகம் ஒன்றில் ஃப்ரூப்-ரீடராகச் சொற்ப சம்பளத்தில் வேலைக்கு அமர்ந்தான்.

அதிக அலைச்சலின்றி அவனுக்கு ஓரிடத்தில் பெண்ணும் குதிர்ந்தது.


எளிய குடும்பம்தான். சிறு வயதிலேயே பெற்றோரை இழந்து சிற்றப்பாவின் ஆதரவில் வளர்ந்த பெண். அவள் தான் சுந்தரி. குப்பையில் குன்றிமணி போல் அந்த எளிய குடும்பத்தில் பிறந்த அவள் எழிலின் இலக்கண மாகத் திகழ்ந்தது ஓர் அதிசயம் தான். நோஞ்சான் வலம்புரி அதிர்ஷ் டக்காரன் !

இந்தத் திருமணத்தை அடக்கமாக நடத்தி முடித்து அவர்களுக்குப் பக் கத்துத் தெருவில் ஒரு சிறிய வீடு பார்த்துத் தனிக் குடித்தனமும் பண்ணி வைத்தான் முத்துசிவன்.

ஆண்டுகள் நான்கு ஓடின. அடுத்து கடைக்குட்டி தங்கை மைதிலிக்குத் திருமணம் செய்து விட்டால் முத்து சிவனின் இலட்சியம் முழுமையடைந்து விடும்.

மைதிலி பி. யூ. சி. படித்துக் கொண்டிருந்தாள். வீட்டுக்குச் செல் லப் பெண். குறும்புக்காரி. எப் போதும் ஆட்டமும் பாட்டும் சிரிப்பு மாக இருப்பாள். படிப்பில் அதிக அக்கறை கிடையாது.

அதனால் அவளுக்குச் சீக்கிரமே திருமணம் செய்துவிடத் தீர்மானித்து. மாப்பிள்ளை வேட்டையில் இறங்கினான்



முத்துசிவன். நல்ல வலுவான இடத்தில் ஒரு பையனும் கிடைத்தான்.

அவனுக்கு பெங்களூர் இந்துஸ்தான் விமானத் தொழிற்சாலையில் வேலை. ஐந்நூறு ரூபாய் சம்பளம் கௌரவமும் கண்ணியமும் வாய்ந்த பெரிய குடும்பம். எனவே, தன் சக்திக்கு மீறிக் கடன் உடன்பட்டுத் தனது இல்லத்திலேயே மைதிலியின் திருமணத்தைச் சிறப்பாக நடத்தி முடித்து, இன்று பெண்ணைப் பிள்ளை வீட்டாருடன் கூட்டி வண்டி யேற்றியும் அனுப்பி விட்டான் முத்துசிவன்!.....

என்ன அற்புதமான மனிதன் அவன்! இடிந்து இலமாகக் கிடந்த தன் குடும்பம் எனும் ஒரு கோயில் கோபுரத்தைத் தான் ஒருவனே தீரமாகத் தொழிற்பட்டு ஜீரணோத்தாரணம் செய்து இன்று காண்போர் வியக்கும்படியாகவும், கையெடுத்து வணங்கும்படியாகவும் பொலிவுடன் ஆக்கி முடித்ததன் மூலம் தன் இலட்சிய நோன்பில் மகத்தான வெற்றி கண்டு விட்ட அவனை ஏன் ஒரு மாமனிதன் என்று சொல்லக்கூடாது?

இவ்வாறு புதிக்கப் பெற்ற அந்தக் கோயில் கோபுரத்தைக் குடமுழுக்காட்டி விடவேண்டியது ஒன்றுதான் இன்னும் பாக்கி உள்ளது. அதாவது, முத்துசிவனின் திருமணம் என்ற கும்பாபிஷேகம்!....

ஃ ஃ ஃ


"ஜானுக்கா! அதோ, அண்ணா வர்றார்!''

ரயிலுக்குப் புறப்படத் தயாரான நிலையில் தன் அண்ணனை எதிர்பார்த்தபடி வராந்தாவில் நின்று கொண்டிருந்த தில்லைநாதன் குரல் கொடுத்தான்.

ஜானகி பயந்தபடி வந்து எட்டிப் பார்த்தாள். அவள் முகம் மகிழ்ச்சியால் மலர்ந்தது.

வாசலில் நின்ற ரிக்ஷாவிலிருந்து முத்துசிவன் புன்முறுவலுடன் இறங்கி வர, அவனுக்குப் பின்னால் புத்தம் புதிய 'டேபிள் ஃபேன்' ஒன்றைத் தூக்கிக் கொண்டு வந்தான் ரிக்ஷாக்காரன்.

கடந்த ஒரு வாரமாய்க் கல்யாண காரியங்களைக் கவனிப்பதில் பம்பரமாய்ச் சுழன்று கொண்டிருந்த முத்துசிவன் இன்று பெண்ணையும் மாப்பிள்ளையையும் ஊருக்கு அனுப்பி விட்டு வந்த போதே மிகவும் சோர்ந்துவிட்டிருந்தான். அத்துடன் ஜானகிக்கு ஒரு மேஜை மின் விசிறி வாங்கி வருவதற்காக மத்தியானம் போனவன் பணத்துக்காக எங்கெங்கோ அலைந்து எப்படியோ காரியத்தை முடித்துக் கொண்டு— திரும்பி வரும் போது இரவு ஏழு மணியாகிவிட்டது. அந்த நிலையில் அவனைப் பார்க்கவே



ரொம்பவும் பரிதாபமாயிருந்தது. நிற்கக் கூட முடியாமல் வந்தவுடனேயே சோபாவில் சற்று நேரம் படுத்துவிட்டான்.

அன்னபூரணியம்மாளுக்குத் துயரம் நெஞ்சை அடைத்தது. சமையற் கட்டில் இருந்தபடி ஏதேதோ முணகிக் கொண்டிருந்தாள் அவள்.

ஜானகிக்கும் தவிப்பாகி விட்டது. தன் அண்ணனை இப்படி நிர்த்தாட்சண்யமாக அலைய வைத்து வாட்டி வதைத்து விட்டோமே என்று அவள் மிகவும் மனம் கசிந்து போனாள். தான் விரும்பி அடம்பிடித்துக் கேட்ட மின் விசிறியை வாங்காமல் அவன் வெறுங் கையோடு வந்திருந்தால்கூட இவ்வாறே உருகிப் பச்சாத்தாபப் பட்டிருப்பாள் என்று அவளின் கலங்கிய கண்கள் தெரிவித்தன. தில்லைநாதன் கீழே உட்கார்ந்து அண்ணனுக்குக் கைகால் பிடித்து விட்டுக் கொண்டிருந்தான். அந்தச் சிறு குடும்பத்தின் தலைவனாயிருக்கும் முத்துசிவன் மேல் அவனுடைய தாயும், தம்பி தங்கைகளும் வைத்துள்ள மாசற்ற அன்பையும் பரிவையும் பார்த்து வியந்தவாறு ஒருபுறமாக ஒதுங்கி நின்று கொண்டிருந்தாள் லதா.

வலம்புரி மட்டும் வராந்தாவில் தனியே உட்கார்ந்தபடி ஏதோ சிந்தனையில் ஆழ்ந்திருந்தான். முத்துசிவன் வந்ததையோ, அவனுக்கு உள்ளே நடக்கும் சிசுருஷைகளையோ அவன் கவனித்ததாகத் தெரியவில்லை. அவனுடைய போக்கே விசித்திரமாக இருந்தது.

காப்பி அருந்திக் களைப்பு நீங்கியதும் ஸ்டேஷனுக்குப் புறப்படத் தயாரானான் முத்துசிவன். ஆனால் ஜானகியும் தில்லைநாதனும் சேர்ந்து பிடிவாதமாக அவனை வரவேண்டாம் என்று தடுத்து விட்டார்கள். தம்பி வலம்புரியைத் தாங்கள் துணைக்கு அழைத்துச் செல்வதாகச் சொன்னார்கள். முத்துசிவனும் சரி என்று தலையாட்டினான்.

திடீர் உற்சாகமடைந்த வலம்புரி ஸ்டேஷனுக்குப்புறப்படத் தயாரானான்.

ஜானகி சிறு குழந்தை போல் அழுது கொண்டே தன் அண்ணனிடம் வந்து, தான் ஏதேனும் தப்பிதமாகப் பேசி நடந்து கொண்டிருந்தால் தன்னை மன்னிக்குமாறு வேண்டிக் கொண்டாள். அவள் அப்படி மன்னிப்புக் கேட்டதுதான் முத்துசிவனுக்குப் பிடிக்கவில்லை. அவளுக்கு வேண்டியதை அவளே வற்புறுத்திக் கேட்கும் வரையில் தான் சும்மாயிருந்தது தன்னுடைய தவறே என்றும், அதற்காக அவன்தான் தன்னை மன்னிக்க வேண்டும் என்றும் சொல்லாமல் சொல்வது போல் அவளைப் பார்த்து இளநகை பூத்தான் அவன்.

வலம்புரி ஓடிப் போய் டாக்சி அழைத்து வர, ஜானகியும் தில்லைநாதனும் லதாவும் ஸ்டேஷனுக்குப் புறப்பட்டுச் சென்றார்கள்.

அவர்கள் சென்றபின் வீட்டில் தனியாயிருந்த முத்துசிவனுக்கு மனம் என்னவோ போலாகியது. வெறிச்சோடிப் போன தன் வீட்டின் ஒவ்வோர் அறையையும் பார்த்தபடி சற்று நேரம் வராந்தாவில் உலாவிக் கொண்டிருந்தான். தாயார் அன்னபூரணியம்மாளும் பிள்ளைகளைப் பிரிந்த சோகத்தில் ஆழ்ந்தவளாய் எங்கோ ஒரு மூலையில் உட்கார்ந்திருந்தாள்.

காரியாலயப் பையன் சாயந்திரம் கொண்டு வந்து வைத்து விட்டுப் போன ஃபைல் கட்டு கண்ணாடி அலமாரியில் இருந்தது. அதை எடுத்துக் கொண்டு தன் அறையில் போய் அமர்ந்த முத்துசிவன், ''மைதிலி! மைதிலி!'' என்று கூப்பிட்டான்.

''என்ன, முத்து?'' என்று கேட்டவாறு புன்முறுவலுடன் கதவருகில் வந்து நின்றாள் அன்னபூரணியம்மாள்.

உதட்டைக் கடித்துக் கொண்ட முத்துசிவன் தன் தாயைப் பார்த்து மெல்லச் சிரித்தான். ''வீட்டில் மைதிலி இருக்கிறதாகவே நினைச்சுக்கிட்டிருக்கிறேம்மா!'' என்று சொல்லி மீண்டும் சிரித்தான் அவன்.

ஜானகி கல்யாணம் பண்ணிக் கொண்டு கணவன் வீட்டுக்குப் போன போதுகூட இப்படித்தான் வாய்க்கு வாய் 'ஜானு, ஜானு' என்று கூப்பிட்டுக் கொண்டிருப்பான். கிட்டத்தட்ட ஒரு மாத காலம் வரையில் அந்தப் பழக்கத் தடுமாற்றம் அவனை விட்டு அகலாமல் இருந்து அப்புறம் மைதிலியின் பெயர் அவன் நாவில் பதிந்து விட, பிறகு எதற்கெடுத்தாலும், எது தேவையானாலும், எதைச் செய்வதானாலும் மைதிலியை அழைக்க ஆரம்பித்து விட்டான்.

தாயாரிடம் அவன் பேசுவது ரொம்பவும் அபூர்வம். அவசிய அவசரத் தேவை, அல்லது தவிர்க்க முடியாமல் சொல்லித் தீர வேண்டிய விஷயங்கள் ஏதேனும் இருந்தால் மட்டுமே அவளிடம் பேசுவான். அதுவும் இரண்டொரு வார்த்தைகளில் முடிந்துவிடும்.

தன் பிள்ளையின் இந்தப் போக்கைத் தாயாரும் நன்கு அறிவாள். அதனால் அவளும் அவனிடம் ஏதேனும் சொல்லவோ கேட்கவோ வேண்டியிருப்பின்



இருமலும் ஜலதோஷமும் உங்களை பலவீனப்படுத்தும், இதர நோய்கள், பாதிக்க இடமளிக்கும்.

வாடர்பரீஸ் காம்பவுண்ட்

சிவப்பு லேபிள்

நிவாரணத்துடன், நோய்களை எதிர்க்கும் சக்தியையும் தருகிறது!

இருமலும், ஜலதோஷமும் உங்களைப் பலவீனப்படுத்தி, உங்கள் உடலில் நோய்களை எதிர்க்கும் சக்தியைக் குறைக்கும். இதனால் இதர நோய்களும் உங்களை எளிதில் பாதிக்கக்கூடும். ஆகவே, ஒழுங்காக வாடர்பரீஸ் காம்பவுண்ட் சாப்பிடுங்கள்.

பசியைத் தூண்டி, இழந்த சக்தியை மீட்டளித்து, உடலுக்கு நோய்த் தடுப்புச் சக்தியை அளிக்கக்கூடிய, ஊட்டமளிக்கும் பொருள்கள் அடங்கியது வாடர்பரீஸ் காம்பவுண்ட். அதிலுள்ள க்ரியோஸோட் மற்றும் க்வயகால், இருமலிலிருந்தும், ஜலதோஷத்திலிருந்தும் நிவாரணம் அளிக்கின்றன.



சக்திக்கும் ஆரோக்கியத்திற்கும் வாடர்பரீஸ் காம்பவுண்ட் அருந்துங்கள்!

வார்னர்-ஹிந்துஸ்தான் லிமிடெட்

அதை நேரிடையாக வந்து சொல்லாமல் தன் பெண்களிடமே சொல்லியனுப்புவான்.

''அண்ணா, காப்பிக் கொட்டை தீர்ந்து போச்சாம்; அம்மா சொல்லச் சொன்னாங்க.''

''அண்ணா, எலெக்ட்ரிக் பில் கட்டணுமாம்; அம்மா ஞாபகப்படுத்தச் சொன்னாங்க.''

''அண்ணா, கோயிலுக்குப் போகணுமாம்; அம்மா காசு கேட்டாங்க.''

இத்தியாதி, இத்தியாதி!

அவன் எதிரில் வந்து நிற்கவே அவளுக்கு ஒருவித அச்சம் இருந்தது. அவனுடைய இலட்சியம், அதிலே அவன் காட்டி வரும் உறுதி, பொறுமை, அதன் பொருட்டு செய்யும் தியாகங்கள், அவன் படும்பாடுகள், கடைப்பிடித்து ஒழுகும் சீரியநெறிகள், அவனது சிந்தனைத் திறன், விவேகம் செறிந்த விறுவிறுப்புடன் செயலாற்றும் நேர்த்தி — இவ்வளவையும் பார்த்துப் பார்த்துக் கேட்டுக் கேட்டு, 'இத்தகையதொரு கர்மவீரனைப் பத்து மாதம் சுமந்து பெற்றவள் நானா?' என்ற பிரமிப்பினாலும் பெருமையினாலும் ஏற்பட்டுவிட்ட அச்சமே அது!

''என்ன முத்து வேணும்?'' என்று கேட்டாள் அன்னபூரணியம்மாள்.

''காப்பி இருக்கிறதாம்மா? இன்னொரு முறை குடிக்கணும் போல இருக்கு!'' என்றான் முத்துசிவன் மென்னகையுடன்.

பிள்ளை எவ்வளவுக்குக் களைத்துப் போயிருந்தால் இப்படிக் கேட்பான் என்று எண்ணியதுமே பெற்றவளுக்கு வயிறெல்லாம் சுருங்கிச் சுருண்டது. அவசர அவசரமாகப் போய்ப் புதிதாகக் காப்பி தயாரித்துக் கொண்டு வந்து கொடுத்தாள்.

சூடாக வயிற்றில் காப்பி இறங்கியதும் சற்றுச் சுறுசுறுப்படைந்த முத்துசிவன் தனது ஆபீஸ் கடிதங்களைப் பார்வையிடலானான். ஆனால் இரண்டொரு கடிதங்களுக்கு மேல் அவனுடைய மனம் அவற்றில் லயிக்கவில்லை. ஃபைலை மூடி வைத்துவிட்டு ஏதோ சிந்தனையில் மீண்டும், ''மைதிலீ....'' என்று ஆசையாக அழைத்தான்.

அம்மா வந்து நின்றாள்.

அவள் வந்ததைக் கவனியாமல், ''ஆமாம்....'' என்று ஏதோ கேட்க வாயெடுத்தவன் எதிரே தன் தாயார் நிற்பதை அப்போதுதான் கவனித்தவனாய் நறுக்கென்று உதட்டைக் கடித்துக் கொண்டு, ''ஓ.... மைதிலி இல்லையில்லே?....'' என்று முணுமுணுத்தவாறு கழுத்தை வருடி விட்டுக் கொண்டான்.



'' மாமா குளிக்கத் தண்ணீர் வேணுமா, வெந்நீர் வேணுமா என்று அம்மா கேட்கிறாள்!''

''பன்னீரே போதும்!''

இப்படி அநாவசியமாக அம்மாவை எழுந்து வரும்படி சிரமம் கொடுக்கிறோமே என்று வருந்தியவனாய்ச் சில விநாடிகள் மௌனமாயிருந்து விட்டுப் பிறகு, 'ஏன், நான் இப்போது கேட்க நினைத்ததை அம்மாவிடமே கேட்டால் என்ன?' என்று எண்ணியவன் போல் அவளை நிமிர்ந்து பார்த்தான். 'வேண்டாம்' என்பதாகத் தனக்குள் மெல்லத் தலையாட்டிக் கொண்டு, ''ஒண்ணுமில்லேம்மா! நானே வைச்சுக்கிறேன்'' என்று புன்சிரிப்புடன் கூறியவாறு எழுந்து மேஜை மேல் இருந்த ஃபைல் கட்டை அலமாரியில் வைத்துப் பூட்டுவதற்காகக் கூடத்து அறையை நோக்கி நடந்தான்.

தம்பியையும், தங்கைமார்களையும் பிரிந்த துயரத்தில் அவன் இப்படியெல்லாம் அல்லல்படுகிறான் என்று எண்ணிப் பெருமூச்சுவிட்ட அன்னபூரணியம்மாள் அவனைக் கனிவும் அநுதாபமுமாகப் பார்த்தவாறு அங்கேயே சுவரோரமாக உட்கார்ந்து விட்டாள்.

உண்மையில் முத்துசிவன் அந்த ஆபீஸ் ஃபைலை அலமாரியில் வைப்பதற்காக மைதிலியைக் கூப்பிடவில்லை. இன்று மதியம் அவன் ஸ்டேஷனுக்குப் புறப்பட்ட போது வலம்புரி தன் மனைவி சுந்தரியை அவ்வளவு கோபமாகக் கன்னத்தில் அறைந்ததன் காரணத்தைக் கேட்டறியவே அவளை அழைத்தான். இம்மாதிரிக் குடும்பத் தகராறான விஷயங்களை அவன் எப்போதும் மைதிலியிடம்தான் கேட்டுத் தெரிந்து கொள்வது வழக்கம். அந்த வழக்கப்படி இப்போதும் ஞாபகமறதியாக அவளைக் கூப்பிட்டு விட்டான். பிறகு அவள் இல்லை — கணவன் வீட்டுக்குப் போய் விட்டாள் — என்பது நினைவு வந்ததும், அவ்விஷயத்தை அம்மாவிடமே கேட்கலாம் — ஏனென்றால் அச்சம்பவம் நடந்த போது வீட்டில் அவள் ஒருத்திதான் இருந்தாள் — என்று எண்ணிக் கேட்க வாயெடுத்தவன் உடனே அவ்வெண்ணத்தை மாற்றிக் கொண்டான். காரணம், அவளுக்கு ஒருகால் அது பற்றித் தெரியாதிருக்கலாம்; அந்நிலையில் தான் கேட்பதைக் கொண்டு

அவள் தன்னிடமே அதைக் கேட்டுத் தெரிந்து அதற்காக அவளும் மனக் கிலேசமடைய நேரிடலாம். எனவே தன்னைச் சமாளித்துக் கொள்வதற்காக ஃபைல் கட்டை அலமாரியில் வைக்க வேண்டும் என்று அவளிடம் ஏதோ சாக்குச் சொல்லிவிட்டு அங்கிருந்து எழுந்து வந்துவிட்டான்.

அப்படியும் அவன் மனம் அவ்விஷயமாக அமைதியுறவில்லை. இந்த ஒரு விஷயத்தில் மட்டும்தானா? வலம்புரிக்குத் திருமணம் செய்து வைத்த நாள் முதலே அவனால் இவனுக்கு எப்போதும் உள்ளூற ஒரு கவலை இருந்து கொண்டேதான் இருக்கிறது!....

வலம்புரி திருமணத்துக்கு முன்னிருந்தபடியே திருமணமான பின்பும் இருந்தான். அதாவது, அடிக்கடி உடம்புக்கு ஏதாவது ஒன்று மாற்றி ஒன்று வந்து கொண்டேயிருந்தது. அதனால் 'சிக்லீவ் வலம்புரி' என்று அவன் வேலை செய்யும் அச்சகத்தில் ஒரு பட்டப் பெயரும் அவனுக்கு ஏற்பட்டுப் போயிருந்தது. மேலும், குறைந்த வருவாயே வந்ததால் தன் குடும்பத்தை நடத்திச் செல்ல அவன் மிகவும் கஷ்டப்பட்டான். இதுவும் போதாதென்று திருமணமான மூன்றே வருடங்களில் இரண்டு பிள்ளைகளுக்குத் தந்தையாகி விட்டான். மூத்தது ஆண் பிள்ளை; இளையது பெண் பிள்ளை. மாமனார் வீட்டிலிருந்து உதவி ஏதும் எதிர்பார்க்க முடியாத நிலை. பெற்றோர் இன்றிச் சிற்றப்பாவின் ஆதரவில் வளர்ந்த பெண்தானே சுந்தரி? கல்யாணமாகிக் கணவனோடு போன மறுநாளே அவளை அவர்கள் அடியோடு மறந்து கைகழுவி விட்டார்கள். அவளும் அவர்களை நாடிச் செல்லுவதில்லை.

இந்நிலையில் அவன் படும் கஷ்டங்களைக் காணச் சகியாமல் முத்துசிவனே அவனுக்கு மாதா மாதம் பண உதவி செய்து வந்தான். கிட்டத்தட்ட அவனுடைய குடும்பத்தைப் பாதியளவுக்கு இவனே போஷித்து வரும்படியாயிற்று. எனினும் அதற்காகச் சிறிதும் முகச் சுளிப்போ மனச் சலிப்போ காட்டியதில்லை. அவனுக்கு இந்தச் சின்னத் தம்பியின் மீதுதான் அளவுகடந்த அன்பு, பாசம், பரிவு, கரிசனம் எல்லாம். ஆனால் அவற்றை வெளியில் காட்டிக் கொள்ளமாட்டான். அவனிடம் பேசும் போது மட்டும் கொஞ்சம் கடுகடுவென்றே பேசுவான். அதன் உள்வயணம் வலம்புரிக்கு மட்டுமல்ல, மற்றத் தம்பி தங்கைகளுக்கும் தாயாருக்கும் தெரியும். இதெல்லாம் ஒருபுறமிருக்க, முத்துசிவன் அவனைப் பற்றிக் கவலைப்படுவதற்கு வேறொரு முக்கிய காரணம் இருந்தது:

வலம்புரிக்கும் அவனுடைய மனைவி சுந்தரிக்கும் சமீப காலம் முதல் நல்ல விதமான நேச நெருக்கம் இல்லை. அவர்களுக்குள் அடிக்கடி ஏதாவது போரும் பூசலும் நிகழ்ந்து கொண்டே இருந்தன. அவற்றில் சில முத்துசிவனின் காது வரை எட்டும். அவனும் அவர்களை வீட்டுக்கு அழைத்து வைத்துக் கண்டித்துப் புத்திமதிகள் சொல்லி சமாதானப்படுத்தி அனுப்பி வைப்பான். மறுபடியும் பழைய குருடி கதை ஆரம்பமாகும். மீண்டும் சமாதானம், மீண்டும் போர்!....

இதிலே ஒரு வேடிக்கை என்னவென்றால், அந்த இளந்தம்பதியிடையே சண்டை சச்சரவுகள் ஏற்படுவதற்கு அடிப்படைக் காரணம் என்னவென்று முத்துசிவனால் அறிய முடியாமல் இருந்ததுதான்! இன்றுவரை அவ்விஷயம் அவனுக்கு ஒரு பெரும் புதிராகவே இருந்து வருகிறது. எப்படியெல்லாமோ உருட்டியும் மிரட்டியும் நயந்தும் நைச்சியம் பண்ணியும் கேட்டுப் பார்த்து விட்டான். வலம்புரியிடமிருந்து அதைக் கறந்தறியவே முடியவில்லை.

சுந்தரியிடம் கேட்க முடியுமா? மூத்தானாயிருக்கும் அவன் மைத்துனியிடம் அப்படி நெருக்கம் காட்டிக் கேட்பது அத்தனை நன்றாயிராதே!

இரவு பத்து மணிக்கு வீடு வந்து சேர்ந்தான் வலம்புரி. அவன் வருவான் என்று முத்துசிவனோ அவனுடைய தாயாரோ எதிர்பார்க்கவில்லை. ஸ்டேஷனிலிருந்து அப்படியே தன் வீட்டுக்குப் போய்விட்டு மறுநாள் தான் இங்கு வந்து விவரம் சொல்வான் என்று நினைத்திருந்தார்கள்.

வந்தவன் யாரிடமும் எதுவும் சொல்லாமல் வழக்கம் போல் கூடத்து அறையின் மூலையில் கிடந்த பிரம்பு நாற்காலியில் போய்க் குந்துக்காலிட்டு சாய்ந்து கொண்டு மேல்தளத்தை அண்ணாந்து பார்த்தபடி யோசனையில் ஆழ்ந்துவிட்டான்.

அவனாக ஏதாவது சொல்வான் என்று எதிர்பார்த்தவாறு வராந்தாவில் உலாவிக் கொண்டிருந்த முத்துசிவன் பதினைந்து நிமிடங்களாகியும் அவன் ஏதும் சொல்லாதிருக்கவே பொறுமை இழந்தவனாய் உள்ளே விரைந்து வந்தான். **(தொடரும்)**





வேங்கை

ஏ.எஸ்.ராகவன்

எதிரே நீலக் குழம்பாக ஏரி வட்டமிட்டுக் கொண்டிருக்கிறது. அதில் அடிக்கடி படகுகள் மிதக்கின்றன. அந்த ஏரியில் மீன் பிடிக்கிற கும்பல் அடிக்கடி வலையை வீசி, சுற்றிச் சுற்றி வருவதும், துள்ளும் மீன்களைக் கரையில் வாரிக் கொட்டுவதும் வேடிக்கையான காட்சிகள். ஏரி சிறியதுதான். நடுவே தீவு வேறே உண்டு. அந்தத் தீவில் சிற்றுண்டிச் சாலை, குழந்தைகள் விளையாட்டு அரங்கம் எல்லாம் நிர்மாணித்திருந்தார்கள். படகு மூலமாகவும் அந்தத் தீவுக்குப் போகலாம். பாலத்தின் வழியாகவும் போகலாம்.

வந்த புதிதில் எனக்குக் கண்ணைக் கட்டிக் காட்டில் விட்டது போலிருந்தது. நான் வளர்ந்த காடு எங்கே, இந்த நகர்ப்புறம் எங்கே?

ஆனாலும் இந்தச் சூழ்நிலையில் ஒரு புதுமை இருந்தது. சாரி சாரியாக வந்து போகிற மக்கட் கூட்டத்தைக் காண்பதில் ஒரு பிரமை இருந்தது. நான் முன்பு வசித்த காட்டில் இப்படிப் பாலமெல்லாம் கிடையாது. மனித வாடையே எட்டியதில்லை. அடர்த்தியாக, பெரிய பெரிய தூண்களாக மரங்கள் செறிந்த வனப் பிரதேசத்தில் நான் பிறந்தேன். துள்ளித் திரிந்தேன். எட்டின மட்டும் காடாக இருந்த அந்தப் பகுதிக்கு அப்பால் என்ன இருக்கிறதென்பதைக் காணும் ஆவல் ஒருபுறமும், வேட்டைக்கு ஏதும் கிடைக்காததால் பசி மறுபுறமும் என்னை விரட்ட, காட்டைத் தாண்டி வெளியே கால் வைத்தேன். என்னை வலை வீசிப் பிடித்துவிட்டார்கள்.

போராடினேன்; உறுமினேன்; சீறினேன். ஊஹூம். இந்தக் கூண்டின் இரும்புக் கிராதிகள் மிகவும் வலுவானவை.

கண்ணை மூடினால் அந்த அற்புதமான வனப் பிரதேசம் தெரிகிறது. ஏக்கம் எழுகிறது. அங்கே என் இனத்தார் கூட்டம் கூட்டமாகத் திரிவார்கள். நான் மட்டும் இங்கே தனியே அடைபட்டுக் கிடக்கிறேன்.

என்ன செய்வது? வர வர அதுவும் பழகி விட்டது. வேளா வேளைக்கு வயிற்றுக்கு உணவு கிடைத்துவிடுகிறது. விளையாடத்தான் இடம் போதாது. சுற்றிச் சுற்றி வந்தாலன்றி அடங்கிக் கிடக்கிறேன்.

என்னை எதற்காக இங்கே கொண்டுவந்து அடைத்திருக்கிறார்கள்? என்னை எதற்காக நாள்தோறும் கும்பல் கும்பலாக மக்கள் வந்து பார்க்கிறார்கள்.

புரியவில்லை.

கண்ணைப் பாதி திறந்து, உறக்கம் சரிவர வராமல் குளிர் காற்றின் வீச்சில் சற்றே நடுக்கமுற்றவனாய், எதிரே ஏரியையும், அதில் உல்லாசமாகப் படகுகள் மிதப்பதையும், தீவில் கும்மாளம் போடும் சிறார்களையும் பார்க்கிறேன். இதையெல்லாம் தாண்டித் தொலைவில் கும்பல் கும்பலாய்ப் புகை மண்டலம்

தெரிகிறது: தடதடவென்ற இரைச்சலுடன் ஓடும் ஒரு ராட்சஸ யந்திரம் இப்படிப் புகையைக் கக்குவதை நான் பார்த்திருக்கிறேன். என்னைக் காட்டிலிருந்து கொண்டு வந்தபோது அந்த யந்திரம்தான் என்னை அடைத்திருந்த கூண்டை இழுத்து வந்தது.

என்னவோ என் உடலுக்குள் கூட இப்படி குப்பல் குப்பலாய்ப் புகை சூழ்வது போலிருந்தது. அந்த உணர்வு பெரும் தினவாய் என்னை வாட்டிற்று. காட்டில் இருந்தால் இப்படித் தவிக்க நேராது. என் உடலில் புகையும் இந்த மணத்தை மோப்பம் கண்டு கொள்ள என் இனத்தவருக்குத் தெரியும். நான் தனியாளாக இருக்கவும் மாட்டேன்.

தினசரி எனக்குத் தீனி வைக்கிற ராமன் குட்டி நேற்று ஒரு மாதிரியாகச் சிரித்துவிட்டுப் போனபோதே, என் நிலையை அவன் புரிந்து கொண்டு விட்டானோ என்று சந்தேகித்தேன்.

இன்று அதற்கேற்றாற்போல் அடுத்த கூண்டில் உறுமல் கேட்கிறது.

என் காதுகள் விரிந்தன. கண்கள்திறந்தன.

இரும்புக் கிராதிக்குப் பின்னால் பளபளக்கும் கண்களால் என்னை விழுங்கிவிடுவது போல் நின்றார் ராஜா. எங்கள் இனத்தில் ஆண்களெல்லாம் ராஜாக்கள். பெண்களெல்லாம் ராணிகள். தனித் தனியே பெயர் சூட்டிக் குழப்பிக் கொள்கிற பழக்கம் எங்களிடையே கிடையாது.

''ராணி!...''

என் உடல் புளகித்து நடுங்கிற்று. அந்த அழைப்பின் கனிவைக் கண்டு. அடேயப்பா, என்ன வாட்ட சாட்டம், எத்தனை அழகு! கையும் காலும் தூண் தூணாக என்ன வலுவான ஆண்மை!

அந்த ராஜாதான் எனக்கு எல்லா விவரமும் சொன்னார். அவர் அதற்கு முன் திருவனந்தபுரத்தில் இருந்தாராம். அங்கேயும் இதே போல ஒரு மிருகக் காட்சி சாலை உண்டாம். ராஜாவை அங்கிருந்து இந்தச் சாலைக்குக் கொண்டு வந்திருப்பதே, 'ராணி, உனக்காகத்தான்!' என்றார் அவர்.

வெட்கம் பிடுங்கித் தின்றது என்னை. அவர் கையைப் பிடித்து நறுக்கென்று கடித்தேன்.

''ராணி, நீ எப்படி இவர்களிடம் அகப்பட்டுக் கொண்டாய்?'' என்று விசாரித்தார் ராஜா.

விவரமாகச் சொன்னேன். ஒழுங்காகக் காட்டுக்குள்ளேயே இனத்தோடு இருந்திருந்தால் இந்த அவலம் வந்திருக்காது. ''என் போதாத காலம் வலையில் வந்து விழுந்து விட்டேன்....அங்கே என் அம்மா என்னைக் காணுமல் எப்படித் தவிக்கிறளோ!... அம்மாவுக்கு என்மீது கொள்ளை அன்பு!'' என்று அழுதேன்.

ராஜா ஆறுதல் கூறினர். ''அழாதே, ராணி... நான்தான் வந்துவிட்டேனே உன்னைப் பாதுகாக்க. இங்கே உனக்கு என்ன குறை? எத்தனை பேர் நம்மைப் பார்க்க வருகிறர்கள் தினசரி! அவர்களெல்லாம் வியந்து பாராட்டுகிற சூழ்நிலையில் இருக்கிறேமே, அது பெரிது அல்லவா? - நான் அப்படித்தான் என்னைச் சமாதானம் செய்து கொண்டேன்.''

அவர் பெருமூச்சு விட்டார்: பிறகு தொடர்ந்தார்: ''ராணி, எதிரே அதோ அந்தப் பெரிய கூண்டுக்குள் சிங்கத்தை அடைத்துப் போட்டிருக்கிறர்கள். மிருக ராஜனுக்கே அந்தக் கதி என்றல், நாம் எம்மாத்திரம்?'' திடீரென்று அவருக்குச் சிரிப்பு வந்து விட்டது. உரக்கச் சிரித்தார். ''ராணி, காட்டில் இப்படி சிங்கத்தின் அடுத்த வீட்டுக்காரியாக நீ நிர்ப்பயமாக இருக்க முடியுமா?.. மனிதர்கள் உருவாக்கி வைத்திருக்கிற இந்தப் புரட்சி வியப்பாக இல்லை உனக்கு?''

அழுகையும், சிரிப்புமாய், சீற்றமும் சமாதானமுமாய் இவ்வாறு நாங்கள் தேறுதல் காண முற்பட்டோம்.

ராஜாவுக்கு அனுபவம் மிகுதி. ஏற்கனவே ஒரு காட்சி சாலையில் இருந்தவர் அல்லவா? எனக்கு ஒன்றுமே தெரியவில்லை. எதிரே இருக்கிறதே ஏரி, இது செயற்கையாக உண்டாக்கப்பட்டதாம். தீவுகூட அப்படித்தானும். பாலமும் அப்படியே. நல்ல வேளை, அந்த ஏரியில் உள்ள நீரையோ, நீரில் உள்ள மீனையோ செயற்கையாக இந்த மனிதர்களால் உருவாக்க முடியாது. படகுச் சவாரிக்கு வாடகை உண்டாம். மீன் பிடிக்கக் கூடக் காசாம். இவர்களால் உண்டாக்க முடியாத மீனுக்குக் காசு வசூலிக்க இவர்களுக்கு என்ன அதிகாரம்? இதெல்லாம் கூடப் போகட்டும். எங்களை வேடிக்கை பார்க்க வருகிறவர்களிடம் கூடக் காசு வசூலிக்கிறர்களாம்.

''ராணி, இந்த மனிதர்கள் கெட்டிக்காரர்கள். காசு என்ற ஒன்றை வைத்துக் கொண்டு இவர்கள் மனிதர்களையே வலை விசிப் பிடிக்கிறர்கள்!'' என்றார் ராஜா.

எனக்குப் புரியவில்லை.

''இவர்களுடைய நாகரிகமெல்லாம்போலி. நீயே பார், யாருக்காவது தைரியமாக மனம் விட்டுச் சிரிக்கவோ, பேசவோ, அழவோ முடிகிறதா?... உடலுக்கு மட்டுமில்லை. மன



சுக்கும் இவர்கள் ஆடை அணிகளைப் போர்த்திக்கொள்கிறார்கள். எது உண்மை, எது பொய் என்பதை இவர்களாலேயே இனம் காண முடிகிறதில்லை. அப்படி ஒரு நாகரிகக் குழப்பத்தில் மனித வர்க்கம் அகப்பட்டுக் கொண்டு தவிக்கிறது, ராணி.''

''ராஜா, இதெல்லாம் உங்களுக்கு எப்படித் தெரிந்தது?''

திருவனந்தபுரத்து மிருகக் காட்சி சாலையில் ஒரு தாத்தா இதையெல்லாம் எனக்குச் சொல்லி வைத்தார். அந்தத் தாத்தா நல்லவர். இருபது ஆண்டுகளுக்கு மேலே அங்கேயே இருந்து அனுபவப்பட்டவர். என்னைப் பார்த்ததும், ''அடப் பாவி, நீ ஏண்டா இங்கே வந்தாய்?'' என்று அழுதார். அவர் சர்க்கஸ் கம்பெனியிலே கூட இருந்தாராம்.''

''சர்க்கஸா?'' ராஜா அதை விளக்கினார். கேட்ட பிறகு நம்பாடு தேவலே என்று சமாதானப்பட்டுக் கொண்டேன். சர்க்கஸில் ஆட வேண்டுமாம், பாடவேண்டுமாம், வித்தையெல்லாம் செய்ய வேண்டுமாம். இந்த மனிதர்கள் கை கொட்டிச் சிரிக்கவும், விழி பிதுரப் பார்க்கவும் எங்களை இப்படி ஆட்டிப் படைப்பது என்ன நியாயமோ?

எனக்குப் புரியவில்லை.

ஆனால் ராஜா வந்துவிட்டதால் சூழ்நிலையில் ஆச்சரியமான புதுமை மலர்ந்துவிட்டது. வசந்தத்தின் நளினம் காற்றில் மிதக்கக் கண்டேன். எனக்கே என்னைப் புரியவில்லை. ஒரு துள்ளுத் துள்ளிக் கூண்டுக்குள் ராணியாகவே வலம் வந்தேன்.

ராஜா வந்து சேர்ந்த அன்றே, அந்த நல்ல நாளிலேயே அவளும் அவனும் என்னைப் பார்க்க வந்தார்கள்.

அவள் நல்ல அழகி. அவனும்தான்.

அவள் பெயர் வசந்தி. அவன் பெயர் சந்திரன்.

எங்கள் கூண்டுக்கு எதிரே பொதிய மரம் வளர்ந்து நிற்கிறதே. அதன் கீழ் புல் தரையில் அவர்கள் உட்கார்ந்தார்கள். பேசினார்கள். சிரித்தார்கள். யாரும் பார்க்காத சமயம் ஒருவரை யொருவர் தீண்டிக்கொண்டார்கள். மடியில் தலை வைத்துப் படுத்துக் கதை சொல்லி மகிழ்ந்தார்கள்.

''போதும், விடுங்கள்..''-நான் கூவினேன். இந்த ராஜாவுக்கும் குஷி பிறந்து விட்டது.

அவளும் அவனும் தினசரி வர ஆரம்பித்தார்கள். அநேகமாக அந்தப் பொதிய மர நிழலில்தான் அமர்வார்கள்.

''இங்கே யார் கண்ணிலும் படாமல் பேசலாம், சிரிக்கலாம் என்று இந்தச் சாலையை அவர்கள் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள் ராணி. நுழைவுக் கட்டணம்தானே செலவு?'' என்றார் ராஜா.

''மிகவும் பிரியமாக இருக்கிறார்கள் ஒருவருக்கொருவர் இல்லையா, ராஜா?'' என்றேன்.

''ஆமாம். அவர்களுடைய காதல் எனக்குப் பொறாமையாக இருக்கிறது!''

''கேலி செய்கிறீர்கள்!''

''சரி சரி... கோபித்துக் கொள்ளாதே'' என்றவர், என் காதருகில், ''இதோ பார், நீ இப்போது வெறும் ராணி இல்லை. உன் வயிற்றில் ராஜாப் பயல்கள் புரள்கிறார்களே, தெரியவில்லை?... நிம்மதியாக ஓய்வு எடுத்துக் கொள்ளவேண்டும் நீ. தெரிகிறதா?''என்றார்.

என் கண்கள் பெருமையால் விரிந்தன. தாய்மைக் கோலம் என் உடலில் எத்தனை வனப்பை ஏற்றிவிட்டிருந்தது, தெரியுமா?

''அட, அங்கே கவனித்தீர்களா?'' நான் கூவினேன்.

''என்ன ராணி?''

''வசந்தியின் வயிற்றிலும் ஒரு ராஜாப் பயல் வளர்கிறானே, தெரியவில்லை?''

''அப்படியா?''

''பாருங்களேன், அவளுடைய முகத்தில் எத்தனை மினுமினுப்பு?''

''ராணி, எனக்கு உண்மையிலேயே மகிழ்ச்சி பிடிபடவில்லை. வாஸ்தவத்தில் என் சகோதரி ஒருத்தி தாய்மைக் கோலம் பூண்டால் எத்தனை பூரிப்பு ஏற்படுமோ, அத்தனை பூரிப்பு ஏற்பட்டிருக்கிறது எனக்கு. வசந்தி நல்ல பெண். அவளுக்கும் ஒரு ராஜாப் பயல் பிறக்கட்டும். ஆனால் அந்தப் பயல் பிறப்பதற்குள் நம் ராஜாப் பயல்களுக்கு ஆறு மாதம் பூர்த்தியாகி விடும். ஏன் தெரியுமா? மனிதர்களுக்குக் கர்ப்ப காலம் பத்து மாதம். நம்மைப் போல நான்கு மாதம் அல்ல.''

''உங்களுக்கு இதெல்லாம் கூடத் தெரியுமா, ராஜா?''

ராஜா சிரித்தார். ''எனக்கு மட்டும் எப்படித் தெரியும்? நம் கூண்டுக்கு வெளியே ஒரு பலகையில் இந்த விவரமெல்லாம் எழுதிப் போட்டிருக்கிறார்கள். வரப்போக இருக்கிறவர்கள் படிக்கிறபோது, காதில் விழுகிறதை வைத்துக் கொண்டுதான் சொல்லுகிறேன்.''

''எனக்கும் இந்த மனிதர்களின் பேச்சு ஓரளவு புரிகிறது. அவர்களுடைய நடை, உடை எல்லாமே புரிகிறது. பாவனைதான் புரிவதில்லை. உள்ளூற ஓர் ஐயம் எனக்கு. நாம் இவ்வளவு தூரம் மனிதர்களைப் புரிந்து கொள்ளுகிறோமே, அந்த அளவுக்கு மனிதர்கள் நம்மைப் புரிந்து கொண்டு, நம் மொழியைக் கற்றுக் கொள்ளுகிறார்களோ? ஹூம்! அவர்களுக்கு அவர்கள் மொழிதான் பெரிது. அதிலேகூட ஆயிரம் வேற்றுமைகள். ஒருவர் பேசுகிற மாதிரி இன்னொருவர் பேசுவதில்லை.''

''உனக்கு எதற்கு இந்தக்கவலை எல்லாம்?'' என்று அதட்டினார் ராஜா.

இப்போதெல்லாம் நான் அதிகம் துள்ளவோ, ஓடவோ முடிவதில்லை. எந்த நேரமும் படுத்தே கிடக்கும்படி இருக்கிறது. மூன்று மாதம் முடியப் போகிறதே!

வசந்தியும் சந்திரனும் வந்து போவதில் ஒரு சிறு மாறுதல். தினசரி வருவதில்லை இப்போதெல்லாம். இரண்டு நாட்கள் மூன்று நாட்களுக்கொரு முறைதான் வருகை. வந்தாலும் பழைய சிரிப்புக்குப் பதில் அழுத்தலான பேச்சுக்கள். என்ன கவலையோ!

''பயப்படாதே. நானும் நீயும் இந்தக் கூண்டுக்குள் அடைபட்டுக் கிடக்கிற மாதிரி இந்த மனிதர்கள் கூண்டில்லாத உலகத்தில் சுதந்திரமில்லாமல் அடைபட்டுக் கிடக்கிறவர்கள். ஆயிரம் பிரச்னைகள் நிறைந்த வாழ்க்கையில் அல்லற்படுகிறவர்கள். அந்தக்


அவளிடம்
பாதுகாப்பிற்கான
திறவு கோல்
இருக்கிறது
பஞ்சாப்
நேஷனல்
பாங்க்

கவலைகளை நாம் படுகிறதாயிருந்தால் நம்மால் வாழவே முடியாது.''

எனக்குப் புரியவில்லை.

வசந்தி தலைகுனிந்து உட்கார்ந்திருந்தாள்; பாவம், கைகளைப் பிசைந்து அவள் தவிப்பது தெரிந்தது. கண்கள் பனித்திருந்தன.

''கவலைப்படாதே! வசந்தி, உனக்கு ஒரு சங்கடம் வர நான் பொறுக்க மாட்டேன். நான் சொல்லும் வழியை நீ ஏற்கத்தான் வேண்டும்'' என்றான் அவன்.

''எனக்குப் பயமாக இருக்கிறது'' என்றாள் வசந்தி.

''பயப்படுவதற்கு ஒன்றுமே இல்லை. இதெல்லாம் சர்வ சகஜம் இப்போது.''

''நீங்கள் சொன்னால் சரி.''

''என் வசந்தி சமர்த்துப் பெண்ணாயிற்றே!''

''வெளியூர் போகத்தான் வேண்டுமா நீங்கள்?''

''ஆமாம், வசந்தி. ஆனால் ஒவ்வொரு விநாடியையும் நான் எண்ணிக் கொண்டு இருப்பேன். உன்னை விட்டு என்னால் இருக்க முடியுமா?''

''சீக்கிரம் வந்துவிடுங்கள்...அதற்குள்...''

''அதற்குள் எல்லாம் நல்ல விதமாக முடிந்துவிடும்.''

''அடுத்த வாரம் வந்துவிடுங்கள்.''

''கட்டாயம் வருவேன், வசந்தி!''

போவதற்கு முன் அவன் என்னை ஒரு பார்வை பார்த்தான். அடேயப்பா, என்ன பார்வை!

பேசிக்கொண்டே அவர்கள் போவதை நானும் ராஜாவும் பார்த்துப் பெருமூச்சு விட்டோம். சந்திரன் வெளியூர் போக வேண்டுமாம். போகாமற் போனால்தான் என்ன? முடிந்தால் அவனை ஒரு கூண்டுக்குள் அடைத்து வைக்கலாமே? இது ஏன் வசந்திக்குத் தெரியவில்லை?

நாட்கள் நகர்ந்தன.

அடுத்த வாரம் வந்தது.

ராஜாப் பயல்கள் பிறந்துவிட்டனர்! மூக்கும் முழியும் அசல் ராஜாவையே உரித்து வைத்தாற்போலிருந்தன. பிஞ்சுக் கைகள் தான் என் கைகளைப் போலிருந்தன.

அடடா, வசந்தி இன்றைக்கு வரமாட்டாளா! வந்து தன் மருமான்களைப் பார்க்க மாட்டாளா!

ஆவலோடு வெளியே பார்த்தேன். எத்தனை பேர் வந்து போனாலும், வசந்தி வருகிறாற் போலாகுமா?

அதோ அவள் வருகிறாள்!

என் நெஞ்சு துள்ளுகிறது.

ஆனால்... ஆனால்... ஐயோ, இதென்ன? வசந்தியா இவள்? தாய்மைப் பொலிவில் பூரித்த முகமும், துவண்ட கைகளும் ஏன் இவ்வாறு கறுத்து உருக்குலைந்து போயிருக்கின்றன?... கண்களின் கீழ் கருவட்டம் சூழ்ந்திருக்கிறதே, ஏன்?... வயிற்றிலிருந்த ராஜாப் பயல் மாயமாக எங்கே போய்விட்டான் இதற்குள்?

எல்லாம் தெரிந்த ராஜாவுக்குக் கூட இது புரியவில்லை. விழித்தார்.

பொதிய மரத்தடியில் அவள் உட்கார்ந்தாள். பார்வை, நுழைவாயிலில் சந்திரனை எதிர்பார்த்திருந்தது. ஒரு விநாடி கூட அது நகரவில்லை, இமைக்கவில்லை.

ஆனால் அவன் வரவேயில்லை.

மறுநாள், அடுத்த நாள், தொடர்ந்து ஒரு வாரம் இதே கதைதான். அவன் வரவே இல்லை.

''ராணி, மனிதர்களின் இந்தப் போக்கு எனக்குப் புரியவே யில்லை. நம்மைப் பிடித்து அடைக்கிறார்கள் என்பதோ ஒருவரையொருவர் வலைவீசிக்கொள்கிறார்கள் என்பதோகூட எனக்குப் பெரிய விஷயமாகப் படவில்லை. கருவில் உருவாகிற உயிரைக்கூட இவர்கள் விட்டுவைக்க வில்லையே! இது என்ன விந்தை?'' என்றார் ராஜா.

பாவம், வசந்தி! அதன் பிறகு அவளை நான் பார்க்கவேயில்லை. பார்த்தால் நீங்களாவது சொல்லுங்களேன், ராஜாப் பயல்கள் இப்போது ஜாட்டி அடிக்கிறார்கள், கூண்டுக்குள்ளே உறுமுகிறார்கள் என்று! அதைக் கேட்டு அவள் என்னைப் பார்க்க வருவாள். அவள் நல்ல பெண்! எனக்குத் தெரியும்.

''திருடன் பிடிபட்டான்!''

மளிகைக் கடை மூடப் போகிற சமயம். அப்போது ஒரு பெண் அங்கே சாமான் வாங்க வந்தாள்.

பதுங்கிப் பதுங்கி ஓர் ஆள் அந்தப் பக்கம் வந்தான்.

பெண் திடீரென ''ஐயோ!'' என்று கூச்சலிட்டாள். அந்த ஆள் ஓட்டம் பிடித்தான்.

ஒரு போலீஸ்காரர் அந்த ஆளைத் துரத்திப் பிடித்தார். அவன் ஒரு பெருந் திருடன் என்பது பின்புதான் விளங்கிற்று.

மளிகைக் கடைக்காரர் அப்பெண்ணிடம் நன்றியோடு, ''அம்மா! நல்ல வேளையாக நீ கத்தினாய். இல்லாவிட்டால் என் கடையில் திருட்டு நடந்திருக்கும். அதிருக்கட்டும். அவன் திருடன் என்று கண்டு பிடித்துக் கத்தினாயே, அது எப்படி?'' என்று கேட்டார்.

''அவனைக் கண்டா நான் கத்தினேன்? நீ சொன்ன விலையைக்கேட்டல்லவா நான் அலறினேன்!'' என்றாள் பெண். —இராம. சண்முகம்



தெரு விளக்குகள் ஒளிர ஆரம்பித்துவிட்டன. மஞ்சு இன்னும் வரவில்லை. எல்லாம் ஒரே புதிராக இருக்கிறது. வயது வந்த வேலை பார்க்கும் பெண்ணிடம் பெற்றவன் கண்டிப்பும் கருருமாக இருக்க வேண்டிய காலமா? அப்படி ஒரு காலம் இருந்ததோ? கண்டிப்பு அரசு புரிந்த காலத்தில் எந்தப் பெண் வேலைக்குப் போனாள்? ஜன்னல் சாய்மானம், முற்றத்துப் படி, இணற்றடி, அம்மா பின்தொடரக் கோயில், இவைகளுக்குத்தான் அந்தக் காலத்துக் கன்னிப் பெண்ணுலகம் அடக்கம். இன்று அந்த உலகம் விரிந்து, பரந்து, சாகரமாகி விட்டது. பெண் இன்று சரிநிகர் சமானமாகப் புகாத இடமே இல்லை. போடாத வேஷமில்லை.

''மஞ்சுவைப் பேசாமல் பி. ஏ.யில் சேர்த்துடுங்கோ. கட்டுப் பெட்டியாயிருந்த வாழ்ந்தெரிச்சல் எங்க தலைமுறையோட ஒழியட்டும்!''

ரங்கி சொன்னாள். மஞ்சு பி. யூ. ஸி. பாஸ் செய்திருந்த வருஷம். ரங்கியை எதிர்த்து யாரால் நிற்க முடியும்?

''பி. ஏ. பாஸ் செய்தவுடன், 'கொட்டு' கொட்டுனு வீட்டில் உட்கார்ந்திருக்க யாராலப்பா முடியும்? நான் வேலைக்குப் போறேன்'' என்று மஞ்சுவே துடியாய் நின்றாள். ரங்கியும், ''குழந்தை சொல்றது ரைட்டுதானே! லட்சம் பெண்கள் போறா. இவ மட்டும் படிச்சுட்டு வீட்டிலே உட்கார்ந்திருக்கணுமா?'' என்று பச்சை விளக்கைக் காட்டியபோது நான் அதிரவில்லை. எல்லாம் இந்தக் காலத்துச் சம்பிரதாயப்படிதான் நடக்கிறது என்று வாளாவிருந்தேன். லட்சம் பேர்கள் செய்வது தப்பாக இருக்குமா, என்ன?

சமூகம் என்பது, தாம்பரம் — பீச் லைனில் ஓடும் மின்சார வண்டி. கதவருகில் மொய்க்கும் நெரிசலில் ஒரு இடுக்கைப் பார்த்து நம்மைப் புகுத்திக் கொள்ள வேண்டியது

ஆனால், இன்று, நானும் ரங்கியும் தெருவைப் பார்த்தவண்ணமே கைகளை பிடித்துக் கொண்டிருக்கிறோம். எட்டு மணிக்கு வரும் குருட்டு ராப்பிச்சைக் காரன்கூட கைத்தடியால் தட்டிக் கொண்டு தெருக் கோடியில் வந்து விட்டான். மஞ்சுவை இன்னும் காணவில்லை. கிட்டத்தட்ட ஒன்றரை மாத





'பொன்னீச் சுரேஷர்''

மஞ்சு தூங்குகிறாள்!

தான். ஜனத் திரள் நம்மை உள்ளே அழுத்துச் செல்கிறது. இறங்க வேண்டிய இடத்தில் நம்மை வெளியே பிடித்துத் தள்ளுவதும் அதே சக்திதான். நம் கையில் என்ன இருக்கிறது? லட்சத்தோடு லட்சத்து ஒன்று. மஞ்சுவும் நெரிசலுக்குள் புகுந்துவிட்டாள்.

மாக அதே ராமாயணம்? கேட்டால், 'ஆபீஸ் வேலை.'

நான் சாய்ந்திருக்கும் ஈஸிச் சேருக்குப் பின்னால் ரங்கி நின்று கொண்டிருக்கிறாள். அவளது தவிப்பைத் திரும்பிப் பார்க்காமலே உணர முடிகிறது. பெற்றவளுக்குச் சோதனைக் காலம்.

''என்ன?''

விஷயத்தைச் சொல்லு முன் அவள் 'என்ன' போடுவதும் நான் பதிலுக்கு 'என்ன?' என்று கேட்பதும் எங்களுக்குப் பழகிப் போன ஒரு சம்பிரதாயம். ஆனால் இன்று நான் வேண்டுமென்றே பேசாமல் இருந்தேன்.

ரங்கி முனகினாள். எனக்கு எரிச்சல் வந்தது. சடக்கென்று திரும்பி, ''தோ பாரு! ஏதாவது விசேஷமா இருந்தா என்கிட்டச் சொல்லு. நித்தியப்படி நடக்கிறதுக்கு என்ன இவ்வளவு கையைப் பிசையலும், முனகலும்?'' என்றேன்.

''குழந்தை என்ன சிக்கலில் மாட்டிண்டிருக்காளோ...''

எனக்கு எரிந்தது. ''இது வம்புதானே? உன் அருமைப் பொண்ணுக்கு வயசு இருபத்திரண்டு, ஞாபகமிருக்கட்டும். குழந்தேன்னு சொல்லாதே. எனக்கு நாராசமாயிருக்கு...'' என்று சீறினேன்.

''ரொம்ப நன்னாயிருக்கே! எல்லாத்தையும் விட்டுட்டு, நான் குழந்தேன்னு சொல்றதுதான் உங்களுக்குப் பத்திக்கிறதா? மணி எட்டாச்சு, குழந்தையைக் காணோமென்னு சொன்னா, இப்படிப் பாயறேளே? ஊரும் உலகமும் கெட்டுப் போயிருக்கிற இந்தக் காலத்துலே இப்படி நேரம் கழிச்சு வந்தா, நாம் என்னன்னு நெனைக்கிறது?''

ரங்கியின் பேச்சு என்னைக் கிளறி விட்டாற் போலாயிற்று. நான் வெகுண்டு திரும்பி, ஈஸிச் சேரின் இரண்டு பக்கங்களையும் இறுகப் பற்றி, கடித்த பற்களினூடே, மிகத் தாழ்ந்த, ஆனால் எரிச்சல் பொங்கும் குரலில், ''இந்தப் புத்தி அன்னிக்கு வேலைக்குச் சேர்க்கும்போதே இருந்திருக்கணும்!'' என்று தலையை மேலும் கீழும் ஆட்டியபடியே சீறினேன்.

ரங்கி அதிர்ந்து விட்டாள். எல்லாவற்றிற்கும் அவளைப் பொறுப்பாக்கி, நான் விலகிவிட்ட நிராதரவில் அவளது உள்ளம் வெதும்பியிருக்க வேண்டும். இமைகளில் நீர் மின்னிற்று.

என் மனம் நெகிழ்ந்தது. மனைவியைக் குற்றவாளிக் கூண்டில் நிறுத்தும் கையாலாகாத்தனத்தை எண்ணி வெட்கினேன். நெஞ்சில் ஈரம் சுரந்தது. தெருவைப் பார்த்தபடியே பொதுப்படையாக — ''நீ போய் உன் ஜோலியைப் பாரு! எப்போ வராளோ வரட்டும். தலையெழுத்துன்னு ஒண்ணு இருக்கோல்லியோ? அவளைக் காலேஜில் படிக்க வைக்கணும்னு தோணினது நம் தலையெழுத்து. அப்புறம் வேலைக்கு அனுப்பணும்னு நெனைச்சது நம்ம தலையெழுத்து. இப்போ லேட்டா வராளேன்னு கையைப் பிசைஞ்சுண்டு நிற்பதும் அதே தலையெழுத்துத்தான். விட்டுத் தள்ளு. உன்னைக் குறை சொல்றதுலே என்ன புண்யம்?'' என்றேன்.

ரங்கியின் புடவைத் தலைப்பு ஓரம் அவள் விரல்களில் ஏறி, நயனங்களில் படர்ந்தது.

''தோ பாரு! இந்தக் காலத்திலே நாம் எதுக்கும் தயாரா இருக்கணும். நம்மை மீறிய உலகம் இல்லேன்னு நினைக்கக்கணும். இது என்ன பஞ்சாயத்துக் கூட்டி பிரஷ்டம் பண்ற காலமா? அவனவனுக்கு அவனவன் ராஜா. நாம் பயப்படற மாதிரி நாளைக்கு மஞ்சுவுக்கே ஏதோ நேர்ந்துடுத்துன்னு வச்சுக்கோ. அதுக்காகப் பம்மிப் போய் நிக்கணுமா, என்ன? இல்லே, நிக்கத்தான் போறோமா? ஒவ்வொருத்தனும் ஒவ்வொரு கண்ணாடி வீட்டுக்குள்ளே வாழ்ந்திண்டு இருக்கான். ஒரு வேலை பார்க்கிற தங்கையோ, பெண்ணோ ஒவ்வொரு வீட்டிலேயும் இருக்கும்... பட்டணம் பரந்து கிடக்கு ரங்கி! சேர்ந்தாற் போல் ஆயிரம் பேர் வழி தவறிக் கெட்டுப்போனாக்கூட ஒரு பயலுக்குத் தெரியப் போறதில்லே. அதை ஒரு பொருட்டாகவும் மதிக்கப் போறதில்லே. அவனவனுக்கு அவனவன் ஜோலி தலைக்கு மேலே இருக்கு. வாயில் ஈ புகுந்தது தெரிய மாட்டேங்கிறது. ரங்கநாயகியின் பெண் மஞ்சு என்ன செய்யறான்னுதான் கவனிக்கப் போறானாக்கும்? விட்டுத் தள்ளு! நம்ம காலம் போயிடுத்து. இது இளசுகள் காலம். அவர்கள் இழுத்த இழுப்புக்கு நாம் போகணும். 'டாடி! இதுதான் என் ஹஸ்பண்டு! ஷேக் ஹாண்டு கொடுங்கோ'ன்னு எவனையாவது திடீர்னு நம் முன்னே கொண்டு வந்து நிறுத்தினால் கூட ஒண்ணும் செய்யறதுக்கு இல்லே. நமஸ்காரம் பண்ற வழக்கமே போயிடுத்து... ஏன்னா அவர்கள் படித்தவர்கள், சொந்தமாகச் சம்பாதிக்கிறவர்கள், சுயமாகச் சிந்தனைபண்ணி நல்லது கெட்டதைத்தானே நிர்ணயம் பண்ணிக்கிற பக்குவம் அடைந்தவர்கள்! பெற்றவர்களுக்கும் பிள்ளைகளுக்குமே ஒருவர் பாஷை மற்றவருக்குப் புரியாமல் போய்விட்ட காலம்... உலகம் ரொம்ப வேகமாப் போயிண்டிருக்கு. அவர்கள் பாஷையிலே அதை முன்னேற்றம்னு சொல்றா. நாம் குடை சாயாமப் பாத்துக்கோன்னு சொல்றோம். ஜன்னி கண்டவன் நிதானமில்லாமல் ஓடறமாதிரி தான் நமக்குத் தோணுகிறது. நம்ம புத்திக்கு எட்டினது அவ்வளவுதானோ என்னவோ, போயேன்!''

நான் கொட்டித் தீர்த்துவிட்டேன். நான் பேசினது ரங்கிக்குப் புரிந்ததோ?

''அதுக்காக நம்ம பொண்ணு சீரழியறதை நாம் பார்த்துண்டு இருக்க முடியுமா என்ன? நன்னா இருக்கே உங்க நியாயம்! உலகம் எக்கேடு கெட்டு வேணும்னாலும் போகட்டும். மஞ்சு வந்தால் இன்னிக்குத் தீர்மானமாச் சொல்லிடுங்கோ. வேலைக்குத் தலைமுழுகினாலும் பாதகமில்லே. வேண்டாமே அந்தக் காசு! போதும், ஏழு ஜன்மத்துக்கும் போதும்...''

''ஆளைப் பாத்தியா, ஆளை! நான் அவகிட்டப் போய்த் தீர்மானமாச் சொல்லணுமா? இதெல்லாம் உன் பாடு, உன் பெண் பாடு. வயசு வந்த பெண்ணிடம் போய் நான் என்னத்தைச் சொல்றது?''

"சொல்றதுக்கு வழியா இல்லே? பொம்மனாட்டி என்ன கரடியாக் கத்தினாலும் எடுபடாது. ஆண்பிள்ளை சொன்னாத்தான் ஒரு பயம் இருக்கும்... என்ன?"

நான் நகைத்தேன். இவள் எந்தக் காலத்தில் வாழ்கிறாள் என்றே தெரியவில்லை.

"அடி, ரங்கி, ரங்கி! ஆண் பிள்ளைன்னு ஒரு தனி ஜாதி இன்னும் இருக்குன்னு நெனைச்சுண்டிருக்கியா? அது இல்லாமல் போயிட்டதுனாலேதாண்டி இத்தனை வம்பும்! என்னையே எடுத்துக் கொள்ளேன். மஞ்சுவை நிமிர்ந்து பார்த்து, 'ஏண்டி லேட்'னு கேட்கக் கூடிய தைரியம் எனக்கு இருக்குன்னு நெனைக்கிறயா? படிச்ச பொண்ணுகிட்டே வாய் கொடுக்கிறது அவ்வளவு சின்னக் கீரைன்னு நெனைக்கிறியா? அவ இங்கிலீஷ்லே இரண்டு கிராஸ் கேள்வி போட்டால் நான் 'அவுட்'! என்னை என்ன செய்யச் சொல்றே?"

"ரொம்ப நன்னாயிருக்கு!" என்று ரங்கி தன் முகவாயால் தோளை இடித்து, அவள் ஏதோ ஆரம்பித்தபோது —

மஞ்சு படியேறினாள். பேச்சு பாதியில் நின்றது.

ஃ ஃ ஃ

மணி ஒன்பது. கட்டிலில் படுக்கையை விரித்துக் கொண்டிருந்தபோது கதவருகில் அரவம் கேட்டது. மஞ்சு நின்றுகொண்டிருந்தாள்.

ரங்கிதான் அனுப்பியிருக்கிறாள். சற்று முன் சமையலறையில் அவள் இரைந்து கொண்டிருந்தது காதில் விழாமல் இல்லை.

"என்னடி பதிலே சொல்லாம? ஏண்டி லேட்? நானும் ஒரு மாசமாப் பார்க்கிறேன். தட்டிக் கேட்கிறதுக்கு ஆள் இல்லைன்னு நெனைச்சியா? சம்பாதிக்கிற திமிர் தலைக்கு ஏறிப் போயிடுத்தா? ஏண்டி?"

சமையலறையே கிடுகிடுத்துக் கொண்டிருந்தது. அம்மா ஸ்தானத்திலிருந்தால் வருகிற கோபமெல்லாம் தட்டில் சோற்றைக் கொட்டும்போதுதான் வருமோ என்னவோ! பாவம் மஞ்சு...

"சொல்லேண்டி! இடிச்ச புளியா உட்கார்ந்திருந்தா என்ன அர்த்தம்?"

ரங்கிதான் விடாமல் குடைந்துகொண்டிருந்தாள். திடீரென்று விசும்பல் கேட்டது. மஞ்சுவின் குமட்டில் ஒரு குத்து விட்டாளோ என்னவோ! ரங்கி செய்யக் கூடியவள்தான். குழந்தை அழுதாள்.




'எங்கிட்டச் சொல்ல வேண்டாம்டி! போ, அப்பா கிட்டப் போ... இரண்டுலே ஒண்ணு தீர்த்துக் கட்டணும்னு துடிச்சிண்டிருக்கார்.''

போய். மனதாரப் புளுகுகிறாள் ராஜி. 'தீர்த்துக் கட்டக் கூடிய திராணி எங்கிருந்து வரும்? மஞ்சுவை வேலைக்குப் போக வேண்டாம் என்று சொல்ல முடியுமா, அல்லது 'உனக்கும் எனக்கும் சம்பந்தமில்லை' என்றுதான் பிரித்துக் கட்ட முடியுமா? மஞ்சு தாமதமாக வரும் காரணத்தைத் தெரிந்து கொள்ள வேண்டுமென்ற உந்தலே, அவள் 'ஆபீஸ் வேலை' என்று கூறுவதை நொண்டிச் சாக்காக நினைப்பதே சந்தேகத்தின் அறிகுறிதானே? அப்படி ஒரு சந்தேகம் ஏற்படுகின்ற நிலைமை உருவாகி விட்டால், பெற்றவன் — பெண் இவர்களின் உறவில் சுருதி பிசகிவிட்டது என்றுதானே பொருள்? அப்படிச் சுருதியைப் பிசக விடுவது யார் தவறு? அபஸ்வரம் தட்டுவதற்கு முழுப் பொறுப்பையும் பெண் தலையில் கட்டிவிட முடியுமா? இந்தப் பிரச்னை — பெண்ணைப் பெற்றவனின் கிடை கொள்ளாத் தவிப்பு— இந்தத் தலைமுறைக்கு மட்டும் ஏற்பட்டதா, அல்லது பாட்டன், கொள்ளுப் பாட்டன் காலத்திலே இருந்திருக்கிறதா? கால் நூற்றாண்டுக்கு முன்னால் இருந்த அப்பாக்களுக்கெல்லாம் இப்படி ஒரு பிரச்னை இருந்திருக்குமோ?

பைத்தியக்காரத்தனம். சம்பிரதாயமில்லாத ஒப்பு நோக்கு. அவனவன் தலையெழுத்தை அவனவன் அனுபவிக்கிறான். ஒவ்வொரு தலைமுறையும் ஒவ்வொரு சமூகப் பிரச்னை பிடித்துக் கொள்ளுகிறது. அந்தப் பிரச்னையுடன் போராடுவதுதான் வாழ்க்கை. ஆனால் நிஜமாக நாம் போராடுகிறோமா? அலைபோல் வரும் பகைப் பட்டாளத்துக்கு முன், ஒரு கண்டு விரலைக்கூடத் தூக்கி அசைக்காமல், நெடுஞ்சாண் கிடையாக விழுந்து சரணடையும் பேடிமையைப் போராட்டம் என்று கூற முடியுமா? இம்மண்ணுக்கு ஒவ்வாத பாலுணர்ச்சியை மையமாகக் கொண்ட விதேசிக் கலாசாரக் கிருமிகள் நமது சமூகத்தின் விளிம்புகளிலிருந்து முதுகெலும்பு வரை அரிக்கத் தொடங்கியபோது, போராடித் தோற்றவர்கள் எவ்வளவு பேர்?

பெருமளவில் வயது வந்த பெண்கள் வேலைக்குப் போவதினால் ஏற்பட்டிருக்கும் புதிய அருவருப்பான சில பிரச்னைகள், அவைகளினால் அரித்துத் தின்னப்படும் பழமைக் கோட்பாடுகள், அக்கோட்பாடுகளின் நலிவினால் உரமிழக்கும் சமூகம், அந்த சமூகத்துக்குள் நசியும் குடும்பம், குடும்பத்தின் ஆணி வேரான தனி மனிதனின் கிடைகொள்ளாத் தவிப்பு — ஓ! இது உண்மையிலேயே இவ்வளவு பெரிய பிரச்னையா?

தலைக்கு மேல் போய்விட்ட பிறகு விழித்துக் கொள்ளும் பேதைமை! போகட்டும்... ஆனால் மஞ்சு? அவள் பிரச்னை? ஒரு வேளை அவள், பெற்றோர்களின் கெடுபிடி தாளாமல், இரவோடு இரவாக, சொல்லாமல், கொள்ளாமல், எவனுடனாவது...

சே! அப்படி நினைப்பதே என் பெண்ணுக்கு நான் இழைக்கும் துரோகம்; 'என்' பெண் என்று சொல்லிக் கொள்ளக்கூடிய யோக்கியதை எனக்கு உண்டென்றால், என்னைப் போன்ற கோடிக் கணக்கான துளிகள் சேர்ந்த கலவைதான் இச் சமூகம் என்றால், நானுமே ஆவிக்கும் சமூகமாகிய கட்டுக்கோப்புள்ள உறவின் நெருக்கத்தை, பிணைப்பை, புனிதத்தை உணரக் கூடிய யோக்யப் பொறுப்பு, உணராவிட்டால் ஏற்படக் கூடிய நாசம் ஆகியவைகளை நான் அறிந்திருந்தால், என் குடும்பம், என் மனைவி, என் மகன், என் பெண் ஆகியவர்களின் நடத்தைக்கான முழுப் பொறுப்பையும் நெஞ்சை நிமிர்த்தி நான் ஏற்கிறேன்.

ஆனால் மஞ்சுவிடம் எப்படிக் கேட்பது?

அவள் இன்னும் கதவருகிலேயே நின்று கொண்டிருக்கிறாள். கால் கட்டை விரல் அரை வட்டம் போட்டுக் கொண்டிருக்கிறது.

இக்கட்டான நிலைமை. இந்த உலகத்திலிருக்கிற தெய்வங்களெல்லாம் பக்கபலமாக எனக்கு நின்றால்கூட மஞ்சுவின் உள்ளம் அதிரும்படியாகப் பேச என் மனது இடம் கொடாது. அப்படிச் செல்லமாக வளர்ந்து விட்டாள் அவள். ஒரு குறை வைக்கவில்லை. 'டி' போட்டுக் கூட அழைத்ததில்லை. 'குழந்தே', 'அம்மா' என்று உயிரை விடுவேன். அவள் ஸ்கூல் ஃபைனல் பாஸ் ஆன செய்தியை ஏந்திக் கொண்டு தோழிகள் புடைசூழ, சிற்றாடையும், தாவணியுமாக குதித்துக் குதித்து ஓடி வந்து, 'அப்பா, பாஸ்! ஸிக்ஸ்டி ஃபைவ் பர்செண்ட்!' என்று கம்பீரக் குரலில் அறிவித்தபோது, நான் வாயெல்லாம் பல்லாக, உச்சி மண்டை குளிர, ரங்கியைப் பார்த்து, 'ஏய்! குழந்தைக்குச் சுற்றிப் போடு' என்று கூறியவுடன் மஞ்சுவின் தோழிகள் 'கொல்'லென்று சிரித்ததும், மஞ்சு முகஞ் சிவக்கப் பார்வையால் என்னைச் சுட்டெரித்ததும், பிறகு அன்றிரவு தனியாக என்னிடம் வந்து, ''அப்பா, இனிமேல் என்னைக் குழந்தைன்னு கூப்பிட்டால் நான் உங்க கூடப் பேசவே மாட்டேன்!'' என்று எச்சரிக்கை விடுத்ததும், நேற்று நடந்ததுபோல் இருக்கிறது. அதே மஞ்சுவா இன்று என் முன் தலை குனிந்து, குற்றவாளிக் கூண்டில் நிற்பது போல் செய்வதறியாமல், சொல்வதறியாமல், பேசாமடந்தையாக நிற்கிறாள்! அவளது மௌனம் என் நெஞ்சைப் பிழிந்தெடுக்கிறது. ஓ! வயது ஆக ஆக வெவ்வேறான இரண்டு பாதைகளில் செல்லும் வழிப் போக்கர்களைப் போல் தந்தையும், மகளுமே எப்படிப் பிரிந்து விடுகிறோம்! மஞ்சு! குழந்தைப் பருவம் உனக்குப் போய்விட்டதா? இறக்கை முளைத்து விட்டதா? பறந்து போய் விடுவாயோ? உன் பாதை வேறு, என் பாதை வேறு என்று உலகத்தோர் உன் காதைக் கடித்து விட்டார்களா? என்னுடைய பரிவும் பாதுகாப்பும் உனக்குத் தேவையற்ற பொருளாகி விட்டனவா? சொல்லேன் மஞ்சு! உன் நெஞ்சத்தைத் திறந்து கொட்டி விடு! என்னில் ஒரு பகுதியான நீ, தனித்து நிற்பதனால் வேற்றாளாகி விட முடியுமென்று நினைக்கிறாயா? என்னதான் இரு பகுதிகளாகப் பிரிந்து நின்றாலும், நீ அழும்போது நான் அழுவதும், நீ சிரிக்கும்போது

நான் நிறைவதுமான அந்த உறவுக்குப் பெயர் என்ன? அந்த இரண்டற்ற ஒருமையின் பிரசன்னத்தை, அச்சந்நிதியில் ஒளிரும் தெய்வீகத்தைப் புரிந்து கொள்ள உனக்கு இன்னும் வேளை வரவில்லையா? மஞ்சு ! சொல் ! இதோ தலை குனிந்து நிற்கும் உனது தர்ம சங்கடத்தால் என் நெஞ்சம் பிழிந்து முறுக்கப் படுவது உனக்குத் தெரியவில்லையா ?

நினைத்ததில் ஒரு வார்த்தைகூட நாவுக்கு வரவில்லை. ''என்னம்மா வேணும்?'' என்ற இரண்டே வார்த்தைகள் என்னை மீறி என்னிடமிருந்து பிரிந்து, கம்மித் தோய்ந்தபோது நீர் முட்டும் கண்களுடன் மஞ்சு நிமிர்ந்தாள்.

அவளது பார்வைக்குமுன் பாஷை ஒரு முடம்.

நெஞ்சுக்குள் சீறிக் கொப்புளிக்கும் உணர்ச்சிகளைப் பேசி ஆறப் போடாமல், பார்வையால் பொங்கப் பொங்க அப்படியே என் நெஞ்சுக்குள் பாய்ச்சுகிறாள். என் உடல் பதறுகிறது.

அந்தப் பார்வை கேட்கிறது:

''ஹூம் ! அம்மா பங்கு ஆகிவிட்டது. எங்கே உன் பங்கு? பலியாடு காத்துக் கொண்டிருக்கிறது.... பாய்ச்சு உன் கத்தியை !''

எனக்குக் கண்களில் நீர் கரந்தது. இது பெற்றோர்களுக்குமட்டுமா சோதனைக் காலம்? பெண்களுக்கும்தான். இம்மண்ணுக்கு முற்றிலும் புதிய ஒரு வேற்று நாகரிகத்தை முதன் முதலாக வெள்ளோட்டம் விடும் போது, வெறும் பார்வையாளர்களாக நிற்கும் பெற்றவர்களுக்கே இவ்வளவு தர்மசங்கடமென்றால், அவ்வெள்ளோட்டத்தில் பங்கு பெறுபவர்களின் நிலைமை குறைந்ததாகவா இருக்கப் போகிறது ? எந்தச் சிக்கலில் எப்படி மாட்டிக் கொண்டிருக்கிறாளோ மஞ்சு !

நேரம் கடந்து கொண்டிருந்தது. அவளை நிற்க வைத்துச் சித்திரவதை செய்வதை நான் விரும்பவில்லை. ''என்ன வேணும்?'' என்று சற்று உரக்கவே கேட்டேன்.

'அம்மாதான் உங்ககிட்டே போகச் சொன்னா!'' என்று சொல்லி முடிப்பதற்குள் அவள் கேவிக் கேவி அழ ஆரம்பித்து விட்டாள்.

இந்தக் கண்ணருவிக் காட்சியைப் பார்க்கக் கூசித்தான் ரங்கியிடம் படித்துப் படித்துச் சொன்னேன். கேட்டாளா அவள்? பொய் சொல்லிப் பெண்ணை என்னிடம் அனுப்பி வைத்திருக்கிறாள். மஞ்சு அழுதால் என் இதயத்தில் யாரோ ஆற்று மணலை வைத்துத் தேய்ப்பதைப் போலிருக்கிறது.....

''நான் உன்னைக் கூப்பிடவே இல்லையே!''


நான் உண்மையைச் சொன்னேன். அவள் என்னைப் பார்த்த பார்வையில் சந்தேகம் கொப்புளித்து வழிந்தது.

''நெஜமாச் சொல்றேன் மஞ்சு!'' நான் மன்றாடினேன்.

'' அப்பா !'' என்று அவள் ஓடி வந்து என் கால்களை இறுகப் பற்றிக் கொண்டாள்.

கட்டுப்படுத்த முடியாமல் என் கண்கள் பொல பொலத்தன. கைகள் மஞ்சுவின் தலையை வருடின. நெஞ்சு சிக்கில் திரிந்தது. கேவலுக்கிடையில் அவள் தடுமாறினாள் :

'' இல்லே... நீங்க... எல்...வாரு...மே என்... மே...லே.... சந்தேகப்படறேள் !''



''உங்கம்மா ஏன் வந்தாள்? அவளை உன்கூட அழைத்து வரவேண்டாம் என்று நான் உனக்குத் தந்தி அடித்திருந்தேனே!''

''ஏன் அப்படித் தந்தி அடித்தீர்கள் என்று கேட்கறதுக்குத்தான் இப்போ கிளம்பி வந்திருக்கிறாள்!''

''மஞ்சு !''

நான் அவள் வாயைப் பொத்துகிறேன். நிமிர்ந்திருக்கும் அவளது கன்னத்துக் கண்ணீரோடு எனது கண்ணீர் சங்கமமாகிறது.

'' அப்பா !''

அவள் மீண்டும் என் பாதங்களில் முகத்தைப் புதைத்துக் கொள்கிறாள்.

'' மஞ்சு ! வேண்டாம், மஞ்சு, அழாதேயேன்.... எனக்கு என்னமோ பண்றதே !''

கதவருகில் வந்த ரங்கி எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டிருக்கிறாள். ரங்கி ! நீயுமா அழுகிறாய்? அடக் கடவுளே !....

ஃ ஃ ஃ

நேற்றிப் பொட்டு தெறித்துக் கொண்டிருந்தது. தலையணை தெப்பமாகிவிட்டது.

கண்ணீர் உகுக்கும் போதெல்லாம் பிரச்னைக்கு முடிவு கண்டுவிட்ட மாதிரி ஓர் இடைக்கால நிம்மதி. அழுவது இதமாயிருக்கிறது. கருதி பிசகவில்லை என்று ஏதோ ரீங்காரம் செய்வது போலிருக்கிறது. ஒருவரை யொருவர் புரிந்து கொண்ட முத்திரையாகக் கண்ணீர்த் துளிகள் உருளுகின்றன. நல்ல நெஞ்சத்தின் அர்க்கியம். நேர்மை செய்யும் ஆஹுதி. பாஷைக்கு வேலையில்லா அதிசயம் !

கட்டிலுக்கருகில் ரங்கி வந்து நிற்கிறாள்.

''இன்னும் தூங்கலியா ?''

''நீயும் முழிச்சுண்டுதான் இருக்கியா ?''

''ஆமாம்! தூக்கம் வரலை....''

'' எனக்கும் தூக்கம் வரலே..... குழந்தை என்ன பண்று ?''

''அவ மட்டும் தூங்கியிருக்கப் போறளா, என்ன?அவளும் அழுதுண்டுதான் இருப்பாள்.''

''அப்படீன்னு, நீயும் அழுதுண்டுதான் இருக்கியா ?''

''நீங்க?''

''நானு ? ஆமாம்!''

''நானும் ஆமாம் !''

எனக்குச் சிரிப்பு வந்தது. உடம்புகூடக் கலகலப்பாக இருந்தது. கொறிப்பதற்கு ஏதாவது இருந்தால்கூடத் தேவலைபோலிருந்தது. எழுந்து உட்கார்ந்து சோம்பல் முறித்தேன்.

''நாம மூணு பேரும் இப்போது எதுக்காக அழுதோம் ?''

''அந்த ஆண்டவனைத்தான் கேட்கனும்!''

நான் களுக்கென்று சிரித்து விட்டேன்.

''எதுக்காகச் சிரிக்கிறேள் ?''

''சித்த முன்னாடி எதுக்காக அழுதேன்? அதுக்காகத்தான் இப்போ சிரிக்கிறேன். சில சமயம் அழுகை, சிரிப்பு இரண்டுமே பிரிக்க முடியாம ஒண்ணாயிடறது !''

ரங்கியை ஜாடையாகக் கட்டிலில் உட்காரச் சொன்னேன்.

''ரங்கி ! மஞ்சுவைப் பத்தி நீ என்ன நினைக்கிறே ?''

ரங்கியை மங்கலான வெளிச்சத்தில், ஒரு குறிப்பிட்ட கோணத்திலிருந்து பார்த்தால் ரவிவர்மா படம் போலிருக்கும். இப்பொழுது அந்தக் கோணத்தில் அவள் உட்கார்ந்து பதில் சொல்லாமல் ஏதோ யோசித்துக் கொண்டிருந்தாள்.

''சொல்லேன் !'' நான் விரட்டினேன்.

''என்னத்தைச் சொல்றது? எனக்கு ஒண்ணும் புரியலே ! கண்ணைக் கட்டிக் காட்டுலே விட்ட மாதிரி இருக்கு. ஏண்டி லேட்டுன்னு கேட்டதுக்குப் பலன் மூணு பேருமா அழுதுண்டிருக்கோம் ! அந்தப் பொண்ணு பிழியப் பிழிய அழும் போது வயிற்றை அப்படிக் குமைக்கிறது.... எதுக்கு இந்த வம்பு? அவ வேலை பார்த்தது போதும். நாளைக்கே ஒரு கால் கடுதாசு எழுதச் சொல்லிடுங்கோ....''

''அப்படின்னு உனக்கு இன்னும் சந்தேகம் தீரலே ?''

''சந்தேகம், சந்தேகம்னு ஏன் போட்டுக் குழப்பறேள்? நீங்க சொல்லுங்களேன். உங்க பெண்ணைப் பத்தி நீங்க என்ன நினைக்கிறேள் ?''

''என் பெண்ணைப் பத்தி நான் சொல்லட்டுமா ரங்கி ?'' என்று நான் நிமிர்ந்து உட்கார்ந்த போது, அவள் கைகளால் அணைக்கப்பட்ட முழங்காலுக்கு மேல் முகவாயைப் பதித்தவாறே கதை கேட்கும் குழந்தையைப் போல் மிக உன்னிப்பாக என்னை நோக்கினாள்.

''ரங்கி ! நான் நினைக்கிறபடி நிலைமை அவ்வளவு மோசமில்லேன்னுதான் எனக்குப் படறது. இப்போ பொசல் காத்து மாதிரி வீசற அசல் தேசத்து நாகரிகத்துலேயே நம் பெண்கள், பெண்மையைப் பறக்க விட்டு விட்டு, தலைகுப்புறக் கவிழ்ந்து போய் விடுவார்களோன்னு பயப்பட வேண்டிய அவசியமில்லை என்றுதான் நினைக்கிறேன். ஒரே ஒரு சின்னக் காபந்து பண்ணிக் கொண்டால் போதும்....... இன்று நாம் மூவரும் கண்ணீர் உகுத்த வேளை இருக்கே அது மிகவும் புனிதமான வேளை. மற்ற தேசங்களிலெல்லாம் இந்தக் கண்ணீருக்கும் குடும்ப பாசத்துக்கும் ஏற்பட்ட பஞ்சத்தினால்தான் அவர்கள் நாகரிகம் அப்படியிருக்கு. குழந்தை பிறந்தவுடனே ஆயாவுக்குத் தத்தம் பண்ற நாகரிகம்தானே ! தன் சுகத்துக்காகக் குழந்தைகளைக் 'கையைக் கழுவி'விடும் அவலத்திற்கு அவர்கள் 'சுதந்திரம்' என்று சாமர்த்தியமாகப் பெயர் சூட்டியிருக்கிறார்கள். அதன் பலனை அவர்கள் இப்பொழுது அநுபவித்துக் கொண்டும் வருகிறார்கள்... நல்ல வேளையாக நாம் குடும்பம் என்கிற தெய்வீக நிறுவனத்தை — சமூகத்தின் ஆணிவேரை — துருப் பிடிக்காதபடி காப்பாற்றி வருகிறோம். இந்தச் சந்தோஷமான நிலைமை நீடிக்கிற வரை நம்மை எவராலும் அசைக்க முடியாது. எப்பொழுது இந்நிலைமை மாறுகிறதோ அப்பொழுது நமது நாகரிகமும் வேரறுக்கப்படும். ஆனால் ரங்கி, பெற்றவர்கள் உகுக்கும் கண்ணீரை மீறிக் கொண்டு தான்தோன்றித்தனமாய்ப் போய் விடும் குழந்தைகள் நம் பூமியில் பிறக்கவில்லை என்றுதான் சொல்வேன்.... ஏய், ரங்கி! தூங்கிப் போயிட்டியா ?''

''இல்லே'' என்று தலையாட்டி பொம்மையைப் போல் அவள் தலையை உருட்டுகிறாள்.

''ரங்கி! குடும்பம் என்கிற பயிருக்கு அவ்வப்போது பாசத்தினால் நெஞ்சுருகி வடிக்கும் கண்ணீர் இருக்கிறதே, அதுதான் உரம். அக்கண்ணீர் வற்றாத வரை நாம் எதுக்குமே பயப்பட வேண்டாம். பெண்ணை வளர்க்கிறது, மைசூர் பாகு பண்ணுவது போல்தான். தீய்ந்து போகாமல் கண் கொத்திப் பாம்பாக் கவனிச்சுக்க வேண்டியது தான். இல்லேன்னு சொல்லலே. ஆனால், பயந்துண்டு முன் பதத்திலேயே இறக்கி வச்சுட்டா பச்சை வேகம் அடிக்கும்..... சர்வ சுதந்திரமும் தனக்கு இருக்கிறது என்கிற நம்பிக்கையிலேயே திருப்தியடைந்து விடுபவள் பெண். மஞ்சுவைக் கால் கடுதாசு கொடுக்கச் சொல்றியே அதுக்காகச் சொல்றேன். பெண்ணுக்குக் கைநிறைய முறுக்குச் சீடைகளை வைத்துக் கொண்டு தின்னாமல் பார்த்தே பூரிக்கும் குழந்தைத்தனம் எப்பொழுதும் உண்டு. ஆனால் கையிலிருப்பதைப் பிடுங்கி எட்டாமல் வைத்தாலோ, டிபன் நேரத்துக்கு அடுத்த வீட்டுச் சமையலறையில் போய் நிற்கும்.... எதுக்காகச் சொல்றேன், குடும்பத் தலைவன் தனது பொறுப்புக்களைச் சரியாகப் புரிந்து கொண்டு பொறுப்புடன் நடந்து விட்டால்... ஏய், ரங்கி ! தூக்கமா ?''

''இல்லேயே !'' என்று சொருகும் கண்களை உலுப்புகிறாள்.

''போதும், நீ கேட்ட லட்சணம் ! உன் பொண்ணு என்ன பண்றான்னு ஒரு நடை பார்த்துட்டு வந்து, பாயைப் போட்டுண்டு ஒரு வழியாப் படுத்துக்கோ !''

அவள் தள்ளாடிக் கொண்டே எழுந்து போய்விட்டுத் திரும்பி வந்து, ''நன்னா அசந்து தூங்கறது!'' என்று சொல்லிக் கொட்டாவி விடுகிறாள் !

''ஆளை விடு! தூங்குறாளோ இல்லியோ? வயசு வந்த பெண் நன்னா அசந்து தூங்குகிற வரையில் ஒரு கவலை இல்லை போ !'' என்று நான் முடிப்பதற்குள் —

'வெடுக், வெடுக்'கென்று பாயை உதறிக் கொண்டிருந்தாள் ரங்கி !

வோட்டுக்கள் கூறும் உபகதைகள்

அண்ணாதுரை தோற்றார்!

பக்தவத்சலம் வெற்றி பெற்றார்!

சென்னை நகராட்சி மன்றத் தேர்தலில் நடந்தது!

சமீபத்தில் நடந்து முடிந்த நகராட்சி மன்றத் தேர்தல் நினைவிருக்கிறதா? மன்றத்தில் எந்தெந்தக் கட்சிகளுக்கு எத்தனை எத்தனை ஸ்தானங்கள் கிடைத்தன என்று வேண்டுமானால் சட்டென்று உங்களால் சொல்ல முடியும். இன்னும் கொஞ்சம் யோசித்து உங்களுக்குத் தெரிந்த சிலர் வெற்றியோ, தோல்வியோ அடைந்த விவரங்களையும் கூறுவீர்கள். அதற்கு மேல்....?

இதோ சில ருசிகரமான புள்ளி விவரங்கள்:

சம்பந்தம் என்ற பெயருக்கும் இந்தத் தேர்தல் வெற்றிக்கும் சம்பந்தமே இல்லை போலும். வேட்பாளர்களாக நின்ற மூன்று சம்பந்தங்களுக்குமே நகராட்சி நிர்வாகத்தில் சம்பந்தம் கிடையாது என்று வாக்காளப் பெருமக்கள் சொல்லி விட்டார்கள். ஒரு ஆசாமி காங்கிரஸ் கட்சியின் சார்பில் நின்றவர். மற்ற இருவரும் தி. மு. க.

அனந்த கிருஷ்ணன் என்ற பெயருக்கும் அதிர்ஷ்டமில்லை. மூன்று அனந்தகிருஷ்ணன்



களுமே தேர்தல் களத்தில் 'அவுட்'. இருவர் காங்கிரஸ் கட்சியையும் ஒருவர் ஜனசங்கத்தையும் சேர்ந்தவர்கள்.

சிட்டி பாபுக்கள் மொத்தம் நாலு பேர்! நாலுக்கு இரண்டு பழுதில்லை. வெற்றிபெற்ற இருவரில் ஒருவர் காங்கிரஸ், ஒருவர் தி.மு.க. தோற்ற சிட்டி பாபுக்கள் இருவரும் கழக வேட்பாளர்களே.

லோகநாதன்களும் நால்வரே. கழக லோகநாதனும் காங்கிரஸ் லோகநாதனும் வெற்றிப் பட்டியலில் இடம் பெறுகிறார்கள். பத்தொன்பது, எழுபத்தி இரண்டு வட்டங்களில் முறையே முயற்சி செய்த காங்கிரஸ், சுயேச்சை லோகநாதன்களை, மாநகராட்சி மன்றம் இந்தத் தடவை உள்ளே அனுமதிக்கத் தயாரில்லை.

அண்ணாதுரை, நெடுஞ்செழியன் இந்தத் தேர்தலில் நின்று தோற்றதும், பக்தவத்சலம் நின்று வெற்றி பெற்றதும் ஆச்சரியத்திலும் ஆச்சரியம். என்ன திகைக்கிறீர்கள்? சுயேச்சை உறுப்பினர்களாக ஓர் அண்ணாதுரையும், ஒரு நெடுஞ்செழியனும் நின்றார்களே! காங்கிரஸ் வேட்பாளர்களாக நின்ற இரண்டு பக்தவத்சலங்கள் வெற்றி பெற்றார்கள்.

முப்பதாவது வட்டத்தில் நேரடிப் போட்டி. ஒரு காங்கிரஸ் வேட்பாளரும் ஒரு கழக வேட்பாளரும்தான்! இரண்டுபேர் பெயருமே சக்கரபாணிதான்! காங்கிரஸ் சக்ரபாணிக்கு யோகம்!

ராஜாஜி நகர் — அங்கு வெற்றி பெற்றது யார் தெரியுமா? காங்கிரஸ் வேட்பாளர்! காமராஜ் நகர் — அங்கு வெற்றி மாலை சூடியவர் ஒரு சுதந்திரா வேட்பாளர்!

சத்தியமூர்த்தி நகரில் காங்கிரஸ் வேட்பாளரும் கருணாநிதி நகரில் கழக வேட்பாளரும் வெற்றி பெற்று வட்டங்களின் பெயர் மதிப்பைக் காப்பாற்றி விட்டார்கள்!

சைதாப்பேட்டையில்தான் அதிகமான வோட்டுக்கள் பதிவாயின. பதிவான வோட்டுக்கள் 10,108. கச்சாலீசுவரத்தில்தான் குறைந்த அளவு ஓட்டுக்கள் — 4,201.


மிகுந்த அதிக அளவு வித்தியாசத்தில் வெற்றி கிட்டிய வட்டம் எம். ஜி. ஆர். நகர். வெற்றி பெற்ற கழக வேட்பாளர் போட்டியிட்ட காங்கிரஸ் வேட்பாளரை விட 3,025 வோட்டுக்கள் அதிகம் பெற்றிருந்தார்.

மிகக் குறைந்த அளவு வித்தியாசத்தில் வெற்றி கிட்டிய வட்டம் பட்டாளம். வெற்றி பெற்ற காங்கிரஸ் வேட்பாளர் போட்டியிட்ட கழக வேட்பாளரைவிட 28 வோட்டுக்கள் தான் அதிகம் பெற்றார்.

பாராட்டப்பட வேண்டிய வட்டம் கோகுலணி நகர்! செல்லுபடியாகாத வோட்டு ஒன்றுகூட இல்லை!

மிகக் குறைந்த வோட்டுக்கள் வாங்கிய வேட்பாளர் அறுபத்தி ஒன்பதாம் வட்டத்தைச் சேர்ந்தவர். சுயேச்சை வேட்பாளர் தணிகாசலம் வாங்கிய வோட்டுக்கள் எட்டு!

— **பட்டினத்தார்**



"அமுல் பாலுணவிலே
வைட்டமின்கள் எதற்காக
இருக்கின்றன தெரியுமா?"
என்று கேட்டது பாப்பா.
"தெரியுமே" என்று ஒத்துப்
பாடின அச் சிறு பிராணிகள்.
அமுல் பாலுணவு
உங்கள் குழந்தைக்குத் தேவையான 7 வைட்டமின்கள்
அடங்கியது.
Amul

மணம் தருவது?

சந்திரனுக்கு இரண்டு பெண்கள் — சூறைக் காற்று, மென் காற்று என்று. சந்திரனுக்கு மென் காற்றிடம்தான் அதிக அன்பு. இதன் காரணம் சூறைக்காற்றுக்கு விளங்கவில்லை. உள்ளத்துக்குள்ளேயே மிகவும் மறுகியது. அதன் ஐயத்தைப் போக்கச் சந்திரன், ஆத்ம சோதனைக்கு ஒரு வாய்ப்பு அளித்தது.

ஒரு நாள் அது தன் இரு பெண்களையும் அழைத்துக் கூறிற்று: 'ஏழு முறை பாரிஜாத மரத்தை வலம் வாருங்கள்.'

சந்திரனின் ஆணையைக் கேட்டதுதான் தாமதம், சூறைக் காற்று நொடியில் ஏழு முறை பாரிஜாதத்தை வலம் வந்துவிட்டது. ஆனால்



மென்காற்றுக்கு நேரம் பிடித்தது.

ஆனால் அது திரும்பும் பொழுதே மாளிகையும் சூழ்நிலையும் மணத்தன.

சந்திரன் சூறைக் காற்றிடம் கூறியது:

''பார்த்தாயா, குழந்தை! அதிவேகம் பலனளிக்கவில்லை. நீ வெறுங் கையோடு திரும்பினாய். ஆனால் இயல்பான மென்காற்றின் போக்கு மனத்தைக் கவரும் மணத்தைக்கொண்டு வந்தது.

- பெர்ட்ரண்டு ரஸ்ஸல்

ஒரு கணம் வாழ்ந்தாலும் போதும்; மணம் பரப்பும் மலராக வாழ வேண்டும். குத்தும் முள்ளாக நீண்ட நாள் வாழ்ந்து பயனில்லை.



ஒருவர்: உமக்குத் தெரியுமா? ராமு கிளி போல ஒரு பெண்ணைக் கலியாணம் செய்து கொண்டு வந்திருக்கிறான்.

இன்னொருவர்: தெரியுமே! அவள் புதுமைக் கிளி! அவள் சொல்வதைப் போலவே ராமுவும் சொல்கிறான்!

-- மருதி

இது என்ன வேலை?

ஆசிரியர்: சீனு! வீட்டு வேலை செய்து வந்தாயா?

சீனு: பொழுது விடிந்தது முதற் கொண்டு வீட்டு வேலைதான் சார் செய்தேன்! முதலில் ரேஷன் கடைக்குப் போனேன், அப்புறம் மண்ணெண்ணெய்க் க்யூவில் நின்றேன். பிறகு காப்பிக் கொட்டைக்குத் தவம் கிடந்தேன். கடைசியாக லாண்டரிக்குப் போய்ச் சலவைத் துணி வாங்கி வந்தேன்! இவ்வளவும் வீட்டு வேலை தானே, சார்?



ஒரு சமயம் சரோஜினி தேவி இந்திய மாதர் சங்கத்தில் உரை நிகழ்த்தச் சென்றார். அவருடைய ஆசனத்திற்கு நேர் எதிரில் ராட்டைநூற்கும் கோலத்தில் மகாத்மா காந்தியின் திருவுருவப் படம் ஒன்று மாட்டப்பட்டிருந்தது. அதைப் பார்த்துச் சரோஜினி தேவி, ''ஆமாம், அவர் சிலந்திதான்!'' என்று சிரித்தார்.

மண்டபத்தில் கூடியிருந்த மாதர்கள் எல்லோரும் திகைத்துப் போய்ச் சரோஜினி தேவியையே கூர்ந்து கவனித்தனர்.

''காந்திஜியைத்தான் சொல்கிறேன்; அவர் அயராது உழைக்கும் சிலந்தி! ஒரு விநாடிகூட இடைவிடாமல் நூற்று நூற்



றுப் பின்னிப் பின்னித் தன் உழைப்பையே தவமாகச் செய்து வருகிறது சிலந்தி. அது போலவே மகாத்மா நம் பாரத நாட்டின் தலைவிதியாகிய இழையை நூற்று நூற்று வலுவாக நெய்வதிலேயே ஒவ்வொரு விநாடியும் கருத்தாக இருக்கிறார். அவருடன் உறவு கொண்டாடச் சிலந்திக்கு முழு உரிமை உண்டு!'' என்று சொல்லி விட்டு மீண்டும் காந்திஜியின் படத்தைப் பொருள் நிறைந்த பார்வையுடன் நோக்கி அமர்ந்தார் சரோஜினி.

குழுமி இருந்தவர்களுடைய கண்கள் யாவும் காந்திஜியின் படத்தையே நாடின. அதன் மீது சிலந்தி வலை பின்னியிருந்தது!

— இராம. சண்முகம்

"எனக்கு... அதுவும் தெரியும்!"

-எஸ். பத்மாவதி-

''ஏண்டா மூர்த்தி! கருணாவுக்கு என்ன தெரியும்னு நீ இப்படிக் குதிக்கிறே? வெள்ளைத் தோலைக் கண்டு மயங்கினால் போதுமா? பாரதிக்குத் தெரிந்தது அவளுக்கு ஏதாவது தெரியுமா? கருணாவை விடச் சிறிது நிறம் மட்டே தவிர, இவள் அழகும் லட்சணமும் அவளுக்கு வருமா? பாரதியின் படிப்பென்ன பாட்டென்ன... டான்ஸென்ன... தையல் வேலை, கைவேலை, சமையல் வேலை எல்லாவற்றிலும் கெட்டிக்காரி. கருணா சுத்தச் சோம்பேறி. ஒன்றும் தெரியாது. சும்மா டிரஸ் பண்ணிக் கொண்டு மினுக்கத் தெரியும். மினுக்கி மினுக்கி உன்னை மயக்கிவிட்டாள். நீயும் மயங்கிட்டே. நான் சொல்றதைக் கேளுடா. கல்யாணங்கறது ஆயிரம் காலத்துப் பயிர்னு சொல்லுவா. பாரதியைக் கல்யாணம் பண்ணிக்கோ. வாழ்க்கை சுவாரஸ்யமாக இருக்கும்.''

மூர்த்தியின் தாயார் இதுவரை ஆயிரம் தடவை இதே விஷயத்தைத் திருப்பித் திருப்பிச் சொல்லியாகி விட்டது.

மூர்த்தி பிடிவாதக்காரன். அவளை விட்டுப் பிடிக்க வேண்டும் என்று அவன் தாயாருக்குத் தெரியவில்லையே!

கருணாவை மணக்க வேண்டும் என்று அவன் தீவிரமாக எண்ணியதற்குக் காரணமே, அம்மா தான் தேர்ந்தெடுத்த பாரதியைப் பற்றிப் பெருமையாகக் கூறியதும், கருணாவைப் பற்றி மட்டமாகப் பேசியதும்தான் என்று அவன் உணரவேயில்லை.

அம்மா சொன்னதில் ஒரு தப்பும் இல்லை தான். பாரதி எல்லா விதத்திலும் மேம்பட்டவள்தான்.

ஆனால் கருணா?

மூர்த்திக்குச் கருணாவை நினைக்க நினைக்க உடல் தகித்தது. அவளைக் கல்யாணம் செய்து கொள்ள முடியாமல் போனதுகூட அவனுக்குப் பெரிய குறையாகத் தோன்றவில்லை. ஆனால் ஒன்றும் தெரியாத கருணாவைத் தான் தேர்ந்தெடுத்ததை அம்மா வாய்க்கு வாய் சொல்லிக் குத்திக் காட்டியதே அவன் மனத்தைப் பெரிதும் நோக வைத்தது. கருணாவிடம் தனக்கு அதிக ஈடுபாடு இருப்பதாக அவன் மனம் பிடிவாதமாகத் தீர்மானம் செய்து கொண்டு விட்டதும் அதனால்தானோ என்னவோ !

அம்மா இனமும் ஆயிரம் தடவை பாரதியின் புகழ் பாடிப் பாடி, கடைசியில் தான் இருதய நோய்க்காரி என்பதையும், தன் ஆசை, அபிலாஷையைப் பூர்த்தி செய்ய முடியாத பிள்ளையாகவா அவன் இருக்கிறான் என்பதையும் வாய் விட்டுக் கூறிக் கூறிக் கண்ணையும் மூக்கையும் கசக்கிக் கசக்கி மூர்த்தியின் மனத்தைக் குழப்பி விட்டாள்.

அவன் தான் தேர்ந்தெடுத்த பாரதியை மணந்து கொள்ளாமல் இருந்து விடுவானோ என்ற கவலை அவளைத் திரும்பவும் நோய்ப் படுக்கையில் தள்ளியபோது, மூர்த்திக்கு அந்தக் கல்யாணத்துக்குச் சம்மதிப்பதைத் தவிர வேறு வழி இருப்பதாகத் தெரியவில்லை.

மூர்த்திக்குக் கல்யாணம் நிச்சயமாகி விட்டதை அறிந்து கருணாதான் எவ்வளவு ஆத்திரப்பட்டாள்?

'உரலுக்கு ஒரு பக்க இடி, மத்தளத்துக்கு இருபக்கமும் இடி' என்பதைப்போல் மூர்த்தி ஒரு பக்கம் அம்மாவின் ஏச்சுக்களைத் தாங்கி, மனம் நொந்து, ஆறுதல் தேடி, கருணாவிடம் சென்றபோது, அவளுடைய ஏச்சுக்களையும் கேட்க நேர்ந்ததுதான் கொடுமை!

கல்யாணம் விமரிசையாக நடந்தேறியது. அதற்குச் கருணாவும் வந்திருந்ததுதான் ஆச்சரியம்! வந்ததுடன் நில்லாமல், பெரிய பரிசு மல்லவா கொடுத்துச் சென்றாள்!

கல்யாணத்தில் அவள் பாரதியுடன் சிரித்துக் குலவிப் பேசியதை யெல்லாம் மூர்த்தி வியப்புடன் பார்த்துக் கொண்டிருந்தான்.

விடை பெற்றுச் செல்லும்போது மூர்த்தியின் அருகில் வந்து அவனுக்கு மட்டும் கேட்கும்படி, ''எல்லாம் தெரிந்த மனைவியைப் பெற்றவரே! உமக்கு என் வாழ்த்துக்கள்'' என்று பல்லைக் கடித்த வண்ணம் கூறித் தன் உள்ளக் குமுறலை அனலாகக் கக்கிவிட்டுப் போய்விட்டாள் கருணா.

கல்யாண அமளி துமளி யெல்லாம் தீர்ந்து வீடு நிசப்தமாக இருந்தது. மூர்த்தி தன் அறையில் திருமண ஆல்பத்தைப் பார்வையிட்டவண்ணம் உட்கார்ந்திருந்தான்.

பாரதி நல்ல அழகிதான்! அம்மா சற்றுக் குறைத்தே சொல்லி விட்டாள். ஏன், கருணாவை விட மிக மிக அழகிதான்! கருணாவுக்குச் சிறிது சப்பை மூக்கு!

'சேச்சே! கருணாவையா இப்படி நினைக்கிறது என் மனம்? அதற்குக் காரணம்.... இந்த பாரதி!'

போட்டோவில் முத்துப் பற்கள் தெரியத் தன் சிநேகிதிகளுடன் உரையாடியபடி நிற்கும் மணப் பெண் பாரதியைப் பார்த்து மூர்த்தி பற்களைக் கடித்தான்.

மற்றொரு போட்டோ.

இதோ பாரதியினருகில் கருணா நின்று பேசிக் கொண்டிருக்கிறாள். பாரதியை விட ஒரு சாண் உயரம் குறைவுதான். கருணா கைகளால் வாயை மூடிக் கொண்டு சிரிக்கிறாள். ஓ! கருணாவுக்கு முன் வரிசைப் பற்கள் சிறிது கோணல்தான். அதை மறைக்க அவள் எப்பொழுதும் இப்படித் தான் சிரிப்பாள்;

பாரதிக்கு முத்துப் பல் வரிசை!

''எதில் உசத்தி என்று கருணைவைத் தேர்ந்தெடுத்தாய்?'' அம்மாவின் குரல் மூர்த்தியின் மண்டையில் எதிரொலித்தது.

''நான் தேர்ந்தெடுத்தவள் மட்டமா?''

''ஆம். மட்டம் தான். பாரதி உசத்தி ...... உசத்தி தான்.'' மனக் குரலின் ஓசை அவன் இருதயத்தைப் பிசைந்தது.

பட்டென்று கோபத்துடன் ஆல்பத்தை மூடினான்.

அதே சமயம் கீழிருந்து அம்மாவின் குரல், ''மூர்த்தி... மூர்த்தி! கீழே வாயேன்! பாரதி டான்ஸ் ஆடிக் காட்டப் போகிறாள்!''

துள்ளி எழுந்த மூர்த்தி மறு கணம் 'தொப்'பென்று நாற்காலியில் அமர்ந்தான்.

அம்மா இரண்டு மூன்று முறை குரல் கொடுத்துவிட்டு, ''நீ ஆடம்மா. அவன் வருவான்.'' என்று கூறுவதும், அதைத் தொடர்ந்து, 'ஜல் ஜல்' என்று சதங்கை சப்திப்பதும் மூர்த்திக்குக் கேட்டது.

சிறிது நேரத்தில் இருந்த இடத்திலேயே அசையாமல் அமர்ந்திருந்தவன் ஆவலை அடக்க முடியாமல் மெதுவாக எழுந்து, வராந்தாத் தூண்மறைவில் நின்று, கீழே எட்டிப் பார்த்தான்.

ஆகா! கொள்ளைஅழகு! என்ன லாகவமாக ஆடுகிறாள்! டான்ஸ் பள்ளியில் பயின்று பட்டம் பெற்றவள் அல்லவா? மூர்த்தி வியப்புடன் பார்த்துக் கொண்டேநின்றான்.

பாரதி சுழன்றுஆடிக் கொண்டே மாடியில் பார்வையைச் செலுத்தினாள்.

அவள் தன்னைப் பார்த்துவிடக் கூடாதென்று மூர்த்தி சட்டென்று நகர்ந்து மறைந்தான். ஜன்னல் வழியாக கருணாவின் வீடு தென்படுகிறது.

'கருணாவுக்கு டான்ஸ் ஆடத் தெரியுமா?'

'தெரியாது, தெரியாது!' — மூர்த்தியின் மனத்துள் ஆவேசப் புயல் வீசுகிறது. வேகமாக நடந்து வராந்தாவை அடைந்தான்.

''சீ... இதென்ன, கூத்தாடிகள் இருக்கும் வீடா? டான்ஸாம், டான்ஸ்...'' மூர்த்தி தொண்டை கிழியக் கத்தினான்.

சலங்கைச் சப்தம் சட்டென்று நின்றது.

அம்மா வியப்புடனும், பாரதி கலவரத்துடனும் நிமிர்ந்து மாடி வராந்தாவைப் பார்க்கிறார்கள்.

மூர்த்திக்கு உடலெல்லாம் கூசுகிறது. குப்பென்று வியர்வை வெள்ளமாகப் பெருக்கெடுக்கிறது. வார்த்தைகள் தொண்டைக் குழியில் வந்து சிக்கிக் கொண்டு வெளி வராமல் திண்டாடுகிறான்!

பாரதி மௌனமாக மறைகிறாள்.

நான்கு நாட்கள் அம்மா அவனுடன் முகம் கொடுத்துப் பேசவேயில்லை.

ஐந்தாம் நாள் மாலை வீதியில் வரும்போதே வீணையின் நாதம் அவனை வரவேற்கிறது.

தயக்கத்துடன் நின்று உள்ளே எட்டிப் பார்க்கிறான். அம்மாவின் கட்டிலினருகில் கலைவாணி போல கையில் வீணையுடன் அமர்ந்திருக்கிறாள் பாரதி. சுநாதம் வீடெங்கும் நிறைந்து எதிரொலிக்கிறது.

சட்டென்று திரும்பிப் பார்க்கிறான்.

எதிர் வீட்டுத் தோட்டத்தில் கருணா நின்று இந்த வீட்டையே எட்டிப்பார்த்துக் கொண்டிருக்கிறாள்.

'அவளுக்குக் கேட்டிருக்குமோ வீணையின் நாதம்?'

'கேட்கும்...... கேட்கும். ஆனால் அவளுக்குத்தான் வீணை வாசிக்கத் தெரியாதே!'

இந்த எண்ணம் தோன்றியதும் மூர்த்தியின் உடம்பு ஏன் இப்படி ஆத்திரத்தில் நடுங்குகிறது? அவனையும் அறியாமல் ஏற்பட்டது அது!

அன்று இரவு வீணைக் கம்பிகளையெல்லாம் சின்னா பின்னமாக அறுத்துவிடுகிறான்.

அடுத்த நாள் வீணை வாசிக்கும்படி பாரதியிடம் அம்மா கேட்டுக் கொண்டிருந்தபோது மூர்த்தி அவசரமாக வெளியே நழுவிவிடுகிறான்.

பாரதி என்ன பதில் சொன்னாளோ, அவனுக்குத் தெரியாது. ஆனால் அன்றிலிருந்து வீணையின் நாதம் மட்டும் அந்த வீட்டில் கேட்கவே யில்லை.

அம்மா ஏனைவோ இப்பொதெல்லாம் அதிகமாக எழுந்து நடமாடுவதே இல்லை.

மூர்த்தியும் முன்போல் அவளை நெருங்கி அமர்ந்து பேசாததற்கு அவனுடைய குற்ற முள்ள நெஞ்சுதான் காரணமோ?

வீட்டின் மூலையில் தூசி படிந்து கிடந்த தையல் மிஷின் சில நாட்களாகப் பளிச்சென்று மின்னிக்கொண்டு, 'கட கட'வெனச் சந்தோஷ ஆரவாரம் செய்து கொண்டிருக்கிறது.

வீடெங்கும் வண்ண வண்ணத் திரைச் சீலைகள் தொங்குகின்றன.

யதேச்சையாகக் கடை வீதியில் கருணாவைச் சந்தித்தபோது, அவள் ''என்ன மிஸ்டர் மூர்த்தி! ஜன்னலைக்கூடத் திரையிட்டு மறைக்கிறீர்கள் போலிருக்கிறது!'' என்று குதர்க்கமான கேலிக் குரலில் விசாரிக்கிறாள்.

முன்பு ஒரு நாள் கருணாவின் அப்பா தன் சட்டைக்குப் பித்தான் வைத்துக் கொடுக்கும்படி அவளிடம் கேட்டபோது, ''போங்கப்பா! எனக்கு ஊசியில் நூல் கோக்கக் கூடத் தெரியாது'' என்று கருணா செல்லமாகச் சிணுங்கியது மூர்த்திக்கு ஞாபகம் வருகிறது.


அப்படிப்பட்ட கருணாவைத் தான் மணந்து கொள்ள விரும்பியதும், அவன் நினைவில் உறைக்க, உடம்பெல்லாம் ஊசி குத்தப்பட்டது போல் வேதனை எழுகிறது;



''நேற்று லேடீஸ் கிளப்பில் நடந்த பேச்சுப் போட்டியில் நம்ம லீலாவுக்குத்தான் முதல் பரிசாம்!''

''யாருடன் பேசினதில்?''

என்னை மறவாதீர்கள்



நான் தான் உங்கள் ஆயுள் இன்சூரன்சுப் பாலிசி. அன்பு பிணைவின் அடையாளம். உங்கள் மற்றும் உங்கள் குடும்பத்தின் பாதுகாப்புச் சின்னம். எனவே, என்னை அடிக்கடி கவனித்துக் கொள்ளுங்கள்.

- சரியான வயது குறிப்பிட்டிருத்தல்
- முகவரி மாற்றம்
- பயனடைபவரின் பெயர்

முதலியவற்றைச் சரிபார்த்துக் கொள்ளுங்கள். நான் உங்களைக் கைவிட விரும்பவில்லை. எனவே, மேற்கூறியவற்றை இன்றே சரி பார்த்துக் கொள்ளுங்கள். குறித்த காலத்திற்குள், உரிய அலுவலகத்தில் உங்கள் இன்சூரன்சுப் பிரிமியத்தை மறக்காமல் செலுத்துங்கள்.

ஆயுள் இன்சூரன்சு

போல ஆதரவு தருவது
எதுவுமே இல்லை

ஆத்திரத்தில் தீயில் எண்ணெய் வார்த்த கதையாக இரவு படுக்கையறையில் தலையணைக்குப் புது உறை காணப்படுகிறது. அதில் ''ஸ்வீட் ட்ரீம்ஸ்'' என்று அழகாகப் பூவேலை செய்யப்பட்டிருக்கிறது.

எல்லாம் பாரதியின் கைவண்ணம். கருணாவுக்குக் கைவராத கலை! அம்மாதான் தைரியமாகக் கொண்டு வந்து அவன் தலையணைக்குப் போட்டிருக்க வேண்டும்.

மூர்த்தி பற்களைக் கடிக்கிறான்.

அடுத்த நாள் தையல் மிஷின் விற்கப்படுகிறது.

அம்மாவுக்கு எல்லாம் புரியாதா? அவள் மௌனமாகத் தன் படுக்கையில் அமர்ந்திருக்கிறாள்.

தான் பெருமைப்பட்ட விஷயங்களெல்லாம் தன் பிள்ளையின் கண்களுக்குச் சிறுமையாகத் தோன்றுவதை அவள் உள்ளம் தாங்கவில்லையோ?

அவளது மன விரக்தியே அவள் உடலை உருக்கி வருகிறது என்பதை அறிந்தும், அறியாதவன் போல் இருக்கிறான் மூர்த்தி.

அம்மாவின் முடிவு ஒரு நாள் கண் மூடிக் கண் திறப்பதற்குள் நிகழ்ந்து விடுகிறது.

மூர்த்தி பெரிய குற்ற உணர்ச்சியுடன் செயலிழந்து நிற்கிறான்.

பாரதி ஒருத்தியாக நின்று எல்லாவற்றையும் சமாளிக்கிறாள். அவளைப் பாராட்டாதவர்கள் இல்லை.

கருணா இப்பொழுதெல்லாம் அடிக்கடி அந்த வீட்டுக்கு வருகிறாள்.

அம்மாவின் நினைவு மட்டுமே இப்பொழுது அந்த வீட்டில் எஞ்சி நிற்கிறது.

மூர்த்தியின் மனம் இன்னும் மாறவில்லை. அம்மாவின் மறைவுக்குப் பிறகு, பாரதியை நேரிடையாகவே குறைகூறத் தொடங்குகிறான்.

அம்மா இருந்தவரை அவளருகிலேயே இருந்த பாரதி இப்பொழுது வீட்டு நிர்வாகத்தில் மனத்தைச் செலுத்துகிறாள்.



சமையலறையில் புகுந்து விதம் விதமாகச் சமைக்கிறாள். அவனுக்குப் பிடித்தவை எல்லாம் அவள் கைகளால் மணக்க மணக்க தயாரிக்கப்படுகின்றன.

'தானே செய்தது' என்று ஆசையாகக் கூறி அவள் உணவு பரிமாறுவதைக் கூட அவனால் தாங்க முடியவில்லை.

'கருணாவும் ஒரு பெண்ணா! சமைக்கக் கூடத் தெரியாது அவளுக்கு' என்று அம்மா சொன்ன வார்த்தைகள் மனத்தைப் போட்டுப் பிசைகின்றன.

ஒரு வாரத்துக்கு மேல் தன் மனப் போராட்டத்தைத் தாங்கிக் கொள்ளும் சக்தி அவனுக்கு இருக்க வில்லை.

''நான் சாப்பிடும் சாப்பாட்டில் மண்ணைப் போட வேண்டாம். சமையல்காரரே சமைக்கட்டும்'' என்று ஒரு நாள் கத்தினான்.

மறுநாளிலிருந்து பாரதி சமையலறைப் பக்கமே போவதில்லை.

நாலைந்து நாட்களுக்குப் பிறகு பக்கத்து வீட்டுச் சிறுமிகளுக்கு பாரதி டென்னிஸ் சொல்லிக் கொடுத்துக் கொண்டிருப்பதை, மாடியிலிருந்து கவனிக்க நேர்கிறது.

அவ்வளவு நாட்கள் கவனிப்பாரற்றுக் கிடந்த 'டென்னிஸ் கோர்ட்' சுத்தம் செய்யப்பட்டு நேர்த்தியாகக் காட்சியளிக்கிறது.

''ஓ... பெரிய டென்னிஸ் சாம்பியனா?''

பீரோவில் வரிசையாக அடுக்கி யிருக்கும் பாரதியின் வெள்ளிக் கோப்பைகளை, புதிதாகப் பார்ப்பவன் போல் அன்றுதான் உற்றுப் பார்க்கிறான்.

இந்த நேரம் பார்த்துத் தானா கருணா வரவேண்டும்?

''வா... கருணா! நீயும் ஆடேன்...!'' என்று கூறி டென்னிஸ் மட்டையை அவளிடம் நீட்டுகிறாள் பாரதி.

கருணா மட்டையை வாங்கித் தொட்டுத் தொட்டுப் பார்க்கிறாள்.

''எப்படிப் பிடிக்க வேண்டும் பாரதி? எனக்கு இதைப் பிடிக்கக்கூடத் தெரியாதே!'' என்று கொஞ்சலாக மொழிகிறாள்.

மாடியறை ஜன்னலிலிருந்து பார்த்துக் கொண்டிருந்த மூர்த்தியின் இரத்தம் கொதிக்கிறது. ஏனோ அவமானத்தினால் முகம் சிவக்கிறது.

சுவரில் மாட்டப்பட்டிருந்த அம்மாவின் படம் அவனைப் பார்த்துச் சிரிக்கிறது.

''கருணாவுக்கு என்ன தெரியும்? என்ன தெரியும்?'' என்ற கேள்வி அவன் குரலில் அறையெங்கும் எதிரொலிக்கிறது.

அடுத்த நாள் டென்னிஸ் கோர்ட் கொத்தப்பட்டு, அங்கு பூச்செடிகள் நடுவதற்குப் பாத்திகள் கட்டப்படுவதைப் பார்த்துப் பாரதி பதறுகிறாள்.

விரைவாக மூர்த்தியிடம் ஓடிவருகிறாள்.

''ஏங்க! உங்களுக்குப் பிடிக்கலேன்னு ஒவ்வொண்ணா எல்லாத்தையும் நிறுத்திட்டேன். விளையாட்டு என் உயிர். என் கவலைகளை மறக்க நான் அதில்கூடவா ஈடுபடக் கூடாது?''

படபடப்பாக அவள் பேசியே பார்த்திராத மூர்த்தி அவள் சிவந்த முகத்தையே உற்றுப் பார்க்கிறான்.

இதுவரை அவன் தீண்டாத மேனி தளிர் போல் துக்கத்தில் நடுங்குகிறது.

நிமிர்ந்து பார்க்கிறான்.

எதிரே அம்மா போட்டோவில் சீறுகிறாள்.

''ஏண்டா பாவி! அவளை ஏண்டா சித்திரவதை செய்கிறாய்? அவளுக்கு எல்லாம் தெரியும்டா. டான்ஸ் ஆடத் தெரியும், பாடத் தெரியும். வீணை வாசிப்பாள். தையல் கலை, சமையல் கலை எல்லாம் தெரியுமடா. சகல கலாவல்லியடா அவள். கெட்டிக்காரி. நான் தேர்ந்தெடுத்த பெண் ரத்தினமடா. கருணா, நீ தேர்ந்தெடுத்தவள்... அவளுக்கு ஒன்றுமே தெரியாதடா. ஒன்றுமே தெரியாதடா!''

அம்மாதான் படத்திலிருந்து ஆவேசமாகக் கூவுகிறாள்.

மூர்த்தி வெறி பிடித்தவன் போல, பாரதியை உற்றுப் பார்க்கிறான்.

''ஓ! உனக்கு எல்லாம் தெரியுமோ? ...... தெரியும் என்ற மமதையில்தானே இப்படி ஆடுகிறாய்?'' அடித்தொண்டையில் குரல் கரகரத்து வெளிவருகிறது.

பாரதி தயங்கித் தயங்கிப் பதில் சொல்லுகிறாள்.

''உங்களை எப்படிச் சந்தோஷப்படுத்துவதென்று எனக்குத் தெரியவில்லை. சொல்லுங்கள்! நான் என்ன செய்தால், எப்படி இருந்தால் நீங்கள் சந்தோஷமாக, நிம்மதியாக இருப்பீர்கள்?''

''சந்தோஷமா? நிம்மதியா? எனக்கா?''— மூர்த்தி சீறினான்.

ஆவேசம் அவன் அறிவை மறைத்தது: அடக்கப் பிடிவாத எண்ணங்கள் ஆவேசத் தீயில் நெய் வார்த்தன.

''எல்லாம் தெரியும் தெரியும் என்றாயே, உனக்குத் தூங்கத் தெரியுமா? நீ எழுந்திராமல் தூங்கிப் போனால் அதுவே எனக்கு நிம்மதி. அதுவே எனக்குச் சந்தோஷம். அதை முதலில் செய்!''

கோபத்தில் உடல் நடுங்க அலட்சியமாகத் தாயின் படத்தைப் பழி வாங்கிய உணர்ச்சியுடன் நிமிர்ந்து நோக்கி விட்டு, அந்த அறையை விட்டு வெளியேறுகிறான்.

இரவு வெகு நேரம் வெளியில் சுற்றிய பிறகு அவன் ஆத்திரம் அடங்குகிறது. கால்கள் மெதுவாக வீட்டை நோக்கித் திரும்புகின்றன.



''மந்திரியின் ஆசைப்படி மலிவு விலையில் ஸ்கூட்டரை விற்கிறீர்களாமே!''

''ஆமாம்! ரூ. 4000த்துக்கு விற்றதை இப்ப 3999-99க்கு விற்கிறோம்!''


வலியின்
கொடும் பிடியிலிருந்து
அவனுக்கு விடுதலையளியுங்கள்

தசை வலி
சுளுக்கு
மூட்டுக்களில் பிடிப்பு
வீக்கம் இவற்றிற்கு

மெதில் ஸாலிஸிலேட் சேர்ந்த

அயொடெக்ஸ்*

சாலச் சிறந்தது



அயொடெக்ஸ் சருமத்துக்குள் ஊடுருவிச் சென்று தசைகள் மீதும் நரம்புகள் மீதும் வேலை செய்து வலியை விரைவில் வெளியேற்றுகிறது.

உங்கள் குழந்தை சுளுக்கினுல் அவதிப்படும்போது, விரைவில் வலியைப் போக்க அயொடெக்ஸை அழுத்தித் தடவுங்கள். அயொடெக்ஸில் சேர்ந்துள்ள பிரத்தியேகக் கலவை வலியை துரிதமாக, நிச்சயமாகப் போக்குகிறது.

வெட்டுக் காயங்களுக்கும், புண்களுக்கும் **அயொடெக்ஸ் ப்ளெயின்** உபயோகியுங்கள். அயொடெக்ஸ் கறை ஏற்படுத்துவதில்லை.

வலிக்கு நீங்கள்
நினைவில் வைக்க வேண்டிய பெயர்—
அயொடெக்ஸ்



SKF-4921

SKF ஸ்மித் க்லைன் அண்ட் ஃப்ரெஞ்ச் தயாரிப்பு

* ரெஜிஸ்டர்ட் ட்ரேட்மார்க்

வாங்கியதன் தரத்திற்கு எவ்வாறு உறுதிபெறுவீர்கள்?



இதுவே அடையாளம்!

நிறத்தையும் கோலத்தையும் மட்டும் கொண்டு ஒரு துணியை மதிப்பிட்டுவிட முடியாது. பன்முறையான சலவைகளுக்கு ஈடு கொடுக்குமா? சில மாதங்கள் ஆன பின்பும் புதுமைக்களை மாறாமல் இருக்குமா? இக் கேள்விகளுக்கெல்லாம் 'ஆம்' என்ற விடை உண்டு, துணிகள் மீது லால்பாய் டிரேடுமார்க் இருந்தால். லால்பாய் க்ரூப்பிலுள்ள நாங்கள் தரமான துணிகளைப் பல்லாண்டுகளாக உற்பத்தி செய்துவருகிறோம். நவீனமான உத்திகளை அநுபவத்தோடு இணைத்து இயங்கி வரும் எங்கள் ஏழு ஆலைகள், இன்றைய நாகரிகத்தின் எடுத்துக்காட்டான நேர்த்திமிக்க துணிகளை உங்களிடம் கொண்டு வருகின்றன. வாங்கும் பொருளின் தரத்திற்கு உறுதி பெறுங்கள். எப்போது துணி வாங்கினாலும் அதன் மீது லால்பாய் டிரேடுமார்க் இருக்கிறதா பாருங்கள்.

லால்பாய் க்ரூப்

- தி அரவிந்த் மில்ஸ் லிமிடெட்.
- தி ராய்ப்பூர் மானுபாக்சரிங் கம்பெனி லிமிடெட்.
- தி அசோகா மில்ஸ் லிமிடெட்.
- தி ஸர்ஸ்பூர் மில்ஸ் லிமிடெட்.
- தி அருணா மில்ஸ் லிமிடெட்.
- தி அகமதாபாத் நியூ காட்டன் மில்ஸ் கம்பெனி லிமிடெட்.
- தி நூதன் மில்ஸ் லிமிடெட்.

வீடு நிசப்தமாக இருக்கிறது.

பூனைபோல நடந்து சப்தம் செய்யாமல் தன் அறையை அணுகி, விளக்கைப் போட்டவன் திடுக்கிடுகிறான்.

இதுவரை, அவன் தனிமையில் காலடி வைத்திராத பாரதி, அவன் கட்டிலில் படுத்து உறங்கிக் கொண்டிருக்கிறாள்.

தூங்கும்போதும் அவள் படுத்திருந்த நேர்த்தி அவன் மனத்தை உறுத்தியது.

'அம்மா சொன்னதில் என்ன தப்பு?—' அவன் மனம் இடித்துக் காட்டுகிறது.

பனியில் குளித்த புது மலர் போல் அடக்கமாகப் படுத்திருக்கிறாள். அழகு.... அழகு... கொள்ளை அழகு!

பக்கத்தில் மேஜை மேல் வைக்கப்பட்டிருந்த காகிதம் காற்றில் படபடத்து நிசப்தத்தைக் கலைக்கிறது.

சட்டென்று குனிந்து பார்க்கிறான்.

அதில் கொட்டை எழுத்துக்களில் ''எனக்கு எல்லாம் தெரியும். ஏன், தூங்கவும் தெரியும்'' என்று எழுதி அடியில் 'பாரதி' என்று அழகாகக் கையெழுத்திடப்பட்டிருக்கிறது.

மூர்த்தியின் உடம்பு அவனையறியாமல் ஒரு குலுங்கு குலுங்குகிறது.

காகிதம் பறந்து போகாமல் அதன் மேல் வைக்கப்பட்டிருந்த பாட்டிலை எடுத்துப் பார்க்கிறான்.

தூக்க மாத்திரைகள்!

அவன் இருதயமே ஸ்தம்பித்து விடுகிறது. அதே சமயம் அவன் மனத்தை மறைத்திருந்த சுருறு என்ற பொய்த் திரை பட்டென்று கிழிகிறது.

மூர்த்தியின் உடல் செயலிட்டு விட்டது. பிரயாசையுடன் குனிந்து பாரதியைப் பார்க்கிறான். மூச்சு மெல்லிய இழையாக வந்து கொண்டிருக்கிறது.

அவசரம் அவசரமாகப் பாரதியைத் தூக்குகிறான். அவன் கைகளில் அவளது பூவுடல் துவளுகிறது.

''பாரதி! பாரதி! உனக்கு எல்லாம் தெரியும். தெரிய வேண்டும். ஆனால்...ஆனால் தூங்குவதற்கு மட்டும் தெரியவே வேண்டாம். தெரியக் கூடாது. தெரிய விட மாட்டேன்.''

ஆவேசம் வந்தவன் போலக் கத்திக் கொண்டே விரைவாகக் கீழே சென்று காரில் அவளைக் கிடத்துகிறான்.

கார் டாக்டர் வீட்டை நோக்கிப் பறக்கிறது.

குழந்தைச் செல்வம்!

தமிழமுகன்

நவம்பர் 14ந் தேதி
பாலர் தினம்

ஆழக் கடலெனும் பேழையில் முத்தாய்
அடங்கிக் கிடந்திடினும் - ஒரு
நாளே புவியர சாளும் மகுடமேல்
நாயகம் ஆகிடுவோம்!

மண்ணுக்குள் பொன்னும் மணியுமாய் வீணே
மறைந்து கிடந்திடினும் - இரு
கண்ணும் பறிக்கும் நகை எனவே,ஒரு
காலத்தில் மின்னிடுவோம்!

மூலைவா னத்திலோர் முத்துச் சுடராய்
முடங்கிக் கிடந்திடினும் - புலர்
காலைவா னம்சுடர் காணுமுன் பே,வழி
காட்ட ஒளிர்ந் திடுவோம்!

வாசனை விம்மிப்பின் வாடி யுதிர்சிறு
வாழ்வே கிடந்திடினும் - மறை
ஈசன் உவந்திடும் பூசனைக் கேர்நான்
எழில்மலர் ஆகிடுவோம்!

ஒய்ந்த சிறுபனை ஓலையாய்க் காட்டில்
ஒதுங்கிக் கிடந்திடினும் - ஓர்
ஆய்ந்த கவிஞனின் அற்புதப் பாடலாய்
ஆண்டோரு நாள் இருப்போம்!

சின்னஞ் சிறுவர் சிறுமிய ராய் இன்று
சீர்பெறும் செல்வங்களாம் - நாமே
பின்னொரு போதில் பெரும்பெரும் சாதனை
பெற்றிடும் தெய்வங்களாம்!





குறள் காட்டும் காதலர்

மற்றெந்த மொழிக்கும் கிட்டாத சிறப்பு திருக்குறள் ஒன்றின் மூலமே தமிழுக்குக் கிட்டியுள்ளது. தமிழ் மறையெனப் போற்றப்படும் திருக்குறள் எந்தக் காலத்துக்கும் எந்த நாட்டினருக்கும் பொருந்தக் கூடிய விஷயங்களை இலக்கணமாகத் தந்து இலக்கியமாகவும் திகழ்கிறது. திருக்குறள் தரும் 'காமத்துப் பால்' உடலுக்கு இன்பம் பயப்பதைக் காட்டிலும் உள்ளத்துக்கே அதிக நிறைவு தருகிறது. இதனை உணர்த்தும் வகையில் டாக்டர் மு. வரதராசனுர் அவர்கள் காதல் சம்பந்தப்பட்ட சில குறள்பாக்களைத் தேர்ந்தெடுத்து அவற்றுக்கு விளக்கமாகக் கதைபோலச் சில கட்டுரைகள் சுவைபட எழுதியுள்ளார்கள். கருத்துச் செறிந்த அவரது எளிய தமிழ் நடை, சில குறள்பாக்கள் பல இடங்களில் இரட்டித்து வந்தாலும் மெருகைக் கூட்டவே செய்கிறது. ஆயினும் அவற்றை விலக்கி வேறு சில குறள்களின் நயங்களை எடுத்துரைக்கக் கூடாதா இவ்வறிஞர் என்று யாராவது எண்ணினுல் அதனைத் தவறென்று கூறத் தோன்றுது.

பிரசுரம்: தமிழ் எழுத்தாளர் கூட்டுறவுச் சங்கம் லிமிடெட், சென்னை—8. விலை ரூ.2.50

சந்தன மரம்

எல்லோரும் விரும்பும் வண்ணம் சம்பவங்களை அமைத்துப் பாத்திரங்களையும் அதே மாதிரி அமைத்துக்கொண்டு கதையைப் புகல்வதுதான் குடும்பக் கதையின் இலக்கணமாக இருந்து வருகிறது. முதலில் புள்ளிகளை எண்ணிவைத்து, அப்புள்ளிகளுக்கு ஏற்பக் கோடுகளை இழுத்துக் கோலத்தை முடிப்பது போன்றதுதான் இது. பாசம், பரிவு, அன்பு, கருணை, காதல் - ஆகிய மனித இனத்தின் நல்லியல்புகளையும், குரோதம், வெறுப்பு, மோகம், பொறாமை ஆகிய தூர் இயல்புகளையும் வரையறைப் படுத்தி, அவைகளுக்கேற்ற பாத்திரங்களைப் படைத்துக் கதையைச் சுபமாகவோ அசுபமாகவோ முடிப்பது தான் குடும்பக் கதைகளுக்கு ஏற்பட்டுவிட்ட நியதி.

ஆசிரியை கிருஷ்ணுவின் ''சந்தன மரம்'' அந்த முறையைப் பின்பற்றி எழுதப்பட்ட நவீனம்தான் என்றாலும் கதைப் போக்கில் அதிர்ச்சி தராத பல புதுமைகளை இயல்பான முறையில் புகுத்திப் பிணைப்பட்டிருக்கிறது. கதைகளுக்காகவே செயற்கையாகச் சேர்க்கப்பட்ட ஒரு சம்பவத்தைக் கூடக் காண முடியாமலிருப்பது இந்நவீனத்துக்குத் தனிப் பெருமை தருவதாகும்.

ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்த நியாதுவும், பணக்காரக் குடும்பத்தைச் சேர்ந்த அனுராதாவும் பழகிற முறையே சுவையாக இருக்கிறது. ஐசுவரியத்தைக் கண்டு நடுங்கித் தவித்துப் போகும் வறுமையை எத்தனை தத்ரூபமாகத் தியாகுவின் குடும்ப அங்கத்தினர்களைக் கொண்டே விளக்குகிறார் ஆசிரியை!

ஒரு மரத்தின் கிளைகள் ஒரே மாதிரி இருப்பதில்லை, ஒவ்வொன்றும் ஒவ்வொரு விதமாக வளைந்து, பரந்து, நீண்டு, தழைத்து வளர்ந்திருக்கின்றன. அதே மாதிரிதான் இந்தச் சந்தன மரத்தின் பாத்திரங்களும் படைக்கப்பட்டிருக்கின்றனர். எல்லோரும் கதையில் பூரணமாகப் பங்கு பெறுகின்றனர். அவர்களுள் கதாநாயகி அனுராதா மன உறுதியும், மனிதப் பண்பும் கொண்டவள். ''சந்தன மர''த்தின் மணம் கமழும் பாத்திரமே அவள்தான்.

சோகம் நிறைந்த நவீனமாயினும் அந்தச் சோகத்துக்கு இடையே இழையோடிக் கிடக்கும் பல சுவையான நிகழ்ச்சிகள் மகிழ்வூட்டுகின்றன.


ஆசிரியை; ''கிருஷ்ணு'': மங்கள நூலகம், நுங்கம்பாக்கம், சென்னை-34; விலை: ரூ. 5.25.

திருவருண்மொழி

பகவான் ஸ்ரீ ரமணரின் கருணை வாக்குக்கு யாரே விமரிசனம் செய்ய முடியும்? அண்ணுமலையிலே அண்ணும் மலையாக வாழ்ந்த அண்ணல் 1935லிருந்து 1939 வரை பல அடியார்களுக்கு அருளிய நன்மொழிகளின் தொகுப்பில் முதல் பாகம் இந்நூல். திரு அருணையில் உருக்கொண்டு வாழ்ந்த பெருங் கருணை வள்ளல், அன்பர்களின் அத்யாத்மிகக் குறைபாடுகளைக் கண்ணுற்று, முறையீடுகளைச் செவிமடுத்து, ஆன்ம மருத்துவமாகத் தந்த பரம ஔஷதம் இந்த நூல். ரமண மகரிஷி காட்டிய பாதை மிகவும் எளிதானது. தான் யார் என்று பார்த்துக் கொள்ளுமாறு சாதனைகளைத் திருப்பி விடுவதே அவர் கைக்கொண்ட மார்க்கம். 'பாதை' 'மார்க்கம்' என்றெல்லாம் நாம் கூறினுலும் உண்மையில் மகரிஷி இந்த வார்த்தைகளைக் கூட ஒப்ப மாட்டார். ஒவ்வொருவருக்கும் உள்ளேயே உள்ள உண்மைப் பொருளை அடைவதற்குப் பாதை எதற்கு, மார்க்கம் எதற்கு? 'ரமணுச்ரமத்திலிருந்து வெளியே ஏதோ ஓர் இடத்துக்குச் செல்ல வேண்டுமாயின் அதற்குப் பாதை வேண்டும். ரமணுச்ரமத்திலேயே இருந்து கொண்டு ரமணுச்ரமம் போக வேண்டும் என்றால் அதற்குப் பாதை ஏது? நாமே பிரம்மமாக இருக்க, பிரம்மத்தை நாடப் பாதை தேடுவது இப்படித்தான்' என்று இதையே அவர் ஒரு முறை கூறினர். அப்படிப் பிரம்மமாகப் பொலிந்த அந்த ஞான சூரியனின் வாக்குகளைப் பக்தியுடன் படித்தால், அவ்வாறு படிக்கின்றவரையிலாவது திரு அண்ணுமலை தீபம் போல் நம் உள்ளத்தில் தூய ஒளி பரவுவதை உணருவோம்.

எளிமையே உருவெடுத்த ஐயனின் மொழிகளை இன்னும் எளிய தமிழில் கொடுத்திருக்கலாமோ என்று தோன்றுகிறது. புத்தகத் தலைப்பான 'திருவருண்மொழி' என்பதே 'திரு அருள் மொழி' என்றிருந்தால் சாமானிய மக்கள் பயப்படாமல் அதை வாங்கிப் பயனடைய அதிக வாய்ப்பிருக்குமே!

ஆங்கில மூலம்: முனகால வேங்கடராமையா; தமிழாக்கம்: ரா. விசுவநாதன்; வெளியீடு: ஸ்ரீ ரமணுச்ரமம், திருவண்ணுமலை, விலை: ரூ. 4.00.



காற்று வாங்கப் போனோம், தலைவலி வாங்கி வந்தோம்!

சில மாதங்களுக்கு முன்பு ஒரு ஞாயிற்றுக் கிழமை என் குழந்தைகளும் மனைவியும் கடற்கரைக்குப் போய்வர ஆசைப்பட்டார்கள். எல்லோரும் ஒரு வாடகைக் காரில் கடற்கரைக்குப் போனோம். வழியில் வானொலி நிலையத்துக்கு அருகே நாங்கள் போன வண்டியைப் போக்குவரத்துப் போலீஸ் அதிகாரி ஒருவர் கை காட்டி நிறுத்தினார். எங்களுக்கு முன்னும் பல டாக்ஸிகள் நிறுத்தப்பட்டிருந்தன. வண்டி ஓட்டுநர் பயந்துவிட்டார். நாங்களும்தான். என்ன தவறு நேர்ந்துவிட்டதென்று தெரியவில்லை. முன்னால் நின்றிருந்த வண்டிகளையெல்லாம் ஒவ்வொன்றாக 'விசாரித்து' உரிய நடவடிக்கைகள் எடுத்து அனுப்பிவிட்டு, ஏறத்தாழ அரை மணி கழித்து அதிகாரி எங்கள் வண்டி அருகில் வந்தார், இரண்டு மூன்று காவலர்களுடன். 'பிரேக்' சரியாக இருக்கிறதா, டிரைவர் 'லைசென்ஸ்' வைத்திருக்கிறாரா, 'மீட்டர்' விளக்கு எரிகிறதா? — இது போன்ற விசாரணைகள்! நல்ல வேளையாக எல்லாம் சரியாக இருந்தன. ''இதற்குத்தானா இந்த ஜபர்தஸ்து?'' என்று அதிகாரியிடம் கேட்டேன். ''எல்லாம் உங்கள் நன்மைக்காகத்தான்'' என்று பதிலளித்தார் அவர். 'கடமையே கண்ணான' காவலர்கள் வண்டிகள் நிற்கும் இடத்தில், பிரயாணிகள் ஏறு முன்பு இந்தச் சோதனைகளையெல்லாம் நடத்தி, சட்டத்தையும் எங்கள் நன்மையையும் பாதுகாத்திருக்கலாமல்லவா?

வாரம் முழுவதும் காத்திருந்து 'வாராது வந்த' இன்பப் பொழுது போக்குக்கு இப்படி ஒரு முட்டுக்கட்டை. காலம் வீணாகி, பணம் செலவாகி, தலைவலி வாங்கிக் கொண்டு வீடு திரும்பினோம். காற்று வாங்கிக் களிக்கும் மனநிலை இருக்குமா என்ன? அதுவும் காவலர்களிடம் சிக்கி மீண்ட பின்?

சென்னை,
18-10-68 'செ'

விமலா ரமணி அவர்கள் எழுதிய 'ஓ! இளமைக் கனவே!' என்னும் ஒப்பற்ற நெடுங்கதை உணர்ச்சிகளின் சிலிர்ப்புக்கு ஓர் எடுத்துக்காட்டு! கதையில் ஆங்காங்கே மின்னிச் சிரித்திடும் தத்துவ விமர்சனமும் விளக்கங்களும் அருமையிலும் அருமை. அது ஒரு காவியப் படைப்பு.

திருச்சி-8
18-10-68 'பதியவன்'

''பழைய சுவர்க்கத்திலிருந்து'' என்ற சிறப்புச் சிறுகதையில் உணர்வுகள் இறப்பதில்லை என்பதை ஸ்ரீ வேணுகோபாலன் எவ்வளவு அழகாக விவரித்திருக்கிறார்!

சென்னை-59
22-10-68 கே. பி. குமார்

தீபாவளி மலரையும் தந்து, தீபாவளிச் சிறப்பிதழையும் வெளியிட்ட ஒரே தமிழ்ப் பத்திரிகை 'கல்கி'தான். இருபத்தொன்பது வாரங்களாகப் பழகி வந்த சீலியா, குழலி, வசந்தன் ஆகியோரை இந்த வாரம் பிரிய வேண்டியது குறித்து ரொம்பவும் வருத்தமாக இருக்கிறது. சமீபத்தில் வந்த ஒரு நல்ல குடும்பக் கதை 'இனிக்கும் நினைவுகள்'. ஜெகசிற்பியனின் ஊஞ்சல் கோபுரமும் குமரனின் 007 பாலுவும் ஆரம்பத்திலேயே அற்புதமாக எழுந்து, 'இனிக்கும் நினைவுக'ளைப் பிரிய வேண்டியதால் ஏற்பட்ட வருத்தத்தை நல்ல வேளையாக நீக்குகின்றன.

வஸந்த நகர்,
18-10-68 ராமச்சந்திரன்

'ஏலந்த பழம்' பாட்டு வந்தது கோபால கிருஷ்ணன் படத்தில்தான். இப்போது மீண்டும் அவருடைய படத்திலேயே 'சவாலே முடிஞ்சா சமாளி' என்றொரு பாட்டு வந்திருக்கிறது. இப்பாடல் படமாக்கப்பட்டிருக்கும் முறை கேவலமானது. மேலும், பாடலின் ஒவ்வோர் அடி வரும் பொழுதும் 'ஆண்டவனே அடுத்த அடியாவது சுமாராக இருக்குமா?' என்று எண்ணி ஏமாந்து வேதனைப்பட்டவன் நான்.

நீலமலை
28-10-68 இளவேந்தன் கோபாலன்

ராஜாஜி அவர்கள் இந்திய தேசியக் கொடிக்கும், காங்கிரஸ் கட்சிக் கொடிக்கும் உள்ள உருவ ஒற்றுமை விளைவிக்கும் குழப்பத்தைப் பற்றி அடிக்கடி குறிப்பிட்டு வருகிறார். வியாபாரச் சின்னங்களில் இம்மாதிரி உருவ ஒற்றுமை இருந்தால் மோசடி என்று கருதித் தண்டனை விதிக்கச் சட்டமும் உள்ளது.. ஆகவே அரசாங்கமே இத்தகைய குழப்பத்தை விளைவிக்கும் செயலில் ஈடுபடக் கூடாது. அரசாங்கமோ, காங்கிரஸோ தானாக முன் வந்து இந்த அலங்கோலத்தைச் சீர் செய்யாவிடில், காங்கிரஸல்லாத பார்லிமெண்டரி மெம்பர்கள் இதற்கான நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொண்டு தேசியக் கொடிக்குக் குழப்பமில்லாத நிலையை ஏற்படுத்தவேண்டும்.

பம்பாய்-19
2-11-68 பி. எஸ். சேஷாத்திரி

Printed & published by R. Ananthanarayanan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at Kalki Press, Kilpauk, Madras-10
Managing Editor: T. Sadasivam



"அவள் படிப்பிலும் விளையாட்டுக்களிலும்
ஒரே போல்
கெட்டிக்காரி!"
ஹார்லிக்ஸ் அவளைக் கெட்டிக்காரியாக மாற்றிற்று!
வளரும் குழந்தைகளுக்கு தெம்புடன் திகழத் தேவையான அதிக சக்தியை அளிக்க ஹார்லிக்ஸ் உதவுகிறது. டாக்டர்கள் குழந்தைகளுக்கு ஹார்லிக்ஸ் சிபார்சு செய்கிறார்கள். உங்கள் மகளுக்கும் ஹார்லிக்ஸ் தேவை!
ஆனால், சில நாட்களுக்கு முன் அவளுக்கு ஒரே மந்தம். நான் டாக்டரை விசாரித்தேன்.
டாக்டர் சொன்னார்: "அவளுக்கு தினமும் ஹார்லிக்ஸ் கொடுங்கள்."
ஹார்லிக்ஸ் சாப்பிட்ட பின் அவள் படிப்பிலும் விளையாட்டுக்களிலும் ஒரேபோல் கெட்டிக்காரியாக மாறிவிட்டாள்!
Horlicks
ஆடைச்சத்து நிறைந்த பாலுடன் கோதுமை மாவு மற்றும் மால்டெட் பார்லியின் போஷாக்குச் சத்துக்கள் சேர்ந்தது
ஹார்லிக்ஸ்
அதிக சக்தியை அளிக்கிறது!

REGISTERED No. M. 4392

Registered as a Newspaper in Ceylon

